DUPLICATE COPY XA 87

# அண்ணா போற்றிய அறிஞர்கள்

For Favour of Review
to the Editor.
THE HINDU
"THE HINDU"
EDITOR
28 FEB 1968
No L/1035
KASTURI & SONS LTD.
27 FEB 1968
MADRAS-2.

தொகுத்தவர் :
அ. மறைமலையான்

மனோன்மணி புத்தக நிலையம்
138-A, பவழக்காரத் தெரு .. சென்னை-1.

மனோன்மணி—93.
முதற் பதிப்பு: டிசம்பர்-'67.
பதிப்புரிமையுடையது.

விலை ரூ. 2·50.

அச்சிட்டோர்:
குமரன் அச்சகம், சென்னை - 1.

# முன்னுரை

'உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே!'

—என்கிறது நமது பழந் தமிழ்ப் பாடல் ஒன்று.

சான்ருண்மை மிக்க அறிஞர் பெரு மக்களே உயர்ந்த மனிதர்கள் ஆவார்கள். அவர்களுடைய சிந்தனை வளம், செயல் திறன், நேரிய நெஞ்சம் ஆகியவை அவ்வப்போது செப்பனிட்டுத் தந்த சீரான பாதையிலேயே இந்த உலகம் என்னும் ஆழி தங்கு தடை யின்றி உருண்ட வண்ணம் உள்ளது.

இவ்வாறு, உலகின் அச்சாணியாய் விளங்கும் அறிஞர்கள் யார் ?

அறியாமை இருளை அகற்றிச் சரியான வழியைத் தக்க சமயத்தில் காட்டும் ஒளி விளக்குகளே அறிஞர்கள்!

நம் நாட்டைப் பொறுத்தவரை அத்தகைய ஒளி விளக்குகளுக்குப் பஞ்சமே இருந்ததில்லை.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய திருவள்ளுவர் முதல், இந்த இருபதாம் நூற்ருண்டில் தோன்றிய அறிஞர் அண்ணு வரை எத்தனையோ ஒளி விளக்குகளை உலகுக்கு அளிக்கும் பேற்றினைப் பெற்றுப் பீடுநடை போடுகிறது தமிழகம்.

இன்று, தமிழ் நாட்டின் தலைமகனுய் — வழி காட்டியாய்—முதலமைச்சராய்—அரச கொலு ஏறி யிருக்கும் அறிஞர் அண்ணு அவர்கள், தனித் தன்மை வாய்ந்த அறிவுக் கூர்மை, ஆற்றலின் சீர்மை, பாசச் செழுமை, பண்பாட்டு வளமை ஆகியவை நிரம்பப் பெற்றவர். அவற்றின் வலுவான அடிப்படையினுலேயே உலகப் பெரியார்களின் வரலாற்றிலே தமக்கென்று ஒரு தனி முத்திரை பொறிக்கும் வகையில் தம்மை உருவாக்கிக்

கொண்டு உயர்ந்து கொண்டே செல்கிருர் அவர். நல்லறிவாளர்கள், நடுநிலைமையாளர்கள் யாவரும் ஒப்புக் கொள்ளும் உண்மையே இது.

அவரைப் புகழ்வதன் வாயிலாகத் தங்களுடைய புகழைப் பெருக்கிக் கொள்ளும் பெரியவர்களின் தொகையும் நாளுக்கு நாள் பெருகி வருவதையும் நாம் காண்கிரேும்.

இவ்வாறு பற்பல அறிஞர்கள் ஒரு குறிப்பிட்ட தலைவரைப் பாராட்டிப் பேசும் புகழ் மலர்களை யெல்லாம் தொகுத்து ஒரே மாலையாக — ஒரே நூலாக — வெளியிடுவதுதான் தமிழகத்தில் இதுகாறும் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. அத்தகைய நூல்களாகிய புகழாரம் பூண்டவர்களுள், பெரியார் ஈ. வே. ரா., அறிஞர் அண்ணு, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், சிலம்புச் செல்வர் மா. பொ. சி., கரும வீரர் காமராசர் முதலானேர் குறிப்பிடத் தக்கோர் ஆவர்.

பலரால் பாராட்டப் பெறும் இத்தலைவர்கள், வேறு யார் யாரை, எப்படி எப்படிப் போற்றுகிருர்கள் என்பதை அறிந்து கொள்வதிலும் ஒரு தனிச் சுவை இருக்கும் அல்லவா? அதுவும் அறிஞர் அண்ணு அவர்கள் மற்றவர்களைப் புகழும் அழகோ தனிப் புதுமை வாய்ந்ததாகும்.

அந்தப் புதுமையை மற்றவர்களோடு பகிர்ந்து சுவைக்க வேண்டும் என்னும் எனது வேட்கையின் விளைவே, 'அண்ணு போற்றிய அறிஞர்கள்' — என்னும் இந்நூல்!

*  *

இந்நூலில், பல்வேறு துறைகளைச் சார்ந்த — நெறிகளை வகுத்தளித்த — வழி காட்டிகளையும், அரசியல் அறிஞர்களையும், கலைஞர் பெரு மக்களையும், பொதுப் பணித் தலைவர்களையும் தமக்கே உரித்தான சிந்தனைத்

தெளிவுடன் ஒவ்வொரு கோணத்தில் நின்று அறிஞர் அண்ணா நோக்கும் 'அரிமா நோக்கு' ஆழமானது; நுண்ணியமானது; சிற்பியின் செதுக்கலைப் போன்ற நுட்பம் வாய்ந்தது.

இந்த நூலிலே ஒவ்வொரு பெரு மனிதரிடமும் மேலோங்கி நிற்கும் பண்பு நலனின் சீர்த்தியும்—

அந்தப் பண்பு நலனின் பாங்கினை இனிமை சொட்ட, தனிப்படுத்தி அண்ணா எடுத்துரைக்கும் நேர்த்தியும்—எண்ணி எண்ணி மகிழற்பாலன.

தம்மைப் போற்றுவோர், தூற்றுவோர்—இரு சாரா ரையுமே ஒரே துலாக்கோலில் வைத்து நிறுத்து, அவர் தம் அறிவை, ஆற்றலை, தொண்டை, தூய்மையை உளந் திறந்து புகழ்வதன் மூலம் தாம் ஓர் ஒப்பற்ற உயர் பண் பாளர் என்பதை மெய்ப்பித்துக் காட்டுகிறார் அறிஞர் அண்ணா.

பிற அறிஞர்களுக்குப் பெருமை சேர்க்கும் சிறந்த இயல்புகளை வெளிப்படுத்திக் காட்டும் கண்ணாடியாக மட்டும் இந்நூலில் வரும் சொற்பொழிவுகள் விளங்க வில்லை.

காந்தியடிகள் முதலான வழி காட்டிகளிடம் தாம் வைத்திருக்கும் பெரு மதிப்பு—

மறைமலை யடிகள், திரு. வி. க. முதலான தமிழ்க் காவலர்களிடம் தாம் கொண்டுள்ள பெரும் பற்று —

தம்முடைய ஒரே தலைவரான—பகுத்தறிவுச் சிற்பி பெரியாரிடம் தாம் செலுத்தும் நன்றிப் பெருக்கு —

நாவலர், கலைஞர், மக்கள் திலகம் முதலான தம் கழகத் தோழர்களிடம் தாம் வளர்த்து வரும் பாச வெள்ளம் —

—ஆகிய தம்முடைய இனிய இயல்புகளையும் இந் நூலில் இடம் பெற்றுள்ள ஒவ்வொரு உரையின் வாயி லாக ஓவியமாக ஒளி வீசச் செய்கிறார் அறிஞர் அண்ணா.

அது மட்டுமா ?

மாற்றுக் கட்சியைச் சார்ந்தவர் என்பதற்காகவோ, 1962 - தேர்தலில் தாம் தோற்றுப் போகக் கங்கணங் கட்டிக் கொண்டு வேலை செய்தார்கள் என்பதற்காகவோ திரு. காமராசர் அவர்களிடம் காழ்ப்போ, கசப்போ கொண்டு விடாமல், தம்முடைய சொந்த ஊரில் உள்ள உயர்நிலைப் பள்ளியிலேயே அவருடைய படத்தைத் திறந்து வைத்து அண்ணு சூட்டிய புகழ் மாலையையும் இந்நூலில் காணலாம்.

இவ்வாறு, பயன் தரும் பல்சுவைகளும் மலிந்து பிற அறிஞர்கள் அண்ணுவின் கண்ணேட்டத்தில் எங்ஙனம் பொலிகிருர்கள் என்பதைக் காட்டும் பண்பாட்டு விளக்கமான இந்நூலைத் தமிழ் மக்களுக்குக் காணிக்கை யாக்குகிறேன்.

இன்னும் பல அறிஞர்களைப் பற்றிய அண்ணுவின் பொன்னுரைகளையும் இதில் இணைத்திருக்கலாம். இயலவில்லை.

இந்நூல் சிறப்புற வெளிவர அறிவுரைகள் பல பகர்ந்த மாண்புமிகு பேராசிரியர் திரு. ப. முருகன் எம்.ஏ., அவர்களுக்கும், எழுத்துப் பணியில் என்னை இடை விடாது ஊக்குவிக்கும் நண்பர் திரு. கே. எஸ். லட்சுமணன் அவர்களுக்கும், இதனை அழகிய முறையில் பதிப்பித்து வெளியிடும் மனேன்மணி புத்தக நிலையத்தார்க்கும் என் உளங் கனிந்த நன்றியறிதல் உரியது.

அன்பன்,

அ. மறைமலையான்

# உள்ளே


| | | |
|---|---|---|
| திருவள்ளுவர் | ... | 9 |
| மகாவீரர் | ... | 13 |
| கௌதம புத்தர் | ... | 16 |
| காந்தியடிகள் | ... | 18 |
| பெரியார் ஈ. வே. ரா. | ... | 25 |
| இராசாராம் மோகன்ராய் | ... | 50 |
| சவகர்லால் நேரு | ... | 54 |
| எஸ். இராதாகிருஷ்ணன் | ... | 55 |
| ஜெயப்பிரகாஷ் நாராயணன் | ... | 57 |
| டாக்டர். அம்பேத்கார் | ... | 59 |
| காமராசர் | ... | 63 |
| என். வி. காட்கில் | ... | 69 |
| இசுமெயில் சாகிப் | ... | 71 |
| வி. வி. கிரி | ... | 72 |
| உச்சல் சிங் | ... | 74 |
| பி. டி. இராசன் | ... | 76 |
| மறைமலையடிகள், திரு. வி. க. | ... | 80 |
| ரா. பி. சேதுப்பிள்ளை | ... | 82 |
| கா. அப்பாத்துரையார் | ... | 83 |
| அலமேலு அப்பாத்துரை | ... | 87 |

| | | |
|---|---|---|
| ம. பொ. சிவஞானம் | ... | 88 |
| ப. சீவானந்தம் | ... | 95 |
| எம். ஏ. முத்தையா செட்டியார் | ... | 98 |
| ஆர். வெங்கட்டராமன் | ... | 100 |
| எம். அனந்த நாராயணன் | ... | 105 |
| சி. பா. ஆதித்தனர் | ... | 107 |
| இரா. நெடுஞ்செழியன் | ... | 111 |
| மு. கருணநிதி | ... | 113 |
| காஞ்சி. மணிமொழியார் | ... | 115 |
| என். எஸ். கிருஷ்ணன் | ... | 119 |
| எம். ஜி. ராமச்சந்திரன் | ... | 122 |
| ஆல்பர்ட். டி. பிராங்ளின் | ... | 124 |

# திருவள்ளுவர்

திருவள்ளுவர் நமக்களித்துள்ள திருக்குறள் இப்போது ஒவ்வொருவருடைய நாவிலும் - நெஞ்சிலும்- நினைவிலும் — இடம் பெற்றிருக்கிறது. எல்லாரும் குறளை ஆதரிக்கிறார்கள்; போற்றுகிறார்கள்.

*திருவள்ளுவர் தமிழகத்திற்கு மட்டுமல்லாமல், வையகம் முழுமைக்கும் வாழ்க்கைக்கான நெறியைத் தந்திருக்கிறார். அதனை நாம் உலகத்தின் பொதுச்சொத்து என்று எண்ணத் தக்க விதத்தில் பொதுக் கருத்தைப் பரப்ப வேண்டும்.*

தமிழ் மக்கள் திருக்குறளைப் '**பொது மறை**' — என்றும், இன்றைய தமிழர்கள் பெற்ற '**புது மறை**'— என்றும் போற்றுகிறார்கள் !

இந்த நல்ல கருத்துக் கருவூலத்தை உலகத்தின் கவனத்திற்கு எடுத்து வைக்க நல்ல சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

அடுத்த ஆண்டு (1968) உலகத் தமிழ் மாநாடு சென்னை நகரத்திலே நடைபெற இருக்கிறது.

தமிழ் ·ஆய்ந்த - தமிழ் அறிந்த - நல்லறிஞர்கள் மாநாட்டுக்கெனத் தமிழகத்துக்கு வர இருக்கிறார்கள்.

அப்போது திருக்குறளின் அருமை பெருமைகளை, ஏற்கனவே தமிழறிஞர்கள் அறிந்திருந்தாலும், பத்து நாட்களோ, எட்டு நாட்களோ மாநாடு நடைபெறும்

நாட்களில் அவர்கள் எல்லாரும் கண்டு களிக்கத் தக்க விதத்தில் திருக்குறளின் பெருமையை (உலகு) அறியச் செய்ய வேண்டும்.

திருக்குறளின் - தமிழ் இலக்கியங்களின் - கருத்துக்களை, ஓவியங்களாக-வரி வடிவங்களாக - பாடல்களாக - கூத்தாக - உருவாக்கி வெளிப்படுத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

எனக்குள்ள நீண்ட நாளைய ஆசை சென்னைக் கடற்கரை ஓரத்தில் சிலப்பதிகாரத்தில் சித்திரிக்கப்பட்டுள்ள காவிரிப்பூம்பட்டினக் கடற்கரையைப் போல் சித்திரித்துக் காட்ட வேண்டும் – உருவாக்கிக் காட்ட வேண்டும் என்பது!

(9—6—'67 - சென்னைக் கோட்டையில் திருவள்ளுவர் படத் திறப்பு விழாவில்)

உலக மொழிகள் எல்லாவற்றிலும் திருக்குறளை மொழி பெயர்த்துப் பயன்படுத்துகிறார்கள். நாமெல்லாரும் எதிர்பார்ப்பதை விட (மேலாக) வெளி நாட்டினர் திருக்குறளைப் பயன்படுத்த முனைந்து விட்டனர்.

திருவள்ளுவருக்குக் கிடைக்கும் இந்தச் சிறப்பை நீண்ட காலத்திற்கு முன்பே செய்திருக்க வேண்டும்; தவறி விட்டோம்.

இப்போது சோவியத் நாட்டிலே உள்ளவர்கள் திருக்குறளைப் பயில்கிறார்கள். இங்கிலாந்து நாட்டில் உள்ளவர்கள் பயில்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்பு புதுச்சேரிக்குச் சென்றிருந்த பொழுது பிரஞ்சு மொழியில் மொழி பெயர்த்த திருக்குறள் புத்தகத்தை என்னிடம் தந்தார்கள். அதன் நல்லறிவுக் கருத்துக்கள் நாட்டு மக்கள் அனைவராலும் போற்றப்படுகிறது.

திருவள்ளுவர் விழாதான் நம் வாழ்வு செம்மைப்பட அமையும் விழாவாக அமைய வேண்டும்.

திருவள்ளுவரைப் போலத் தமிழர்களுக்கு நிரம்பப் புலவர்கள் இருந்திருக்கிறார்கள். இளங்கோவின் சிலப்பதிகாரம் நாடு அறியாதது அல்ல. சிலப்பதிகாரத்தில் வரும் கானல்வரிக் கவிதை உலகம் மறந்துவிடக் கூடியது அல்ல. இருந்தாலும், இரண்டு வரிக்குள் வாழ்வுக்குத் தேவையான கருத்துக்களை—எப்படி வாழ வேண்டும் என்ற முறையை வகுத்துக் கொடுத்த பெரியார் வள்ளுவர்தான்!

தமிழ் நாட்டில் இருந்த பெண்பாற் புலவர்களைப் போல் வெளி நாட்டில் எங்கும் நாம் கண்டதில்லை. இருந்தாலும் வள்ளுவரைப் போல (அப்பெண்பாற் புலவர்கள்) சுவடி ஒன்றும் தரவில்லை.

ஆதலால் வள்ளுவர் விழாவினை மற்ற விழாக்களைப் போல் எண்ணாது தமிழர்களுக்கு ஏற்பட்டிருக்கும் அரிய விழாவாகக் கருத வேண்டும்.

இந்தக் குவலயத்திற்கே குறளைத் தந்த தமிழர் சமுதாயம் குறள் நெறியின்படி வாழ்கிறதா என்றால், இல்லை.

*" பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா*
*செய்தொழில் வேற்றுமை யான் "*

—என்று, உயர்வு பிறப்பிலே இல்லை, தான் செய்யும் தொழிலின் சிறப்பிலேதான் இருக்கிறது என்பதைச் சொல்லியும் இந்தச் சமுதாயம் சாதிப் பிடிப்பிலிருந்து இன்னும் தன்னை விடுவித்துக் கொள்ளவில்லை. அது மட்டும் அல்ல; சாதி இருந்தால் என்ன என்று கேட்பவர்களும் இருக்கிறார்கள். ஆகையால், விழா நடக்கும் இந்த நேரத்தில் அவர் சொன்ன கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டுவர உறுதி எடுத்துக் கொள்ள வேண்டும்.

.........இன்றை தினம் செல்வத்திலே – சீரடைவதிலே - கல்வி முன்னேற்றத்திலே – தொழில் துறை

யிலே — மிகவும் பின் தங்கி யுள்ளோம். ஆனால், நம்மிடத்திலே கலைச் செல்வம் வேண்டிய அளவு இருக்கிறது.

தமிழ்ச் செல்வம் யாரும் பெற முடியாத செல்வமாக இருக்கிறது; (நம்முடைய) பண்பாட்டுச் செல்வம் யாருக்கும்—எந்த நாட்டுக்கும் கிட்டாத அளவிற்குக் கிடைத்திருக்கிறது.

ரஷ்யாவோடு நாம் யுத்தக் கருவிகளிலே போட்டியிட முடியாது; விஞ்ஞான வளர்ச்சியிலே போட்டியிட முடியாது. ஆனால், இலக்கியத்திலே போட்டியிட முடியும். அப்படிப்பட்ட இலக்கியச் செல்வம் நம்மிடத்தில் இருக்கிறது. அதில் தலையாய செல்வம் திருக்குறள்.

அந்தக் குறள் வகுப்பறையில் மட்டும் அல்லாமல் — உங்கள் இல்லங்களில் மட்டும் அல்லாமல் — உலகத்தார் உள்ளங்களில் எல்லாம் பரவும் வகை செய்தல் வேண்டும்.

குறளைக் கற்றுக் கொள்வதால் நீங்கள் செம்மைப்பட்டு - நீங்கள் செம்மைப்படுவதால் நாடு செம்மைப்பட்டு — நாடு செம்மைப் படுவதால் உலகு செம்மைப் படச் செய்ய வேண்டும்.

[8-9-'67-இல் சென்னை இராணி மேரி கல்லூரியில் நிகழ்ந்த திருவள்ளுவர் விழாவில்.]

# மகா வீரர்

மகா வீரர் போதித்த தத்துவங்கள் நல்ல மார்க்கங்கள் ஆகும்; நல்ல நெறிகளாகும்.

'ஐம்புலன்களை அடக்கு'

'பொருள்களின் மீது ஆசை வைக்காதே!'

—இந்த உண்மைகளையெல்லாம் உலகில் உள்ளோர் உண்மையிலேயே உணர்ந்து நடந்திருப்பாரேயானால், சண்டை — சச்சரவுகள் ஏற்பட்டிருக்காது; ஐக்கிய நாடுகள் மன்றமும் தேவைப் பட்டிருக்காது

மனித சமுதாயத்தை வழி நடத்தும் மார்க்கங்கள் எல்லாம் நான்கு மாடிக் கட்டிடங்களாக உள்ளன. என்ருலும் இரண்டு மூன்று மாடிகளுக்குத்தான் ஒழுங்கான பாதைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மூன்ருவது மாடியிலிருந்து அடுத்த மாடியைப் பார்த்தால் தொங்குகிற நூல் ஏணியில் ஏறிச் செல்ல வேண்டிய நிலை இருக்கிறது.

சைன மதத்தை அறிந்த அறிஞர்களிடமும் பெரியவர்களிடமும் எனக்கு நெருங்கிய தொடர்பும் பழக்கமும் உண்டு. சைன சமயம் பற்றிப் பல தடவை நாங்கள் விவாதித்திருக்கின்ருேம். அப்போது நான் வருத்தப் பட்டேன்: நெறிகள் சரியில்லை என்பதால் அல்ல; அந்த நெறிகளை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு நாம் வளர்ந்து கொள்ள வில்லையே என்பதுதான் அதற்குக் காரணம். அற நெறிகளுக்கு ஏற்ற வளர்ச்சி இல்லையே

என்ற குறை இருப்பதால் அந்த நெறிகளை யெல்லாம் மறந்துவிட வேண்டும் என்று கூற மாட்டேன்.

...சைன மதத்தைச் சேர்ந்தவர்களும் மருத்துவ மனைகளையும் கல்லூரிகளையும் ஏற்படுத்தி, ஈட்டிய பொருளை நல்ல காரியங்களுக்குப் பயன்படுத்துவதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.

நான் பிறந்த காஞ்சிபுரத்திலும் அதைச் சுற்றிய சிற்றூர்களிலும் சைன மதத்தைச் சேர்ந்த மக்கள் இருக்கின்றார்கள். அவர்களுடன் எனக்குத் தொடர்பும் உண்டு.

இந்த மார்க்கம் (மகா வீரரின் மார்க்கம்)—தமிழர்களுக்கே உரிய மார்க்கம் என்றுகூடத் தமிழாய்ந்த வல்லுநர்கள் சிலர் கூறுகின்றனர்.

ஆகவே, இந்த மார்க்கத்தில் எனக்குத் தொடர்பும் ஈடுபாடும் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகத்திலேயே நம்முடைய நாட்டில்தான் பெரும் பெரும் மகான்கள் - வழி காட்டிகள் - தோன்றி இருக்கின்றார்கள்.

...(இவர்களைப் போன்ற) வழி காட்டிகள் தோன்றாத நாடுகளில் எவ்வளவோ முன்னேறி இருக்கிறார்கள்; வளர்ச்சி அடைந்திருக்கிறார்கள்!

ஆனால், வழி காட்டிகள் இருந்தும் - அவர்கள் வழி நடத்திச் செல்பவர்களாக இருந்தும் நாம் முன்னுக்கு வரவில்லை!

காரணம்: **சொல்பவர்களாக** இருந்தோம்; **செய்யத்** தவறி விட்டோம்!

ஆகவே, இனிமேல் சொல்வதுடன் செய்தும் காட்ட வேண்டும்.

"புத்தர் சொன்னார்; சித்தர் கூறினார்; மகா வீரரும், முகமது நபியும், காந்தி யடிகளும், இராமலிங்க

அடிகளும் சொன்னார்கள் :' – என்றுதான் சொல்கின்றோமே தவிர, அவற்றைச் செய்து காட்டுகின்றோமா ?

'அவர் அப்படிச் சொன்னார் ; - இவர் இப்படிச் சொன்னார்.'

— என்று கூறுகின்றவரை,

'நீ என்ன செய்யப் போகிறாய் ?'

—என்று கேட்டால் விழித்து நிற்போரைத்தான் நாம் பார்க்கின்றோம் ?

ஆகவே, சொல்லுவதோடு மட்டும் நில்லாமல், செய்தும் காட்ட வேண்டும். அப்போதுதான் அந்த நன்னெறிகளை உணர்ந்தவர்கள் ஆவோம் !

மகா வீரர் போன்ற உயர்ந்த மேதைகளை நாம் பின்பற்றிச் செல்ல வேண்டும்.

மகா வீரர், ஆண்ட அரசர்களையும் - அண்டி உயிர் வாழ்ந்த ஆண்டிகளையும், பெரும் பணக்காரர்களையும் - சிரமப்பட்டுப் பிழைத்த ஏழைகளையும், 'உயர்ந்தோர்' - என்று சொல்லிக் கொண்டோரையும் - 'தாழ்ந்தவர்' - என்று கூறப்பட்டோரையும் தமக்குப் பின்னே வழி நடத்திய மாமனிதர். அவர் பின் செல்லவும் அவர் விட்டுச் சென்ற நல்ல காரியங்களை நாமும் கடைப் பிடித்து ஒழுகி அதன்மூலம் நல்ல வாழ்க்கை வாழவும் வேண்டும்.

[—22—4—'67 - இல் சென்னை சைன சங்கம் நடத்திய மகா வீரர் பிறந்த நாள் விழாவில்.]

# கௌதம புத்தர்

அரச பதவியைத் துறந்து மக்களுக்குப் புத்தர் சேவை செய்ததால் அவரைப் பற்றி நினைக்கும் பொழுது நெஞ்சம் நெகிழ்கிறது.

ஆண்டிகள்தான் அரச வாழ்க்கையைப் பற்றி நினைப்பது வழக்கம். ஆனால், புத்தர் அரச வாழ்க்கையில் இருந்து கொண்டு ஆண்டிகளைப் பற்றி நினைத்தார்.

எனக்கு ஏதாவது பொது நிகழ்ச்சிகள் நினைவுக்கு வருமானால் புத்தர் இரவோடு மனைவியையும் பதவியையும் துறந்து வீட்டை விட்டுச் சென்றதும், ஏசுநாதர் தோளில் சிலுவை சுமந்து போனதும்தான் நினைவுக்கு வரும்.

இதை நான் கூறக் காரணம் பலர் எனக்கு மார்க்கத்தில் பற்று இல்லை என்று எண்ணுகிறார்கள். இந்தச் சம்பவங்களில் பற்று வைப்பவன் மார்க்கவாதி என்றால் நானும் மார்க்க வாதிதான்.

சாமி சிலைக்கு ஆயிரக் கணக்கில் ஆபரணங்கள் அணிவிப்பதும் எண்ணெய் கொட்டுவதும் பணத்தைப் பாழாக்குவதும்தான் மார்க்கம் என்றால் நான் மார்க்கவாதி அல்லன்.

தெய்வத்தைப் புகழ்ந்து மனிதனை இகழ்வது என்றால் நான் மார்க்கவாதி அல்லன். ஆனால், மனிதனுக்குச் சேவை செய்து அதில் தெய்வத்தைக் காண்பது என்றால் நான் மார்க்க வாதிதான்!

நமது நாட்டில் பல தூய்மையான உயர்ந்த கருத்துக்கள் உண்டு. ஆனால், அவைகள் ஓடாத கடிகாரமாக இருக்கின்றன!

ஒருபுறம் உயர்ந்த தத்துவங்கள் உண்டு; மறுபுறம் வாழ்க்கையில் வேதனை. இந்த நிலை நீங்க வேண்டும்; அதற்கு அன்புதான் சிறந்த வழி.

ஒரு பயிர் வாடினாலும் உள்ளம் வருந்துவதாக நம் நாட்டில் இராமலிங்க அடிகள் பேசினார். ஆனால், அவர் விழாவுக்குத் தலைமை தாங்கும் பெரிய மனிதர்களோ பசித்தவனுக்கு உணவு கொடுப்பதற்காக அரசாங்கம், கொள் முதல் செய்தால் 'கொடுக்காதே' - என்று தடுக்கிறார்கள்.

[புத்தர் பிறந்த நாள் விழாவில்]

# காந்தி யடிகள்

நான் நெடுங் காலத்துக்கு முன்பே காந்தீயத்தின் நல்ல கொள்கைகளால் ஈர்க்கப் பட்டவன்.

காந்தீயம் எந்த இடத்திற்குச் சொந்தமாக இருந்ததோ, அந்த இடத்தைவிட அது மற்றவர்களின் இடத்தில்தான் பெருமை பெற்றிருக்கிறது.

காந்தீயத்தோடு கங்கிரசைச் சேர்த்துப் பார்ப்பது பொருத்தமானது; எதிர்பார்க்கத் தக்கது. ஆனால், அந்தக் காங்கிரசிலிருந்து மாறுபட்ட எதிர்க் கட்சிகளும் காந்தீயத்துக்கு மரியாதை காட்டுவதுதான் பெருமை உடையது.

ஏனென்றால், காந்தீயம் என்பது இப்போது தத்துவம் ஆகிவிட்டது. அது அரசியதுக்கு அப்பாற்பட்டது.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு, வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வேலூரில் காந்தியார் சிலையை நான் திறக்க வேண்டும் என்று அந்த நகராட்சியினர் தீர்மானம் போட்டனர் அப்போது அந்த நகராட்சி தி. மு. கழகத்திடம் இல்லை.

இராசாசி அவர்கள் அரசாட்சி செலுத்திய காலம் அது. வேறொரு தீர்மானத்தைப் போட்டுச் சில காங்கிரசுக்காரர்கள்,

‘அண்ணாதுரையா காந்தி சிலையைத் திறப்பது? அப்படிச் செய்தால் அமளி நடக்கும்’

—என்று மிரட்டினர்.

ஆனால், வேலூர், நகராட்சி மீண்டும் தீர்மானம் போட்டது.

உடனே ஒரு காங்கிரசுத் தலைவர் இராசாசியைப் பார்த்து,

"இதற்கு அனுமதி அளித்தால் அமளியை ஏற்படுத்துவோம்" என்றார்.

ஆனால், இராசாசி,

"காந்தியாரைக் காங்கிரசார் பாராட்டுவதில் பெருமை இல்லை. எதிர்க்கட்சியினர் பாராட்டுவதில் தான் பெருமை இருக்கிறது. அப்போதுதான் அவர் மகாத்மா?"

—என்றார்.

ஆனால், அந்தக் காங்கிரசுத் தலைவர், "அமளி நடத்தியே தீருவேன்"—என்றார்.

இராசாசி அவர்கள் தமக்கே உரிய பாணியில், "நீங்கள் வேலூருக்குப் போனால்தானே?" என்றார்.

"என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டார் காங்கிரசுத் தலைவர்.

"உங்களை நான் வேலூருக்கு விடப் போவதில்லை. ஐ. ஜி.க்கு (போலீசு இன்ஸ்பெக்டர் - செனரலுக்கு) போன் செய்து (உங்களை) சென்னையிலேயே வைக்கப் போகிறேன்."

—என்றார்,

உடனே அந்தக் காங்கிரசுத் தலைவர் - பதை பதைத்தபடி,

"ஐயோ! அது மட்டும் வேண்டாம்."

—என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்.

அதற்குப் பின்னர் வேலூருக்குச் சென்று நான் காந்தி சிலையைத் திறந்து வைத்தேன்.

இதை, ஏன் கூறுகிறேன் என்றால்,—

காந்தீயத்தை வெளி நாட்டவர்கள் பாராட்டுவதை வரவேற்கும்போது, எதிர்க் கட்சியினர் பாராட்டுவதையும் வரவேற்க வேண்டும் என்பதற்காகத்தான்!

காந்தீயம் ஒரு தத்துவம் ஆகிவிட்ட பிறகு, அதை ஒரு கட்சியுடன் இணைக்காமல் இருந்தால் இன்னும் அதற்கு முழு மதிப்புக் கிடைக்கும்.

நானும் நான் சார்ந்திருக்கிற கட்சியும் அதன் ஆட்சியும் காந்தீய வழிப்படி மக்களுக்கு எது தேவையோ, அவற்றை முடிந்த அளவு நிறைவேற்றுவோம்.

*　　　*　　　*

வேறு நாடுகளிலே விடுதலைப் போர் தொடுத்தவர்கள், இரகசியமாகவோ, பகிரங்கமாகவோ, சொந்தத்திலேயோ, வேறு நாட்டின் துணை கொண்டோ, இராணுவத்தைத் திரட்டுவது, போர்ப் பொருளைக் குவிப்பது, மறைந்திருந்து தாக்குவது, சதி செய்வது—என்ற பல முறைகளைக் கையாண்டனர்.

" தாய் நாட்டின் விடுதலைக்காகவே இவை யாவும். எனவே, சரியா? தவறு ? என்ற கேள்விக்கும் இடம் இல்லை '—என்றார்.

(ஆனால்) உலக வரலாற்றிலேயே முதன் முறையாக இந்தத் திட்டம் வேண்டாம் என்று ஒதுக்கி விட்டுப் புதியதோர் தத்துவத்தைக் கொண்ட திட்டத்தை ஆயுதமின்றி, இரகசிய மின்றி, வெளிப்படையாகத் தூய்மையுடன் விடுதலைப் போர் நடத்தலானார்; அதிலே வெற்றி கண்டார் (காந்தி யடிகள்).

இவ்வளவு பெரிய துணைக் கண்டத்துக்கு விடுதலையை வாங்கித் தந்தவர், நாட்டு மக்களின் ஏழ்மைக் கோலத்தைக் கண்டார்—கருத்திலே அக்காட்சி கலந்தது. அவர், அவர்களில் ஒருவராகவே வாழலானார்.

'எல்லாம் மாயம்,'

'உலகமே இந்திர சாலம்.'

—என்று உபதேசிக்கும் குருமார்கள் தங்கப் பாதக் குறடும், வைரம் இழைத்த குண்டலங்களும் அணிந்து கொண்டிருக்கக் கண்ட மக்கள் முன்பு, எவ்வளவு சுகமும் வசதியும், நினைத்தால் பெறுவதற்கு உரிமையும், வாய்ப்பும் பெற்றிருந்தும் ஏழை வாழ்வை நடத்திய உத்தமர் உலவினர்.

மக்களின் மனம் என்னென்ன எண்ணியிருக்கும் ?

குண்டலம் அணிந்த குருமார்களையும் குறுந்தடி பிடித்து உலவிய உத்தமரையும் ஏக காலத்தில் கண்டபோது, 'கண்டறியாதன கண்டோம்.' என்று களித்தனர்.

...விடுதலை பெற்றுத் தந்ததோடு வேலை முடிந்தது என்று அவர் முடிவு கட்ட வில்லை.

நாட்டை மீட்க வேண்டும்; நல்லாட்சி அமைக்க வேண்டும்; மக்களை நல்லவர்கள் ஆக்க வேண்டும். வீரம் - திறம் - விவேகம் மூன்றையும் விரும்பினர்.

மக்களை நல்லவர்கள் ஆக்க வேண்டும் என்பதே அவருடைய இந்த இலட்சியம்.

நல்ல மனிதர்களால்தான் நல்லாட்சி நடத்த முடியும். நாட்டுக்கு விடுதலையும் கிடைத்து, மக்கள் நல்லவர்கள் ஆகாமல், கொலை பாதகர்கள், கொள்ளைக் காரர்கள், ஆதிக்க வெறியர்கள், ஆள் விழுங்கிகள் ஆஷாட பூதிகள் ஆகியோரின் ஆதிக்கம் அழிந்து படாதிருந்தால் விடுதலையால் என்ன பலன் ?

வேடனிடமிருந்து மீட்டு வந்த புள்ளி மானை வேங்கையின் முன்பு துள்ளி விளையாட விடுவதா ?

இதை எண்ணினர்; நாடு விடுதலை பெற்றதும் நல்லாட்சி அமைக்கும் வழி வகை கூறி அந்தப் பொறுப்பை உடன் இருந்தோரிடம் தந்து மக்களை நல்லவர்கள் ஆக்கும் நற்பணி புரியலானர்.

நல்ல மனிதர்கள் எல்லாரும் திடீர் திடீர் என்று பொல்லாத செயல் புரியக் கிளம்பியது கண்டார். மனம் மிக நொந்தார்.

மனிதனுக்குள் இருக்கும் மிருகம் வெளிப்படக் கண்டு மிகவும் வேதனைப் பட்டார்.

இந்தச் சூழ்நிலையை மாற்றியாக வேண்டும் என்று தீர்மானித்துப் பணி புரியலானார். அந்த அரும் பணி ஆற்றுகையிலேதான் அநியாயமாய்க் கொல்லப் பட்டார்!

நாட்டை மீட்க ஒரு ரணகளச் சூரரையும் நல்லாட்சி அமைக்கும் பல கலைவாணரையும், மக்களை நல்வழிப் படுத்த அறநெறி கூறுவோரையும் நாடியாக வேண்டும். எந்த நாட்டுக்கும் இந்த அனைவரும் ஏக காலத்தில் கிடைக்க மாட்டார்கள்.

ஒரு தலைமுறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான்; மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பார்; பிறிதோர் சமயம் பேரறிஞர் மக்களுக்கு நல்வழி காட்டுவார்.

உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் ஏக காலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத மூன்று தனித்தனித் தலைவர்கள் கொள்ள வேண்டிய குணத்தையும் அவர் ஒருவர் கொண்டிருந்தார். உலகவரலாற்றிலே இதற்கு வேறு ஈடு கிடையாது!

விடுதலை வாங்கித் தந்தவர்கள் உண்டு—போர்த் திறனால்!

நல்லாட்சி நிறுவியவர்கள் உண்டு—அறிவு மேம்பாட்டினால்!

மக்களை நல்லவர்கள் ஆக்கினவர்கள் உண்டு—தூய்மையினால்!

மூன்று அரும் பணிகளையும் ஒரு சேரச் செய்த ஒப்பற்ற சிறப்பு காந்தியார் ஒருவருக்குத்தான் உண்டு.

...இந்து மதத்திலே ஏறிப்போய் ஊறிப் போயிருந்த கேடுகளைத் தமது பரிசுத்த வாழ்க்கையாலும் தூய்மையாலும் உபதேசத்தாலும் புதிய விளக்க உரைகளாலும் நீக்கும் காரியத்தில் ஈடுபடலானார்.

'அன்பு நெறி தழைக்க வேண்டும்.'—என்றார்.

'அவர் அந்த மதம்; இவன் இந்த மதம் - என்று குரோதம் கொள்ளாதீர்கள்.'—என்றார்.

'இது பெரியது; இன்னொன்று தாழ்ந்தது என்று எண்ணாதீர் '—என்றார்.

'தீண்டாமை போக வேண்டும்.' —என்றார்.

அமளிக்கிடையே நின்று படுகொலைகள் நடைபெற்ற இடத்திற் கெல்லாம் சென்று கூறி வந்தார்.

மிக மிக எளிய வாழ்க்கையில் இருந்து கொண்டு, இன்சொல் பேசி எந்த முறையையும் ஐதீகத்தையும் ஒரே அடியாக ஒழித்து விடும் புரட்சித் திட்டமும் கூறாமல் மக்களை நல்லவர்கள் ஆக்கும் அளவுக்குப் பழைய முறைகளிலே உள்ள தூசு தட்டி, மாசு போக்கிப் பயனுடைய - மனித மேம்பாட்டுக்கு உதவக் கூடிய ஏற்பாட்டினைச் செய்ய வேண்டும் என்று பாடுபட லானார்.

'மக்களை நல்லவர்களாக்க வேண்டுமானால் அவர்கள் மனத்திலே உள்ள மாசு, மதவெறி, சாதி ஆணவம், சுயநலம், ஆதிக்க எண்ணம் ஒழிந்தாக வேண்டும்.'

—என்று அவர் பேசி வந்தபோது—

நாட்டை மீட்க வேண்டும் என்று அவர் அந்நியருடன் போரிட்ட போதும் கிளம்பாத பயங்கரச் சக்தியொன்று கிளம்பியது, கோட்சே உருவில்!

தோட்டத்தை மண்மேடு ஆக்கியவனிடமிருந்து மீட்டு, அதைப் பூந்தோட்டம் ஆக்குவதற்காக அழகிய மலர்ச் செடிகளுக்கான விதைகளைத் தூவ அங்குச் சென்றபோது, புதருக்குள்ளிருந்து பாம்பொன்று வந்து கடித்துக் கொல்வது போல், நாட்டை மீட்டு நல்லாட்சி

அமைத்து மக்களை நல்லவர்கள் ஆக்குவதற்காகக் கருத்தைப் பரப்பும் போது கோட்சே கிளம்பினன்!

...மறைந்த உத்தமர் (காந்தி யடிகள்) மத ஆதிக்க வெறியால் கொல்லப் பட்டார். அந்தக் கொடும் பாம்பை ஒழித்தாக வேண்டும்.

அவர், அனைவரும் ஒன்று என்னும் அன்பு மார்க்கக் கருத்தைத் தூவி வந்தார். அதை நாம் செய்து முடிப்போம் என்பதே நமது உறுதியாக இருக்க வேண்டும்.

'புத்தர் காலத்திலே நடந்தேறியது போலப் புதிய வழியைக் கொள்வோம்' என்ற உறுதி கொண்டு உழைப்பதே நாம் அந்த உத்தமருக்கு எழுப்பக்கூடிய நிலையான ஞாபகச் சின்னம்!

# பெரியார் ஈ. வே. ரா.

எனக்கு அவரோடு - பெரியாரோடு - தொடர்பு ஏற்பட்டது 1935 ஆம் ஆண்டில்தான். அப்போது நான் பி. ஏ. (ஆனர்சு) தேர்வு எழுதி யிருந்தேன். தேர்வு முடிவு தெரியாத நேரம் அது.

அப்போது கோவைக்கு அடுத்த திருப்பூரில் ஒரு வாலிபர் மாநாடு நடந்தது. அங்குத்தான் பெரியாரும் நானும் முதன் முதலில் சந்தித்தது; எனக்குப் பற்றும் பாசமும் ஏற்பட்டன. அவருடைய சீர்திருத்தக் கருத்துக்கள் எனக்குப் பெரிதும் பிடித்தன.

பெரியார், என்னைப் பார்த்து,

"என்ன செய்கிறாய்?"

—என்று கேட்டார்.

"படிக்கிறேன்; பரீட்சை எழுதியிருக்கிறேன்."

—என்றேன்.

"உத்தியோகம் பார்க்கப் போகிறாயா?"

—என்றார்.

"இல்லை, உத்தியோகம் பார்க்க விருப்பம் இல்லை; பொது வாழ்வில் ஈடுபட விருப்பம்."

—என்று பதிலளித்தேன்.

அன்று முதல் அவர் என் தலைவர் ஆனார். நான் அவருக்குச் 'சுவீகாரப் புத்திரனாக' —(வளர்ப்பு வழித் தோன்றலாக) - ஆகிவிட்டேன்!

பொது வாழ்வில் அன்றிலிருந்து இன்று வரை (அவருக்குச்) சுவீகாரப் பிள்ளைதான் நான்!......

14 - ஆண்டுகள் அவரோடு பழகினேன்.

இத்தனை ஆண்டுகளிலும் நான் அறிந்த தலைவர் - தெரிந்த தலைவர் - பார்த்த தலைவர் -இவர் ஒருவர்தான். வேறு தலைவரின் தலைமையில் நான் வேலை செய்தது கிடையாது; செய்யவும் மனம் வந்ததில்லை; வராது!

அதே காரணத்தினுல்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குக் கூடத் தலைவரை ஏற்படுத்த வில்லை; அவசியம் என்று கருதவில்லை.

இதய பூர்வமான தலைவர் - இதயத்திலே குடியேறிய தலைவர் - நமக்கெல்லாம் வழி காட்டிய பெரியார்! அவர் அமர்ந்த பீடத்தை - தலைவர் பதவியை - நாற்காலியைக் காலியாகவே வைத்திருக்கிறோம். அந்தப் பீடத்திலே - நாற்காலியிலே - வேறு ஆட்களை அமர்த்தவோ, அல்லது நாங்களோ அல்லது நானே அமரவோ விரும்ப வில்லை!

[—: 17—9—'49 - தி. மு. க. துவக்க விழாவில்.]

* * *

நாம் அவரை அரசியல் தலைவராக மட்டும் கொண்டிருக்க வில்லை.

இயக்கத்தைச் சார்ந்த ஒவ்வொருவரும் அவரைத் தங்கள் குடும்பத் தலைவரென - வாழ்க்கைக்கு வழி காட்டியென - ஏற்றுக் கொண்டு, எந்த இயக்கமும் அதன் தலைவரிடம் காட்டாத அளவு மரியாதை உணர்ச்சியை - அன்பைக் - காட்டி வந்திருக்கிறோம்.

நமது கண்களுக்கு,

அவர் நமது மானத்தை மீட்டுத் தந்த மகானுக —

நம்மைப் பன்னெடுங் காலமாகக் கொடுமைப் படுத்தி வரும் அடிமைத் தளையிலிருந்து மீட்கப் போர் புரியும் மாவீரராக—

காட்சி தந்து வந்திருக்கிறார் !

அவர் கண்ணோட்டம் நமக்குக் களிப்பூட்டி வந்தது !

அவர் சொல் நமக்குச் சட்டமாக இருந்து வந்திருக்கிறது !

அவர் வகுக்கும் பாதை நமக்கு விடுதலை வழியாகத் தெரிந்திருக்கிறது !

அவரை நாம் பின் பற்றி வந்தது ஏறத் தாழ 'பக்தர்கள் அவதார புருசர்களை'ப் பின் பற்றி வந்தது போலத்தான் !

இதற்குக் காரணம், நாம் மற்ற எந்தத் தலைவரையும் விட இவரிடம் தனிப்பட்ட தன்மை, பண்பு இருக்கின்றன என உளமார எண்ணியதால்தான் !

வயது ஏற ஏற வாழ்க்கையைப் பற்றி, குடும்பத்தைப் பற்றி, சொத்து சுகத்தைப் பற்றிக் கவலைப்படாமல் துறவி போல் இரவு-பகல் என்று பாராமல் அலைந்து திரிந்து அரும் பாடு பட்டு நாம் வாழ, அவர் வாட்டத்தையும் பாடுகளையும் தாங்கிக் கொள்கிறார் என்று தெரிந்திருந்ததால்தான் நாம்,

'அவர், பெரியார் என்னும் பண்புப் பெயருக்கு முற்றிலும் உரியவர் ; இவர் போன்றார் வேறு யாரும் இல்லை.'

—என்று இறும்பூது எய்தி வந்தோம்.

அவர் நமக்கு மற்றவர்கள் சொல்லாதவை எல்லாம் சொன்னார். மற்றவர் யாரும் விளக்காததை யெல்லாம் விளக்கினார். நம்மை நாம் உணரவும் நமது மானத்தை நாம் காப்பாற்றிக் கொள்ளவும் திட்டமிட்டுக் காட்டினார்.

அரசியலைப் பற்றியல்ல அவர் பேசி வந்தது ;— வாழ்க்கையைப் பற்றி - வாழ்க்கைச் சிக்கலை நீக்குவது

பற்றி - வாழ்க்கையிலே புதிய மாற்றங்கள் ஏற்படுத்து வதற்கான வழிகளைப் பற்றி - எடுத்துரைத்து வந்தார்.

'தபோதனர்களும், அருள் பெற்றவர்களும் கூறிய தாகச் சொல்லப்படும் கோட்பாடுகள் நமது வாழ்க் கையை மனிதத் தன்மைக்கு மாருனதாக 'ஆக்கி விட் டன'—என்பதை எடுத்துக் காட்டி,

"அந்தக் கட்டளைகளை மீறுங்கள் ; வாழ்க்கைக்குப் புதிய - ஆனல், புனிதமான இலட்சியத்தை அமைத்துக் கொள்ளுங்கள் !"

—என்று வீர உரை யாற்றினர்.

வாழ்க்கைப் பிரச்சினையிலே அவர் மிகச் சிறப்பாக வும் மிகத் தெளிவாகவும் எடுத்துப் பேசி வந்த பகுதி திருமணத்தைப் பற்றியது. திருமண முறையிலே உள்ள மூடப் பழக்க வழக்கங்களை முறியடிக்கவும், பெண் களைக் கருவியாக்கும் கயமைத் தனத்தை ஒழிக்கவும், ஆண்களின் கொடுமையை அடக்கவும் அவர் ஆற்றியது போல் வேறு எந்தத் தலைவரும் உரை யாற்றினதில்லை.

[—1949 - ஜூலையில் வெளியான அறிக்கையிலிருந்து]

* * *

ஒரு பெரிய குடும்பத் தலைவர் தமது இல்லத்தில் நடைபெறும் விழா நிகழ்ச்சியின் போது அமர்ந்து ஆனந் தப்பட்டுக் கொண்டிருப்பார்.

'அதோ! அவன் என் மூத்த மகன்! டாக்டர் இவன் இரண்டாவது பையன் ; வக்கீல். அவன் மூன்ரு வது பையன் ; இஞ்சினீயர்.'

—என்று அவர்கள் ஓடி ஆடி வேலை செய்யும் போது பக்கத்தில் இருப்பவரிடம் கூறிப் பூரிப்பார். அதே போலத்தான் பெரியார் அவர்களும் இங்கே (பொது

வுடைமைத் தலைவர் - அமரர் ப. சீவானந்தம் அவர்களின் புதல்வி உஷா தேவியின் திருமண விழாவில்) - பூரித்த நிலையிலே இருக்கிறார்கள்.

இந்த மண விழாவிலே பல்வேறு கட்சித் தலைவர்களும் தொண்டர்களும் ஓடி ஆடி வேலை செய்வதைப் பார்த்து,

'எல்லாரும் என் மக்கள்தான்; என்னாலே பயிற்சி அளிக்கப்பட்டவர்கள்தான்.'—என்று பெரியார் பெருமைப்படுவார்.

இந்தப் பெருமை உலகில் வேறு எந்தத் தலைவருக்கும் கிடைத்ததில்லை.

பெரியார் அவர்கள் தமிழ் போல் என்றும் இளமையோடு இருந்து எந்தக் குழந்தையும் தப்பிப் போகாமல்—அவர்கள் எந்தக் கட்சியில், எந்தத் துறையில் இருந்தாலும், அவர்கள் சார்ந்திருக்கின்ற கட்சிக்கு மெய்யாகத் தொண்டாற்றும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்; பார்த்துக் கொள்வார்.

*என் பொது வாழ்வில் நான் ஏற்றுக்*
*கொண்ட ஒரே தலைவர் பெரியார்!*

நான் அவரை விட்டுப் பிரிந்து சென்ற போது ஒன்றைக் குறிப்பிட்டேன். நான் புதிய தலைவரைத் தேடி, அய்யா அவர்களிடமிருந்து பிரிந்து செல்லவில்லை என்று குறிப்பிட்டேன். அதே நிலையில்தான் இன்றும் இருக்கிறேன்.

...பெரியார் அவர்களுடன் (நான்) அரித்துவாரத்துக்குச் சென்றது—நினைவுக்கு வந்தது.

மாலை நேரங்களில் பெரியார் கங்கை நதி தீரத்தில் உலவச் செல்வார். வெண் தாடி பளபளக்க, மஞ்சள் நிறச் சால்வையைப் போர்த்திக் கொண்டு பெரியார் முன்னே செல்வார். அவர் எனக்குக் கம்பளிக் கோட்டு வாங்கித் தராததால் குளிர் தாங்காமல் நான்

கைகளை இறுகக் கட்டிக் கொண்டு அவர் பின்னாலேயே போவேன்.

இந்தக் காட்சியைப் பார்த்தவர்கள் பெரியார் அவர்களைப் 'பெரிய சாமியார்' என்றும், என்னைச் 'சின்னச் சாமியார்' என்றும் கருதிவிட்டார்கள் !

பலர் பெரியார் காலில் விழுந்து கும்பிட்டார்கள். பெரிய சாமியாருக்கு இருக்கின்ற சக்தியில் சீடருக்குக் கொஞ்சமாவது இருக்காதா என்று கருதி என் காலிலும் பலர் விழுந்து கும்பிட்டார்கள் !

இங்கே நாங்கள் வேறுவிதமாகக் கருதப்பட்டாலும் அரித்துவாரத்தில் இருந்தவர்கள்—(வட நாட்டார்)—எங்களைச் சாமியார்களாகவே கருதி விட்டார்கள் !

...நெடுந்தொலைவு போன மகன் திரும்பத் தந்தையைப் பார்க்க வரும்போது கையில் கிடைத்ததை வாங்கி வந்து தருவான். அதே போல, இன்று பெரியாரைப் பார்க்க வந்திருக்கின்ற நானும் ஓர் அன்புப் பரிசை—கனியை—ஏதோ என்னால் இயன்றதைக்—கொண்டு வந்திருக்கிறேன்.

சுயமரியாதை இயக்கத் திருமணங்களை நடத்திச் சாதி ஒழிப்புக்காகப் பெரியார் பாடுபட்டு வருகிறார். பகுத்தறிவுத் திருமணங்களும், கலப்புத் திருமணங்களும் நாட்டில் ஏராளமாக நடைபெற்றிருக்கின்றன.

இந்தத் திருமணங்களைச் செல்லுபடியாக்கச் சுயமரியாதைத் திருமணச் சட்டம் கொண்டு வரப்போகிறோம் என்ற நல்ல செய்தியை—அன்புப் பரிசை—கனியைப்—பெரியாரிடம் அளிக்கிறேன் !

[7—6—'67இல் திருச்சி,பெரியார் மாளிகையில் நிகழ்ந்த திரு. ப. சீவானந்தம் அவர்களின் புதல்வியின் திருமண விழாவில்]

குறிப்பு — [முதலமைச்சர்-அறிஞர் அண்ணா, சுயமரியாதைத் திருமணங்களைச் செல்லுபடியாக்

கச் சட்டம் கொண்டு வரப்படும் என்று அறிவித்ததும், திருமண விழாவில் பலத்த கையொலி எழும்பிற்று. அளவற்ற பூரிப்புடன் குலுங்கக் குலுங்கச் சிரித்துக் கொண்டு பெரியாரும் கைதட்டினர். அந்தச் சட்டத்தை 'அண்ணுதுரையின் அருள்வாக்கு!' என்றும் பாராட்டினர்.]

* * *

...(திருச்சி மருத்துவ மனையில்) குழந்தைகளுக்கான தனிப்பகுதியினை ஏற்படுத்துவதற்குப் பெரியார் அவர்கள் ஒரு இலட்ச ரூபாய் அன்பளிப்புத் தந்ததானது நாம் எண்ணி எண்ணி மகிழத் தக்கதாகும்.

தந்தை பெரியார் அவர்கள் கொடுத்த ஒரு இலட்சமானது மற்றவர்கள் கொடுக்கும் ஒன்பது இலட்சத்திற்குச் சமமானதாகும். இது தமிழக வரலாற்றில் பாராட்டி எழுதத் தக்கதாகும்.

பெரும் செல்வவான்கள் தாங்கள் ஏதாவது செய்ய வேண்டுமே என்பதற்காகத் தங்களுக்குப் புகழ் வேண்டும் என்பதற்காக ஏதாவது தருமங்கள் செய்வார்கள். ஆனல், பெரியார் அவர்கள் எது தேவை—தக்கது— என்பதை உணர்ந்து இதைச் செய்திருக்கிறர்கள். அதனையும் தமது துணைவி ஈ. வே. ரா. மணியம்மையின் பெயரில் ஏற்பாடு செய்திருப்பது சிறப்பானதாகும்.

என்னிடம் இதற்குரிய நன்கொடையான ஒரு இலட்சம் ரூபாய் காசோலையைக் கொண்டு வந்து கொடுத்த போது அதைப் பார்த்து நான் ஆச்சரியப்பட்டேன். நாங்கள் ஆட்சியிலிருக்கும் போது இது கிடைத்தது பெரும் பேறு ஆகவே கருதுகின்றேன்.

தாங்கள் ஆட்சியில் இருக்கும்போது கொடுத்த தானது "எங்கள் நல்லெண்ணமும் வாழ்த்துக்களும் இவ்வாட்சிக்கு உண்டு."—என்பதைக் காட்டுவதாகும்.

இதற்கு (குழந்தைகள் வார்டு கட்டுவதற்கு) இன்னும் பணம் தேவை என்று குறிப்பிட்டார்கள். அதுவும் பெரியார் மூலமே கிடைக்க வேண்டும் என்று பொறியியலார் கூறினார்கள். பெரியார் பெயரை வைத்துக் கொண்டு என்னால் பத்து லட்சம் ரூபாய் கூடத் திரட்ட முடியும். ஆனால், நான் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதால் இந்தக் காரியத்தைச் செய்ய முடியாமல் இருக்கின்றேன். பெரியார் அவர்களின் தொண்டின் அருமை பெருமைகளை உணர்ந்தவர்கள் நிறைய நன்கொடை தரவேண்டும்.

நான் பெரியாருடன் இருந்தவரை அவர் வாங்கித் தான் பார்த்திருக்கிறேன்; இப்போது கொடுப்பதைப் பார்க்கிறேன்!

நமது சமூகத்தில் உள்ள குறைபாடுகளை உணர்ந்து அதைப் போக்குவதற்கான நேரம்—தரம்—தகுதி—முறை—அறிந்து பெரியார் அவர்கள் (இந்த நன்கொடையைக்) கொடுத்திருக்கிறார்கள்.

அவர்கள் இங்கு (திருச்சி) கல்லூரிக்காக ரூ. 5 இலட்சம் கொடுத்து அவரது பெயரால் கல்லூரி ஒன்று நடந்து வருகிறது. ஆசிரியர் பயிற்சிப் பள்ளி நடந்து வருகிறது. இப்போது மருத்துவ விடுதிக்குத் தாராளமாக வழங்கியுள்ளார்கள்.

பழங்காலத்தில் இதைத் 'தருமம்' என்று சொல்வார்கள்! இந்தப் பக்கம் தருமம் செய்து விட்டு அந்தப் பக்கம் என்ன வருகிறது என்று பார்ப்பார்கள்!

பெரியார் அவர்கள் தமக்குப் புகழ் வேண்டும் என் பதற்காக இதனைச் செய்யவில்லை.

*அவரது (பெரியாரது) புகழின் சிதறல்கள் தான் இன்று தமிழகத்தின் பல்வேறு அரசியல் கட்சிகளாகக் காட்சியளிக்கின்றன !*

நமது நாட்டில் உள்ள ஏழ்மை, அதன் தொடர்பாக ஏற்பட்ட அறியாமை, அதன் காரணமாக ஏற்படும் நோய், நொடிகள்—இவைகள் ஒழிய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு அளிக்கப்பட்டதே இந்த நன் கொடையாகும்.

இந்த வார்டு கட்டுவதற்கான நன்கொடையை என்னிடம் கொடுத்ததும் எனக்கொரு ஐயப்பாடு ஏற் பட்டது, 'அய்யா அவர்கள் எல்லாவற்றையும் திருச்சியி லேயே செய்கிறார்களே !'—என்று.

அவர் தமது பிறந்த ஊரைப்பற்றி எண்ணியிருந் தால் (நன்கொடையை) ஈரோட்டிற்குக் கொடுத்திருக்க வேண்டும் ; தமது **பிரதம சீடனை என்னை** நினைத்திருந் தால் காஞ்சியிலே அமைக்கக் கொடுத்திருக்க வேண்டும். தமது துணைவியாரை நினைத்திருந்தால் வேலூரில் கட்டு வதற்குக் கொடுத்திருக்க வேண்டும். இதையெல்லாம் விட்டு விட்டுத் திருச்சிக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

எங்கள் யாருக்கும் கிடைக்காத இந்த வாய்ப்பு திருச்சி மக்களுக்குக் கிடைத்திருக்கிறது. இது திருச்சி யின் தனிச் சிறப்பைக் காட்டுகிறது.

[9—8—'67 இல் திருச்சி, மாவட்ட மருத் துவ மனையில், 'திருமதி பெரியார். ஈ. வே. ரா.—மணியம்மை குழந்தைகள் விடுதி'—க்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை.]

பெரியார் அவர்களே! பெரியோர்களே! தாய்மார்களே! நண்பர்களே! நம்முடைய தனிப் பெரும் தலைவர் பெரியார் அவர்களுடைய 89-வது பிறந்த நாள் விழாவில் நான் கலந்து கொள்வதற்கான வாய்ப்புக் கிடைத்தது பற்றி உள்ளபடியே மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். நான் முதலமைச்சரான பிறகு எனக்கு ஏதாகிலும் ஒரு பெரிய மகிழ்ச்சி ஏற்பட்டிருக்குமானால் இந்த விழாவிலே நான் கலந்து கொள்வதுதான் மிகப் பெரிய மகிழ்ச்சியைத் தருவதாகும் ஆனால், உங்களிலே பலருக்கு இது புதுமையானதாகத் தெரியும். என்னைப் பொறுத்த வரையில் இடையில் சில நாள் இல்லாமல் இருந்த பழைய நிகழ்ச்சி தானே தவிர இது புதிதல்ல என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பெரியார் அவர்களுடைய 89-வது பிறந்த நாள் விழாவானது இன்றைய தினம் தமிழகத்திலுள்ள எல்லாப் பண்பாளர்களாலும் கொண்டாடப்பட்டு வருவது இயற்கையானது.

கட்சிக்கு அப்பாற்பட்ட நிகழ்ச்சியாக எல்லாக் கட்சியிலுள்ள பண்பாளர்களும் வரவேற்கத் தக்கதாகத் தமிழகமக்கள் நல்வாழ்வில் அக்கறை உள்ளவர்கள் போற்றத்தக்க நிகழச்சியாக, இந்த மாபெரும் நிகழ்ச்சி அமைந்திருக்கிறது. இங்கே வந்திருக்கிற பல்லாயிரக் கணக்கான மக்கள் கிட்டதட்ட ஒரு லட்சம் மக்கள் இருக்குமென்று நினைக்கிறேன். அவர்கள் அனைவரும் இந்த மாபெரும் கூட்டத்தில் அமைதியாக இருந்தால் தான் இந்த விழாவுக்குத் தனிச் சிறப்புத்தேடிக் கொடுத்தவர்க ளாவீர்கள்.

பெரியார் அவர்கள் இன்று 89-வது வயதில் அடியெடுத்து வைக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்கிற நேரத்தில் அவர்கள் நமக்கு இதுவரையில் ஆற்றியிருக்கிற தொண்டிற்கு அவர்களால் தமிழகம் பெற்றிருக்கிற நல்ல வளர்ச்சிக்கு—பெயருக்கு, அவர்களுக்கு,

நாம் நம்முடைய மரியாதையை, அன்பை, இதயத்தைக் காணிக்கையாக்குவதற்காக இங்கே கூடியிருக்கிறோம். பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்ளும் நேரத்தில் இங்கே நடந்த ஊர்வலமும், விழாவும், வேடிக்கையும் பெரியார் அவர்களுக்கு நம்முடைய வணக்கத்தைத் தெரிவிப்பதற்காகத்தான் என்று எண்ணுவது நம்முடைய கடமையாகும்.

தமிழகத்திற்கும், தமிழ் நாட்டு மக்களின் நல்வாழ்விற்கும், இன்னும் உலகத்திற்கேகூட என்றும் சொல்லலாம். அவர்கள் செய்திருக்கிற அரிய பெரிய காரியங்கள், ஆற்றியிருக்கிற அருந் தொண்டுகள், ஏற்படுத்தியிருக்கிற புரட்சி உணர்ச்சிகள், ஓட விட்டிருக்கிற அறிவுப் புனல் தமிழகம் என்றுமே கண்டதில்லை. இதற்குப் பிறகும் இப்படிப்பட்ட மாபெரும் புரட்சி வேகத்தை நாம் பார்க்கப் போவதில்லை. அப்படிப்பட்ட வரலாற்றில் பொறிக்கத் தக்க புதிய வரலாறு என்று கருதும் நிலைமையை அவர்கள் தம்முடைய பொதுத் தொண்டின் மூலம் நமக்கு அளித்திருக்கிறார்கள்.

பிறந்த நாள் கொண்டாடுகிற நேரத்தில் என்னுடைய நினைவுகள், திராவிட கழகமாகவும் அதற்கு முன்னால் தமிழர் இயக்கமாகவும், சுயமரியாதை இயக்கமாகவும் இருந்த நேரங்களில் அவர்களோடு இணைந்திருந்து பணியாற்றிய பல எண்ண அலைகளை நெஞ்சில் ஓடவிட்டுக் கொண்டிருக்கின்றன. எத்தனை இரவுகள், எத்தனை பகல்கள், எத்தனை காடு மேடுகள், எத்தனை சிற்றூறுகள், எத்தனை பேராறுகள், எத்தனை மாநாடுகள் என்று எண்ணிப் பார்க்கிற நேரத்தில் ஒரு போர் வீரன் களத்தில் புகுந்து இந்தப் படையை முறியடித்தேன், அந்தப் படையை வென்றேன் என்று காட்டி மேலும் மேலும் செல்வதைப் போல அவர்கள் வாழ்நாள் முழுவதும் களத்தில் நிற்கிற ஒரு மாபெரும் போராட்டமாகும்.

முதல் போராட்டம் அவர்கள் உள்ளத்தில் தோன்றி யிருக்க வேண்டும். செல்வக் குடியில் பிறந்தவர் அவர்! தம்முடைய செல்வத்தை, செல்வாக்கைக் கொண்டு ஊரை அடக்கிப், போக போக்கியத்தில் மிதந்து மகிழ்ந் திருக்கலாம். அப்போதிருந்தவர்கள் பலரும் கூட அப்படிப்பட்ட வாழ்க்கையில் இருந்தார்கள். அப்படிப் பட்ட வாழ்க்கையிலிருந்து தம்மைத் தனியாக்கிக் கொண்டு—தம்மைப் பிரித்துக்கொண்டு என்னுடைய செல்வம் எனக்கில்லை; என்னுடைய செல்வத்தைக் கொண்டு போக போக்கியத்தில் திளைக்கப் போவதில்லை. பொது வாழ்க்கையில் ஈடுபடப் போகிறேன் என்று எண் ணிய நேரத்தில் அவர்களுக்கிருந்த செல்வமும், அவரு டைய குடும்பத்திலிருக்கின்ற செல்வாக்கும், அதனால் அடையக்கூடிய சுக போகங்களும் அவர்கள் மனத்தில் ஒரு கணம் நிழலாடி யிருக்கவேண்டும். அப்போது உள்ளத்தில் நிச்சயமாக ஒரு போராட்டம் எழுந்திருக்க வேண்டும். செல்வத்தில் புரளலாமா, அல்லது வறு மையில், அறியாமையில் முழுகிக் கிடக்கும் தமிழ்ச் சமுதா யத்தின் முன்னேற்றத்திற்கு என்னை நான் ஒப்படைப் பதா? என்ற போராட்டத்தில், தொண்டு உள்ளத்தில் வெற்றி யடைந்தார். செல்வத்திற்காக அல்ல நான். சுக போகத்திற்காக அல்ல நான். என்னிடத்தில் உள்ள அறிவு, உழைப்புத் திறன் என்னிடத்தில் அமைந்திருக்கிற பகுத்தறிவு யாவும் தமிழக மக்களுக்குத் தேவை; தமிழகத்திற்கு மட்டுமல்ல; முடிந்தால் இந்தியா முழுவதற்கும் தேவை; வசதிப்பட்டால் உலகிற்கே தேவை. (கை தட்டல்). வீட்டை மறப்பேன்; செல் வத்தை மறப்பேன். செல்வம் தரும் சுக போகங்களை மறப்பேன் என்று துணிந்து நின்று அந்தப் போராட் டத்தில் முதன் முதலில் வெற்றி பெற்றார்.

இதில் பிரமாதம் என்ன இருக்கிறது என்று எண்ணக்கூடும். செல்வம் இல்லாதவர்கள், செல்வம் உள்ளவர்கள் அவற்றை விட்டு விட்டு வெளியே வருவது ஒரு புறம். இருந்தாலும், ஒருவர் கையில் ஒரு பலாப் பழத்தைக் கொடுத்து ஒரு மணி நேரம் அதை உற்றுப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என்ருல் வைத்திருப்பவர் வாயில் நீர் ஊறும். நேரம் செல்லச் செல்லப் பலாச் சுளையில் மொய்த்துக் கொண்டிருக்கிற ஈயோடு சேர்த்துச் சாப்பிட்டு விடுவார்களே தவிரப் பார்த்துக் கொண்டே இருக்க மாட்டார்கள்.

பெரியார் அவர்கள் குடும்பத்தின் நிலை எப்படிப் பட்டது? எந்தப் பக்கம் திரும்பினுலும் குடும்பச் செல்வாக்கு; எந்தப் பக்கத்திலே திரும்பிப் பார்த்தாலும் வாணிபத்தில் ஆதாயம்; நிலபுலன்கள், வீடு வாசல்கள் இவைகள் எல்லாவற்றையும் பார்த்து இவைகள் எனக்கு தேவையில்லை என்ருர். என் நாட்டு மக்களுக்கு-அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் நாட்டு மக்களுக்கு நல்லது கெட்டது ஆராய்ந்து பார்க்கும் பக்குவம் அற்றுப் போயிருக்கும் மக்களுக்கு வேறு ஒரு செல்வத்தைத் தருவேன். அறிவுச் செல்வத்தைத் தரப் போகிறேன். சிந்தனைச் செல்வத்தைத் தரப் போகிறேன், பகுத்தறிவுச் செல்வத்தைத் தரப் போகிறேன். அவற்றை ஏற்று நடக்கத் தக்க துணிவைத் தரப் போகிறேன், அதைத் தடுப்பார் எவரேனும் குறுக்கிடுவார்களாஞல் அவர்களுடைய ஆற்றலை முறியடிப்பேன்.

இதுதான் என்னுடைய வாழ்க்கையின் குறிக்கோள் என்று அவர்கள் கிளம்பினுர்கள். அதுதான் வாழ்க்கையின் முதல் போராட்டத்தில் அவர் பெற்ற வெற்றி.

அதற்கு பிறகு அவர்கள் சந்தித்த ஒவ்வொரு களத்திலேயும் வெற்றிதான் கிடைத்திருக்கிறது. அந்த வெற்றிகள் எல்லாம் நாம் எடுத்துக் கொண்டிருக்கிற

காரியங்களுக்குப் போதுமானதாக அமையவில்லை என்று செட்டிநாட்டரசர் அவர்கள் சொன்னார்கள். ஒப்புக் கொள்கிறேன். அந்தப் போராட்டத்துக்கான இன்றைய தினம் சூழ்நிலை என்ன? எந்த நிலைமையில் மொழிப் பிரச்சினை வந்திருக்கிறது என்று பார்க்க வேண்டும். 1934-35-193-6ம் ஆண்டுகளில் இந்தியை அவர்கள் ஆட்சி மொழி என்று அல்ல, இணைப்பு மொழி என்று அல்ல, தேசிய மொழி என்று அழைத்தார்கள். இந்தத் தேசத்திற்கென்று ஒரு மொழி உண்டு. அதுதான் இந்தி; இந்தத் தேசத்திற்கு இருக்கத்தக்க தேசிய மொழி இந்திதான் என்று 1935ல் அவர்கள் சொன்னார்கள். பெரியார் அவர்களின் போர் முறையின் தன்மை உங்களிலே பலருக்கு நன்றாகத் தெரிந்திருக்கும் என்று கருதுகிறேன்; அவர்கள் எதிரில் உள்ள படையை மட்டுமல்ல, முதலிலே அப்படைக்கு எங்கே மூலபலம் இருக்கிறது என்று கண்டு பிடித்து அந்த மூலபலத்தைத் தாக்குவதுதான் அவருடைய போர் முறையாகும்.

ஆகையினால் இந்தியாவின் தேசிய மொழி இந்திதான் என்று சொன்னவுடன் தேசியம் என்பது மகா புரட்டு, இந்தியா என்கிறீர்களே இந்தியா என்பது மிகப் பெரிய கற்பனை என்று கூறி அவை இரண்டையும் உடைத்து எறிவதுதான் என்னுடைய வேலை என்று கிளம்பினார்கள். அப்படி இந்தியைக் கொண்டு வந்தவர்கள் இந்தியைக் காப்பாற்றிக் கொள்ளக் கருதித் தேசியத்தையும் இந்தியாவையும் உடைத்து விடக் கூடாது என்று தேசியம் என்று சொல்லியதை மாற்றிக் கொண்டு இந்தியாவில் தேசிய மொழிகள் பதினன்கு இருக்கின்றன; அதில் ஒன்றுதான் இந்தி. ஆனால், இந்தி பெரும்பாலானவர்கள் பேசுவதால் இந்தியாவின் ஆட்சி மொழியாக இருக்க வேண்டுமென்று சொன்

ஞர்கள் அப்போது பெரியார் ஆட்சி மொழி என்பது பின்னல் இருக்கட்டும், உங்களுடைய ஆட்சியின் லட்சணம் என்ன? யார், யாரை ஆள வேண்டும். எதற்காக ஆள வேண்டும், என்று ஆட்சி முறையை பற்றி அவர்கள் தாக்க ஆரம்பித்தார்கள். உடனே இந்தியை ஆதரிக்கிறவர்கள் ஆட்சி மொழி இந்தி என்பதை விட்டு விட்டு ஒரு இணைப்பு மொழியாக இருக்கட்டும் என்று நேசம் கொண்டாடுகிறார்கள்; பாசம் காட்டுகிறார்கள். சொந்தம் கொண்டாடுகிறார்கள். நாம் இணைந்திருக்க வேண்டாமா? அதற்கு இணைப்பு மொழி தேவையில்லையா என்று வலிய வலியக் கேட்கிறார்கள். தேசியத்திலிருந்து நழுவி இன்று இணைப்பு மொழி என்ற இடத்திற்கு இந்தி வந்ததற்கு மிகப் பெரிய காரணம் பெரியார் அவர்கள் நடத்திய அறப் போராட்டம் தான். (கை தட்டல்)

மொழிப் பிரச்சினை அவர்களைப் பொறுத்த வரையில் மிகச் சாதாரண பிரச்சினை. அவர்கள் முக்கியமாகக் கருதுவது தமிழ் நாட்டு மக்களிடையே மனிதத் தன்மை வர வேண்டும். அவர்கள் நம்பிக் கொண்டிருக்கிற காட்டுமிராண்டித்தனமான கொள்கைகள் நாட்டைக் காடாக்கத்தக்க கொள்கைகள்; மனிதனை மிருகமாக்கத் தக்க கொள்கைகள் - வெளி யுலகத்தாராலே இரண்டு மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பே உதறித் தள்ளப் பட்ட உருப்படி யற்ற கொள்கைகள் மறைய வேண்டும். இவைகள் நீக்கப்பட்டுத் தமிழக மக்கள் துல்லியமான மனத்துடன் தூய்மையான எண்ணத்தில், செயல் திறனில் பகுத்தறிவாளர்களாக, பண்பாளர்களாகத் திகழ வேண்டும்; அதற்கு ஒரு அறிவுப் புரட்சி தேவை என்பதிலே அவர்கள் நாட்டம் அமைந்திருக்கிறது. அந்த நாட்டத்தின் உருவகம்தான் பெரியார் அவர்கள் என்றால் அது மிகையாது.

எந்த நாட்டிலும் இரண்டு நூற்றாண்டுகளில் செய்து முடிக்கக்கூடிய காரியங்களை இருபது ஆண்டுகளில் அவர்கள் செய்து முடித்திருக்கிறார்கள். ஐரோப்பாக் கண்டத்தை எடுத்துக் கொண்டால் நாட்டினுடைய விழிப்பிற்கு 50 ஆண்டுகள், அமைந்த அரசியல் ஆட்சியை மாற்றுவதற்கு 50 ஆண்டுகள் என்ற அளவில் ஒரு பகுத்தறிவு மனப்பான்மையைத் தோற்றுவிப்பதற்காக ஒரு வால்டேர், ரூஸோ இப்படித் தொடர்ச்சியாகப் பலர் வந்து வந்து இரண்டு, மூன்று நூற்றாண்டுகள் பாடுபட்டுப் பாடுபட்டுத்தான் பகுத்தறிவுப் பாதையில் அந்த நாடுகள் செல்ல முடிந்தது. இப்படி இரண்டு நூற்றாண்டுகளில் செய்ய வேண்டிய காரியங்களைப் பெரியார் அவர்கள் இருபதே ஆண்டுகளில் செய்து முடிக்க வேண்டுமென அவர்கள் கிளம்பினார்கள்; திட்டமிட்டார்கள்; அந்தத் திட்டத்தின் அடிப்படையில் பணியாற்றிக் கொண்டு வருகிறார்கள். ஆங்கிலத்தில் சொல்வார்கள் "புட்டிங் சென்டுரிஸ் இன்டு கேப்சுல்ஸ்" என்று. சில மருந்துகளை உள்ளடக்கிச் சில மாத்திரைகளிலே தருவது போல, பல நூற்றாண்டுகளை இருபது ஆண்டுகளில் அடைத்து அவர்கள் தம்முடைய வாழ்நாளிலேயே சாதித்துத் தீர வேண்டும் என்ற, வெற்றி பெற்றே தீர வேண்டு மென்ற அறிவோடும், உணர்ச்சியோடும், நெஞ்சு ஊக்கத்தோடும் யார் வருகிறார்கள் யார் போகிறார்கள் என்பதைக் கூட இரண்டாந்தரமாக வைத்துக் கொண்டு எந்த அளவு முன்னேறுகிறோம் என்பதைக் காண்பதிலேயே அவர்கள் வாழ்க்கை முழுவதும் போராட்ட களத்தில் நின்றிருக்கிறார்கள்.

அந்தப் போராட்ட களத்தில் அவர்கள் நின்றிருந்த நேரத்தில் சில பகுதிகளில் நான் உடனிருந்து பணியாற்ற வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சியடைகிறேன். நான் கல்லூரியை விட்டு வெளியே

வந்ததும் முதலில் அவர்களிடத்தில்தான் சிக்கிக் கொண்டேன். (கை தட்டல்) நான் சிக்கிக் கொண்டது வாலிபப் பருவத்தில்; எங்கெங்கோ போய்ச் சிக்கிக் கொண்டிருக்க வேண்டியவன் அவர்களிடத்தில் தான் முதன் முதலில் சிக்கிக் கொண்டேன். நான் காஞ்சி புரத்தில் கல்லூரியில் படித்த படிப்பையும், அதன் மூலம் என்னென்ன எண்ணங்கள் ஏற்படுமோ அவற்றை யெல்லாம் உதறித் தள்ளி விட்டு ஈரோட்டில் போய்க் குடியேறினேன். எனக்கு நன்றாக நினைவில் இருக் கிறது. இது பற்றி என்னுடைய பாட்டியார் அப்போது அடிக்கடி அவரை ஒத்த மூதாட்டிகளோடு பேசும்போது சொல்வார்கள்—ஆறு மாதங்களுக்கு அல்லது மூன்று மாதங்களுக்கு ஒரு முறை காஞ்சிக்குச் செல்கிற நேரங்களில் அவர்கள் என்னைப் பற்றி மற்றவர்களிடம் சொல்லும்போது யாரோ ஈரோட்டிலிருந்து வந்த ஒருவன் என்னுடைய பிள்ளையைப் பிடித்துக் கொண்டு போய் விட்டான் என்று பேசுவார்கள். அவர்களே ஒரு தடவை காஞ்சிபுரத்தில் ஆடிசன் பேட்டையிலே நடை பெற்ற ஒரு பொதுக் கூட்டத்தில் பெரியார் அவர்களு டைய பேச்சைக் கேட்ட பிறகு சொன்னார்கள் என்னைப் பார்த்து, 'நீ ஈரோட்டிலேயே இரு' என்று. இத்த னைக்கும் அவர்களுக்கு அதிகமாகப் படிப்பு அறிவு இல்லை. எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால் துவக்க காலத்தில், அவர்களிடத்தில் இருந்த காலத்தில் ஏற் பட்ட நிகழ்ச்சிகள் பலப்பல இருக்கின்றன. என்னுடைய வாழ்நாள் முழுவதும் எண்ணி எண்ணி மகிழத் தக்கவை அவை. இப்போது எனக்குக் கிடைத்திருப்பது இனி எனக்குக் கிடைக்கக் கூடியது என்று எந்தப் பட்டியலைக் காட்டினாலும் நான் ஏற்கெனவே பெற்றிருந்ததை விட இவை எதுவும் மகிழ்ச்சியிலோ பெருமையிலோ நிச்சய மாக அது அதிகமானதாக இருக்க முடியாது.

அவரிடத்திலே அப்போது ஓடாது என்று கருதிய காரணத்தால் தரப்பட்ட ஒரு ஃபோர்டு மோட்டார் இருந்தது. அதிலேதான் நானும் அவரும் ஏறிக் கொண்டு செல்வோம். ஏறிக்கொண்டு செல்வோம் என்று சொல்வதற்குக் காரணம் அது சில நேரத்தில் ஓடாது. பிடித்துத் தள்ள வேண்டும், அந்த மோட்டாரில் கிளம்பிய நேரம் தமிழகத்தில் நீதிக்கட்சி அடியோடு தரைமட்ட மாக்கப்பட்ட நேரம். இனி, காங்கிரசுக்கு எதிராக வேறு மாற்றுக்கட்சி உண்டாகவே முடியாது என்ற நிலைமை ஏற்பட்டபொழுது நீதிக்கட்சியின் தலைவராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இரண்டே வருடத்தில் அந்த நீதிக்கட்சி என்ற அரசியல் இயந் திரத்தைச் சுயமரியாதை இயக்கம் என்ற ஒரு இஞ்சி னோடும் பூட்டி வெகு வேகமாக அதை இயக்க ஆரம்பித் தார். இதே திருச்சியில் புத்தூர் மைதானத்தில் திரா விடர் கழக மாநாடு ஒன்று நடைபெற்ற நேரத்தில் நாளைக் காலை மாநாடு; இன்று இரவு மிகப் பெரிய மழை; அதனால் கொட்ட கை முழுவதும் முழங்கால் அளவுக்குத தண்ணீர் தேங்கியிருந்தது. பெரியார் பார்த்து அவரு டைய தொண்டர்களை அழைத்து இப்படியிருக்கிறதே நாளை மாநாடு நடக்குமா என்று கேட்டார்கள். அதற்கு அத்தொண்டர்கள் நடக்கும் என்றார்கள். அப்படியே காலையில் நடந்தது. தண்ணீரிலா என்றால் இல்லை. தொண்டர்களின் உழைப்பினால் தண்ணீர் இறைக்கப் பட்டு மணல் தூவப்பட்டுக் காலையில் மாநாடு வெற்றிகர மாக நடந்தது. இதை நான் சொல்வதற்குக் காரணம் முழங்கால் அளவுக்குச் சேறு இருந்த இடம் பக்குவப்ப டுத்தப்பட்டமாதிரி அதைப்போல த்தமிழ் மக்களின் மனத் தில் ஊறிப்போயிருந்த சேற்றை அவர்கள் துடைத்தெ றிந்தார்கள். தமது வாழ்நாளிலேயே அதை முடித்தார். 20 ஆண்டுகளுக்கு முன்பு அவர்களோடு நான் வடநாட்

டுக்குச் சென்றிருந்த நேரத்தில் வடநாட்டில் உள்ள பல தலைவர்கள் இந்தியப் பேரரசில் பெரிய உத்தியோகத்தில் இருந்தவர்கள் எல்லாம் பெரியாரைப் பார்த்து, " பெரியார் அவர்களே உங்களை இன்னுமா விட்டுவைத்திருக்கிறார்கள்?" என்று கேட்பார்கள். அதற்குப் பெரியார் அவர்கள் நான் என்ன தவறுசெய்தேன்? எதனால் எனக்கு ஆபத்து வரப்போகிறது? என்று சொல்லிய நேரத்தில் நீங்கள் பேசுவதில் பத்தாயிரத்தில் ஒரு பகுதியை, நீங்கள் செய்வதில் ஆயிரத்தில் ஒரு பகுதியை நாங்கள் சொன்னாலும் செய்தாலும் எங்களை அடியோடு அழித்திருப்பார்கள்; நீங்கள் எப்படித் தப்பிப் பிழைக்கிறீர்கள் என்று சொன்னார்கள். அப்படிக் கேட்கும் அளவுக்கு வீரம் மிக்க காரியங்களை, வேறு யாரும் எண்ணிப் பார்க்கமுடியாத காரியங்களை நடத்திக்காட்ட முடியாத காரியங்களை நடத்திக்காட்டி அதில் பெற்ற வெற்றிகளை நம்மிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். செட்டிநாட்டரசர் அவர்கள் சொன்னபடி அவர் சாதித்த காரியங்கள் மிகப் பெரியவை என்றாலும் அவர் துணையோடு நாம் சாதிக்க வேண்டிய காரியங்கள் நிரம்ப இருக்கின்றன. ஒரு பெரிய மலை பிளக்கப்பட்டிருக்கின்றது. கற்பாறைகள் எல்லாம் கீழே உருண்டு வந்து கொண்டிருக்கின்றன. அவைகளை எல்லாம் பக்குவப்படுத்தி அவைகளை எந்தெந்த வடிவத்திலே நாம் செதுக்கவேண்டுமோ அதில் நாம் நம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும், பெரியார் அழைக்கிற அழைப்பைக் கேட்காத தமிழ் மக்கள் என்றுமே இருந்ததில்லை. அவர்கள் கூப்பிடும் குரலுக்கு ஓடிவரத் துடிக்காத இளைஞர்கள் இருந்ததில்லை. அப்படிப்பட்ட மாபெரும் தலைவருடைய 89-வது பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன்; மிகுந்த பெருமைப்படுகின்றேன். என்னுடைய நண்பர்கள் என்னை இவ்விழாவுக்குத்

தலைமை ஏற்கவேண்டுமென்று கேட்ட நேரத்தில் திராவிடர் கழகம் நடத்துகிற இந்த விழாவில் தலைமை வகிக்க வேண்டும் என்று கேட்டார்கள். அவர்களுக்குத் திராவிட கழகத்தின் வரலாறுதெரியாத காரணத்தால்! திராவிடர் கழகம் என்று பெயர் வைத்தவனும் நான் தான்; அதைக் கொண்டு நாட்டிலே பெரிய புரட்சியை உண்டாக்கமுடியும் என்ற நம்பிக்கை நிரம்ப பெற்றவன் நான்; ஆகையினாலே நான் இங்கே தலைமை வகிப்பது, இயற்கைக்கு மாறானதல்ல.

செட்டிநாட்டரசர் அவர்கள் நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் கடந்த 30 ஆண்டுகளாக நம்மோடு இருந்திருக்கிறார்கள். தமிழ் காப்பாற்றப்பட வேண்டும் என்ற காலத்திலே, நீதிக்கட்சி காலத்திலே மற்ற எல்லாக் கட்டங்களிலும் அவர்கள் நம்மோடு இருந்து நமக்குத் துணையாக இருந்திருக்கிறார்கள். ஆங்கில மொழியின் அவசரத்தைப்பற்றி அவர்கள் இன்று நேற்றல்ல, 30 ஆண்டுகளாக, இங்கு மட்டுமல்ல சட்ட மன்றங்களில்கூட வெகு தெளிவாக மிக அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லிக்கொண்டு வருகின்றார். அப்படிப்பட்டவர் இன்று பெரியார் அவர்களுக்குப் பொன்னாடை போர்த்தியது என்னைப் பொறுத்தவரையில் கண்கொள்ளாக காட்சியாக இருந்தது என்பதனை நான் சொல்லிக் கொள்ளவா வேண்டும்? ஒரு சமயம் அந்தப் பொன்னாடைக்கும் பெரியாருடைய மேனிக்கும் வித்தியாசம் இல்லாததால் அது பொன்னாடை என்று அறிந்து கொள்ளமுடியாமல் இருந்திருக்கலாம்; ஆனால், அதைப் போர்த்திய நேரத்தில் செட்டிநாட்டரசரிடத்திலே காணப்பட்ட கனிவு, அதைக் கண்டவுடன் பெரியாருக்கு ஏற்பட்ட உருக்கம், அதைக் கண்டு நமக்கெல்லாம் ஏற்பட்ட மகிழ்ச்சி இவை, வாழ்க்கையில் என்றோ ஒரு நாள் கிடைக்கக் கூடியது. அதனால்தான்

இனியும் நாம் பெறவேண்டும் என்பதால்தான் பெரியார் அவர்கள் நூறு ஆண்டுகள் வாழவேண்டும் இருநூறு ஆண்டுகள் வாழவேண்டுமென்று நாம் நம்முடைய நல்ல எண்ணத்தை அவருக்குத் தெரிவித்துக் கொள் கிரேும்.

ஏன் அவ்வளவு காலம் வாழவேண்டுமென்று சொல் கிரேும் என்ருல், அவர்களை மறக்கிற நேரத்தில் நம்மை அறியாமல் ஒரு பலவீனம் நமக்கு வருகிறது. அவரை எண்ணிக்கொள்கிற நேரங்களில் நமக்குத் தைரியம் வருகிறது. அவர் இருக்கிருர் என்ற நினைவு வரும்போது அவர் இருக்கிருர் என்றவுடன் பரவாயில்லை பார்த்துக் கொள்ளலாம் என்ற தைரியம் நமக்கு வருகிறது. அந்த நினைவு அரசியல் துறையில் உள்ள என்போன்ருருக்கு மட்டுமல்ல வணிகத் துறையில் தமிழர்கள் சங்கடப்படும் போது பெரியாரைத்தான் எண்ணிக்கொள்கிருர்கள். பெரியார் சொல்லுகிறபடி நடந்தால் நாம் பிழைக்க முடியும் என்று தமிழ்ப் புலவர்கள் கருதுகிருர்கள். பெரியார் சொல்லுகிறபடி இந்தி விரட்டப்பட்டால்தான் நமக்கு மதிப்புக் கிடைக்கும் என்னும் அரசியல்வாதிகளைப் பற்றி நான் சொல்லத் தேவையில்லை. இன்றைய தினம் பெரியாருடைய குடும்பத்தில் ஒரு பெரிய குடும்பத்தில் நான்கு பிள்ளைகள் பிறந்து ஒவ்வொரு பிள்ளையும் ஒவ்வொரு திக்கிற்குச் சென்று நான் இந்தத் திக்கில் போய் இதைக் கொண்டுவந்தேன். அண்ணன் அந்தத் திக்கிலே போய் அதைக் கொண்டு வந்தான் என்று சொல்வதைப்போல அவருடைய பிள்ளைகள் எல்லாக் கட்சிகளிலும் இருக்கிருர்கள். எந்தக் கட்சியில் அவர்கள் இல்லை? எந்தப் பிள்ளையும் ஒருவருக்கொருவர் சோடை போனவர்கள் அல்ல. அவர்கள் எதை எதைப் பெறவேண்டுமென்று கருது கிருர்களோ அதைப் பெற்றுக் குடும்பத்தில் நடக் கிற

விழாவில் அவர்கள் பெற்றவற்றைப் பெரியாரிடம் காட்டி இதோ பாருங்கள் நான் பெற்றது என்று ஒவ்வொரு வரும் காட்டும்போது உரிய புன்னகையோடு அவற்றைப் பார்த்து, நான் கேட்டது இது அல்லவே என்கிருர்கள். அவர்கள் கேட்டதைப் பெற்றுத்தரத்தக்க ஆற்றல் யாரிடத்திலும் இல்லை. ஆனால், அதைப் பெற்றுத் தரும் பொறுப்பு அவர்களிடத்தில்தான் இருக்கிறது. அப்படிப் பெற்றுத் தந்தால் அதைப் போற்றிப் பாது காத்துக்கொள்ள முடியும். அது கிடைத்தால் யாருக்கு என்ன பங்கு என்று கேட்கச் சிலர் இருக்கலாம்.

அவர்களால் ஏற்படுத்தப்பட்ட அறிவுப் புரட்சி சுலபத்தில் நிற்கப் போவதில்லை .அது போக வேண்டிய தூரத்திற்குப் போய் அடைய வேண்டிய சக்தியை இலக்கைத் தொட்டுத்தான் நிற்கும். எப்படி வில்லை விட்டுக் கிளம்பிய கணை பாயவேண்டிய இடத்தில் பாய்ந்தால் தான் அதன் வேகம் நிற்குமோ அதைப்போல அவர்களிடத்திலிருந்து பிறந்த அறிவுக் கணை எந்த இலட்சியத்தை அடைய வேண்டுமோ அதை அடைந்தே தீரும். அதில் ஐயம் யாருக்கும் இல்லை. அதில் கால அட்டவணையைக்கூட நாம் கருதத் தேவை இல்லை. அந்தப் பாதையில் நாம் நடை போட்டுக் கொண்டிருக் கிறோம்.

முப்பது ஆண்டுகளுக்கு முன்னாலே தமிழகத்திலே பேசுவதற்குக் கூச்சப்பட்ட விஷயங்களை இன்று நம்முடைய எட்டு வயதுச் சிறுவன் வெகுதாராளமாகப் பேசுகிறான். இருபது வருடங்களுக்கு முன்னாலே நம்முடைய மனத்தில் பயந்து கொண்டிருந்த தத்துவங்கள் இன்றைய தினம் கேலிக்கு உரியதாகுமென்று நாடே சொல்கிறது. இரண்டு நூற்றாண்டுகள் பாடுபட்டு உண்டாக்க வேண்டிய அறிவுப் புரட்சியை இருபது வருடங்களில்

அவர்கள் சாதித்துக் கொடுத்ததால், நமக்கு எல்லாம் எளிதாக இருக்கிறது; எல்லாம் சுலபமாக இருக்கிறது.

ஆனால், இது எளிதாகும் அளவுக்கு அவர்கள் பட்ட கஷ்டங்கள் எத்தனை, நன்றாக நினைவுக்கு வருகிறது. நானும் அவரும் ஒரு முறை சிவகங்கை மாநாட்டுக்குப் போன நேரத்தில் அந்த ஊர் முழுவதும் பழைய செருப்புக்களை அங்கே தோரணமாகக் கட்டித் தொங்க விட்டார்கள். இன்று நடந்த ஊர்வலத்தில் மாலை போட்டார்கள். கம்பீரமாகச் செல்கிறோம். ஆங்காங்கே கொடிகளும் அசைந்து வாழ்க வாழ்க என்று வாழ்த்துகின்றன. ஆனால், அப்போது சிவகங்கையிலே தொங்கியது தோரணங்கள் அல்ல! அறுந்து போன பழைய செருப்புக்கள்! அப்படி அறுந்து போன செருப்பை எடுத்துத் தோரணமாகக் கட்டியவர்களின் பிள்ளைகளிலே சிலர் இந்த மண்டபத்தில் வந்திருக்கலாம் என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட மாறுதல் தமிழகத்தில் ஏற்பட்டிருக்கிறது. அவரை முதலிலே புரிந்து கொள்ள மறுத்தார்கள். புரிந்துகொள்ள மறுத்தவர்கள் புரிந்த பிறகு ஏற்றுக் கொண்டனர். ஏற்றவரும் விரல் விட்டு எண்ணக் கூடியவர்கள்தான் அப்போதிருந்தார்கள். இப்போது அவர் பேசுவது எல்லோருக்கும் புரிந்து விட்டது. பெரும்பாலோருக்கு அது பிடித்து விட்டது. அதிலே மிகப் பெரும்பாலோர் அவற்றைத் தங்களுடைய வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டிருக்கிறார்கள்.

இப்படி ஒரு சமூகத்தை ஒரு நாட்டு மக்களை ஆளாக்கிவிட்ட பெருமை உலகத்தில் பல தலைவர்களுக்குக் கிடைத்ததில்லை. நம்முடைய தமிழகத்தில் பெரியார் அவர்களுக்குத்தான் அந்தத் தனிப் பெருமை சேர்ந்திருக்கிறது. அந்தப் பெருமைக்குரியவர்களாக நாம் நம்மை ஆக்கிக் கொள்ள வேண்டும்; அவர் அளித்துள்ள செல்வம்; அவர் நமக்குக் காட்டியுள்ள

லட்சியப் பாதையில் நடந்து செல்லுதற்கேற்ற ஆற்றல் நமக்கு வர வேண்டுமென்று அவர் இன்றைய தினம் நமக்கெல்லாம் வாழ்த்துச் சொல்ல வேண்டும். அந்த வாழ்த்து நமக்குப் புதிய வல்லமையை, புதிய உற்சாகத்தைத் தரும் என்பதில் ஐயமில்லை.

"என்னுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டவர்களே! என்னுடைய வழியைப் பின் பற்றியவர்களே! நாம் செல்லுகின்ற பயணம் மிக நீண்ட பயணம்; அதிலே நடந்து வருவதற்கான செல்வதற்கான வல்லமை, வலிவு, தாங்கும் சக்தி உங்களுக் கெல்லாம் வேண்டும். அவைகள் எல்லாம் உங்களுக்கு வர வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்" என்று அவர் நமக்கு வாழ்த்துக் கூற வேண்டும். இந்த விழா நாளில் நாம் அவரிடம் வாழ்த்துப் பெறவே வந்திருக்கிறோம்.

அப்படிப்பட்ட வாழ்த்தை நமக்குக் கொடுத்து வழி காட்டி அழைத்துச் செல்ல அவர்களைப் பார்த்துக் கேட்கும்போது, அவரே பார்த்து யார் யாரை எந்தெந்த வேலைக்கு அனுப்ப வேண்டு மென்று கருதுகின்றாரோ அந்தந்த வேலைக்கு அனுப்பி, தமிழகத்திற்கு மொத்தத்தில் நன்மை கிடைக்கும் ஒரு சந்தர்ப்பத்தை அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்து இன்னும் பன்னெடுங் காலம் நம்மோடு வாழ்ந்திருந்து, நம்முடைய தமிழகம் யாருக்கும் தாழ்ந்து விடாமல், எவரேனும் சுரண்டாமல், யாரையும் தாக்காமல், எவராலும் சுரண்டப் படாமல் எந்தப் புரட்டுக்கும் ஆளாகாமல், எந்தப் புரட்டையும் மூட்டி விடாமல் தன்னிகரற்ற காலத்தை உருவாக்கித் தந்து விட்டு அதை அவர் கண்டு களிக்க வேண்டும்; அதிலேதான் அவர் கவலை: லட்சியத்தில் வெளிப்படையாகத் தெரிகிற பொன் ஓவியத்தை அவர் காண இயலும். அதைக் காணுவதற்கான அறிவாற்றலோடு திறமையோடு தகுதியோடு

தமிழ் மக்கள் இன்றையத் தினம் அவரை இலட்சக்கணக்கான பேர் பின் பற்றிக் கொண்டு வருகிறார்கள். அவர்களிலே ஒருவனாக இருப்பதற்கான வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். அவருடைய பிறந்த தின விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடும் இன்றைய இந்த நேரத்தில் பல நண்பர்கள் பல அன்பர்கள் அவர்களுடைய பேராற்றல் பற்றியும், தமிழகம் அவர்களால் பெற்ற பயன்களைப் பற்றியும் இனி தொடர்ந்து பேச இருக்கிறார்கள். அதையும் கேட்டுக் களிப்படைந்து புதிய உற்சாகம் பெற்றுப் புதிய நம்பிக்கையோடு நாம் இந்த விழாவிலே வெளி யேற வேண்டும்.

என்னுடைய உளம் கனிந்த நன்றியை நான் பெரியார் அவர்களுக்குக் காணிக்கை யாக்கிக் கொள்கிறேன். அவர்களுடைய அன்பினையும், ஆதரவினையும் பெற்றவன் என்ற முறையில் என்றைய தினமும் அவர்கள் கடுமொழியைக் கேட்காதவன் என்ற முறையிலே அவர்களுக்கு என்னிடம் இருக்கின்ற தனிப்பட்ட பாசத்திற்கு என்னுடைய இதயம் கலந்த, கனிவு நிறைந்த நட்பு மிகுந்த, தூய்மை நிறைந்த வணக்கத்தையும் மரியாதையையும் தெரிவித்துக் கொண்டு பெரியாரின் பிறந்த நாள் விழாவில் பேச வந்திருக்கிற பெரியவர்களைப் பேச வேண்டுமென்று அழைக்கிறேன்.

[17—9—'67 - திருச்சி - பெரியார் பிறந்த நாள் விழாப் பேச்சு]

# திரு. இராசாராம் மோகன் ராய்

அந்த வாலிபன் பதறினன், இளம் பெண் பதை பதைத்தது கண்டு!

அவள் அழுகுரல் அவன் இதயத்தைத் துளைத்தது.

'ஐயய்யோ!'—என்று அணங்கு அலறுகிருள்.

'அந்தோ! கொடுமை! கொடுமை!' — என்று கூவுகிருன் இளைஞன்.

பெரு நெருப்பிலே பெண்ணை இறக்கினர். புத் தாடை உடுத்துக் கொண்டாள் பூவை. மஞ்சள் குங்கு மம் இட்டுக் கொண்டு, மாங்கலியத்தை எடுத்துக் கண் ணிலே ஒற்றிக் கொண்டு, மாமன், மாமி காலிலே விழுந்து வணங்கி விட்டு, சூழ நின்ற சுற்றத்தாரைக் கலங்கிய கண்களுடன் பார்த்துக் கும்பிட்டு விட்டுப், பிணக் குழியைப் பற்றிக் கொண்ட பெரு நெருப்பை மும்முறை வலம் வந்து,

"ஈசா! இதோ நானும் என் நாதனுடன் வரு கிறேன்; ஏற்றுக் கொள். பதியை (கணவனை) இழந்து பாவை புவியில் வாழ்வது பெரும் பாவம். எனவே' இதோ, உடன்கட்டை ஏறுகிறேன்; உன் திருவடியில் சேர்த்துக் கொள்!"

—என்று பிரார்த்தனை செய்கிருள்.

"உத்தமி உடன்கட்டை ஏறுகிருள்; பத்தினி பர்த்தாவுடன் செல்கிருள்; அவளுடைய பாத தூளி பட்டாலே பாபம் சம்கரிக்கப்படும்; உடன் கட்டை

ஏறிடும் காட்சியைக் கண்டோர்க்குக் கர்மம் கழுவப்படும் கடவுள் அருள் கிட்டும்,,''

—என்று பயபக்தியுடன் பேசுன்றனர்.

தீயின் அருகே செல்லச் செல்ல அவள் கண்களிலே ஒரு மிரட்சி ஏற்படுகிறது ; வாலிபனுக்கு அது விளங்குகிறது.

'ஜெய் மகாதேவ் ! ஜெய் சங்கர் ! ஜெய் சீதாராம் !'

—என்று கோஷம் கிளம்புகிறது.

ஆயிரம் நாவுகள் படைத்த கோர உருவம் போல நெருப்புத் தெரிகிறது, பெண்மணியின் கண்களுக்கு ! எனினும் அவள் அருகே செல்கிருள்.

'மகளே ! அருமை மகளே !'

—என்று தாய் அழுது என்ன பயன் ?

அவள் உத்தமி, பத்தினி, எனவே அவள் சுட்டுச் சாம்பலாக்கப்பட வேண்டியவள் !

'இளம் பெண், இந்த வயதிலா, இந்தக் கதி ?'— என்று சிலர் பச்சாதாபப் படலாம். ஆயினும் என்ன ? அவள் பாரதப் பெண்—பதி பிணமாஞன் ; அவன் உடல் அதோ நெருப்பில் ; இவள் இனிப் பூவுலகில் இருப்பானேன் ? உயிருடன் இருந்த போது யாருடன் மஞ்சம் ஏறிக் கொஞ்சிக் கிடந்தாளோ அவனுடன் தான் இப்போதும் (தீச்சுடலையில் உடன்கட்டை ஏறி) இருக்க வேண்டும் ; அதுதான் பாரதப் பண்பாடு !.........

அந்தப் பெண் செல்கிருள். வாலிபன் பதைக கிருன் ; (அவள்) நெருப்பில் இறங்குகிருள்.

"ஐயோ !''—என்று அலறித் துடித்து அதை விட்டு வெளி வர எழுகிருள். நீண்ட கம்புகளைக் கொண்டு 'சாஸ்திர சம்பிரதாய ரட்சகர்கள்' அவளை மீண்டும் நெருப்பில் தள்ளுகிருர்கள். அவள் உடலைத் தீப்பற்றிக் கொள்கிறது ; வேதனையால் துடிக்கிருள் ! வேத முணர்ந்தவர்கள் அவள் தீக் குண்டத்தை விட்டு

வெளியேரு வண்ணம் கோல் கொண்டு தடுத்து அவளைப் பிணமாக்குகிருர்கள்.

பாரதத்துக்கு மற்ருேர் பத்தினி கிடைத்து விட்டாள்!

ஆனல், ஓர் ஒப்பற்ற சீர்திருத்த வீரனும் கிடைக் கிருர்;

**அவர்தான் இராசாராம் மோகன் ராய்!**

தன் அண்ணி உடன்கட்டை ஏறியபோது, வைதீக வன்கணளர்கள் காட்டிய குரூரத்தைக் கண்ட போது தான், இராசாராம் மோகன் ராய் மடமையினல் விளை யும் கொடுமை குறித்து உணர முடிந்தது.

சுடலையில் அவர் எடுத்துக் கொண்ட சூளுரையை நிறைவேற்ற அவர் இந்தியாவில் மட்டு மல்ல, இங்கி லாந்து வரை சென்று போரிட்டார் — வெற்றி கண்டார்!

'சதி' — (உடன்கட்டை ஏறுதல்) — சட்டப்படி தடுக்கப்பட்டது.

வைதீகர்கள் அவர் மீது காட்டிய குரோதம் கொஞ் சம் அல்ல; அவர்கள் சாஸ்திரத்தை, யுக யுகமாக இருந்து வந்த சம்பிரதாயத்தை எடுத்துக் கூறினர்.

இராசாராம் மோகன் ராய்க்கு (தம் அண்ணி உடன் கட்டை ஏறியபோது) சுடலையில் கண்ட காட்சி உடனே மனக் கண்ணில் தெரியும்; அவர் இதயத்தில் பெரு நெருப்பு மூளும்; பொறிகள் வார்த்தைகளாக வெளி வந்து வைதீகத்தைச் சுட்டுச் சாம்பலாக்கிற்று!

'சதி'-யையொழித்தார், இராசாராம் மோகன் ராய்!

"நான் அறிவேன்! நான் அறிவேன்! உடன் கட்டை ஏறுவது என்பது எவ்வளவு கொடுமை என்பதை நான் அறிவேன். என் கண்ணுல் கண்டேன்: அலறி ஞள்; துடித்தாள்; உயிருக்காக மன்ருடினள். உறவுத் தர்கள் என்ன செய்தனர்? கோல் கொண்டு அவளை

நெருப்பில் தள்ளினர்—உயிர் கருக்கினர்! அபலையின் அழுகுரல் கேட்டால் கன்னெஞ்சுக்காரனுக்கும் கருணை பீறிட்டெழும். அந்த அழுகுரல் பிறர் செவியில் விழக் கூடாது என்பதற்காக வைதீக வெறியர்கள், காது செவிடு படும்படி சங்கம் ஊதினர்; தாளம் தட்டினர்; மேளம் கொட்டினர்; பசனைச் சத்தம் இட்டனர். எல்லாம் ஒரு பெண்ணைப் பிணமாக்க; தங்கள் பைத்தியக்கார முறையை வாழ வைக்க! நான் கண்டிருக்கிறேன் அந்தக் கயமையை!”

—என்று இராசாராம் மோகன்ராய் கர்ச்சனை புரிந்தார்; தர்க்கம் நடத்தினார்; ஏடுகள் தீட்டினார். வாதுக்கு வந்தோரை முறியடித்தார்; வஞ்சகரின் எதிர்ப்புகளைச் சமாளித்தார்.

சீமை சென்று பேசினார்; பார்லிமெண்டில் சொற்பெருக்காற்றினார்; வென்றார்; சதி என்னும் மடமையைக் கொன்றார்!

[—20—11—'55 'திராவிட நாடு'.]

# சவகர்லால் நேரு

உலகப் பெரும் தலைவர்கள் வரிசையில் சிறப்பு மிக்க இடம் பெற்றவர் நேரு.

நேருவின் தலைமையின் கீழ் இந்தியத் துணைக் கண்டம் தனி இடத்தை வகித்தது. பூசல், பிளவுகளால் நாடு கேடுருமல் காத்து வந்த காவலர்.

நேருவின் பிரிவால் நாடே துக்கத்தில் சிக்கித் தவிக்கிறது. இந்த நேரத்தில் நேரு எந்தக் கொள்கைக்காகப் பாடு பட்டாரோ அந்தக் கொள்கையைச் சொல்லாலும் செயலாலும் வாழ வைப்பதன் மூலம் நம்முடைய மரியாதையையும் மதிப்பையும் அவருக்குக் காட்டக் கடமைப் பட்டிருக்கிரும்.

## தத்துவ மேதை
# டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன்

இராதாகிருஷ்ணனைப் போன்ற தலைசிறந்த மேதைகள் பல ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தோன்றுவார்கள். அவரைப் போன்ற சிறந்த மேதை நமது காலத்தில் வாழ்வது நாம் பெற்ற பேறே ஆகும்!

அவர் நிதானத்தின் சின்னமாக நேர்மையின் பிரதிபலிப்பாக நீடு புகழ் பெற்றவர்.

அவர் சடங்குகளில் நம்பிக்கையில்லாத சமயவாதி; தவத்திற் கென்று காடு செல்லாமலே தத்துவத்தில் ஞானி!

எதற்கெடுத்தாலும் 'ஆமாம்' என்று தலை அசைக்கும் தலையாட்டி பொம்மை யல்லர்; சில சிக்கல்கள் தம்முடைய மனத்துக்குத் தவருகத் தோன்றிய நேரங்களில் அவற்றைத் தவறுதான் என்று எடுத்துக் காட்டிய தலைவர் அவர்.

இராதாகிருஷ்ணன் நமது நாட்டு மக்களுக்கு மட்டும் அல்ல, வெளி நாட்டு மக்களுக்கும் வழி காட்டியாகத் திகழ்பவர். மேற்கு மற்றும் கிழக்கு நாடுகளின் கலாச்சார இணைப்புக்கு உதாரணமாக விளங்குபவர்.

அவர் எழுதிய புத்தகங்கள் உலக மக்களின் பாராட்டுக்களைப் பெற்றவை.

எந்தச் சிக்கலிலும் எல்லாத் தரப்பட்ட கருத்துக்களை யும் வாதங்களையும் எடுத்துக் கூறும் சக்தி படைத்தவர். அவைகளுக்கு ஏற்ற, தக்க முடிவுகளை எடுத்துக் கூறு வதிலும் வல்லவர்.

எதுவாக இருந்தாலும் 'திணிப்பு' என்பது எல் லாராலும் எப்போதும் எதிர்க்கக்கூடிய செயல் ஆகும். இதை அறிந்த இராதாகிருஷ்ணன் தமது கருத்துக்களை மற்றவர்கள் மீது திணிக்காமல் அவர்களும் ஏற்றுக் கொள்ளுமாறு தக்க வகையில் எடுத்துச் சொல்லக்கூடிய திறமை பெற்றவர்.

அவர் உலக மக்களின் ஆசிரியர் ஆவார்.

அவர் இணைப்பு மொழியாக ஏதேனும் ஒரு மொழி யைக் கொள்ளாமல் நல்லெண்ணத்தை வைத்துக் கொண்டு இருந்தார் என்பதையும் இந்த நேரத்தில் எடுத்துக் கூற விரும்புகிறேன்.

[—: 5—9—'67-இல் இராதாகிருஷ்ணன் பிறந்த நாளை யொட்டி நடந்த அஞ்சல் தலை வெளியீட்டு விழாவில்.]

## சர்வோதயத் தலைவர்

# திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன்

அதிகாரப் பற்றற்ற நிவாரணக் குழுக்களுக்கெல்லாம் - நிரந்தரத் தலைவராக விளங்குகிறார் ஜெயப்பிரகாஷ் நாராயணன்.

நாட்டில் எங்கு மக்களுக்குப் பெருந் துன்பம் நேர்ந்தாலும் என் போன்றவர்கள் அவரை நினைத்துக் கொள்வோம்.

தனி மனிதன் என்கிற முறையில் ஜெயப்பிரகாஷ் போன்ற ஒரு தலைவரின் கீழ்ப் பணி புரியவே நான் விரும்புவேன். ஆனால், அவர் அரசியலில் இல்லை. அவர் அரசியலை ஏன் துறந்தார் என்பதற்கான காரணங்களை நான் உணர்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட பீகார் மக்களுக்கு மறு வாழ்வு கிடைக்கச் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ள அவர் இந்நாட்டில் சனநாயகத்துக்கும் கண்ணியத்துக்கும் மறு வாழ்வு கிடைத்திடச் செய்ய வேண்டும்.

*ஜெயப்பிரகாஷ் நாராயணனை நான் இந் நாட்டின் ஒருமைப்பாட்டை ஏற்படுத்தத் தக்க உறுதியான தலைவராகக் கருதுகிறேன். நல்லெண்ணத் தூதுவராக நான் அவரை வரவேற்கிறேன்.*

*அ. இ. 4*

டெல்லி செங்கோட்டையில் அவர் அதிகாரத்தில் இல்லை; சாதாரண மக்கள் மத்தியில் நிற்கிறார். அங்கிருந்தபடியே அவர் மக்கள் பணியைத் தொடருகிறார்.

என்னை அவர் ஓர் நண்பனாக - தம் அபிமானியாகக் கருதலாம்; ஏன் அவரது சீரிய பணியில் - தொண்டில் - அவருக்கு ஒரு சீடனாகவும் நான் இருந்திடுவேன்.

[— :20—9—'67-இல் சென்னையில் நடந்த பீகார் வறட்சி நிவாரண நிதியளிப்பு விழாவில்.]

# டாக்டர் பி. ஆர். அம்பேத்கார்

எவ்வளவோ துன்பங்களுக்கிடையே தள்ளப்பட்ட போதிலும் - எண்ணுதற்கரிய இன்னல்களைத் தாம் தாங்க வேண்டிய நிலை இருந்த போதிலும் தமது துறையிலே பாராட்டத்தக்க வகையில் அம்பேத்கார் திறமை பெற்றிருந்தார்.

'உயர்ந்த சாதிக்காரர்கள்'—என்று சொல்லிக் கொண்டவர்கள்கூட அம்பேத்காரைப் பாராட்டினார்கள். தமக்கே உரிய சட்டத் திறமையினால் அவர் தம்மை உலகத்திற்கு வெளிப்படுத்திக் கொண்டார்.

உலகம் என்றும் திறமைக்கு மதிப்பளிக்கும்.

எத்தனையோ பேர் பிறக்கின்றார்கள்; இறக்கின்றார்கள். அம்பேத்காரின் 76-வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுகிறோம் என்றால், எத்தனையோ அழுத்தல்களுக் கிடையே எவ்வளவோ கொடுமைகளுக்கிடையே - அம்பேத்கார் திறமையைப் பயன்படுத்தியதால்தான்!

அந்தத் திறமையை அவர் தமது சொந்தத்திற்காகப் பயன்படுத்திக் கொள்ள வில்லை; தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை உயர்த்தி விடுவதற்காகப் பயன்படுத்தினார்; அதனால்தான் அவரைப் பாராட்டுகிறோம்.

ஆகவே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள்—பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள்—நல்ல திறமை பெற முயல வேண்டும். பிறப்பின் அடிப்படை

யிலே சலுகைகள் பெறுவதைக் கொஞ்சம் கொஞ்சமாகத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். கல்வித் துறையில் தாழ்த்தப்பட்டவர்கள் முன்னேற்றம் காண வேண்டும்.

நாட்டிலே முன்னுக்கு வர நாம் அனைவரும் படிக்க வேண்டாமா? உலகத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?

......திறமை பெருமல் பிறப்பின் அடிப்படையில் எத்தனை காலத்திற்கு வளர்ந்துவிட முடியும்? ஆகவே, 'தாழ்த்தப் பட்டோர்'—என்ற நிலை மாற வேண்டும். தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் திறமை பெற்ருக வேண்டும்.

பள்ளிகளில் குறியீடு (மார்க்கு) பெறுவதே ஒரு கலையாக வளர்ந்து வருகிறது! அந்தக் கலையிலே நாமும் சிறந்து விளங்க வேண்டும். படிப்பே இல்லாமல் யாரும் திறமை பெற முடியாது. அப்படி யாராவது இருந்ரால் விதி விலக்காக ஓரிருவர் இருக்கலாம். ஆனல் 'படித்ததனல் திறமை போய் விட்டது'—என்று யாரும் சொல்ல மாட்டார்கள்!

கட்டிடத்திற்குச் செங்கல் போல, வாழ்க்கை முன்னேற்றத்திற்குப் படிப்புத் தேவை; திறமை தேவை; தேர்ச்சி தேவை.

......உயிரோடு இருந்த காலத்தில் அரிய கருத்துக்களைத் தந்து, செயலாற்ற வேண்டிய வழிமுறைகளை வகுத்துக் கொடுத்த - டாக்டர் அம்பேத்கார், - 'உயர்ந்தவர்கள்' - என்று சொல்லிக் கொண்டோரால் கொடுமைகளுக் கெல்லாம் ஆளாகித் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினரின் அல்லல் நீக்கப் பாடுபட்ட அந்த மேதை - யாரும் எதிர்பாராத வகையில் மறைந்து போனுர்.

......இன்று சமுதாய ஏற்றத் தாழ்வு - கொடுமையிருந்த போதிலும் நமது உரிமையை நிலை நாட்டிக் கொள்ளப் பல வசதிகளைப் பெற்றிருக்கின்ருேம். சட்டத்

திலே அதற்கு வழி வகைகள் இருக்கின்றன. ஆனால், இது போன்ற வசதிகள் இல்லாத காலத்தில் - சட்டத்தின் உரிமை நிலைநாட்டப்படாத நேரத்தில் பிறந்தவர் டாக்டர் அம்பேத்கார்.

தாழ்த்தப்பட்ட மக்களைத் தாழ்த்திக் கொண்டே இருக்க வேண்டும் என்ற சமுதாயக் கருத்து உலவிக் கொண்டிருந்த காலத்திலேயே - தாழ்த்தப்பட்ட மக்கள் உயர்த்தப்பட வேண்டுமா ?' - என்ற கேள்விக்குறி உலவிய காலத்திலேயே - அம்பேத்கார், இந்தச் சமுதாய முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டதுதான் ஒரு வகையில் வியப்பளிக்கக் கூடியதாகும்.

இப்போது உரிமைகள் அனைத்தையும் காப்பாற்றிக் கொள்ள வழி முறைகள் உள்ள காலம். எல்லாருக்கும் உரிமை உண்டு - அதைப் பாதுகாக்க வழியுண்டு என்பதால், யாரும் யாருடைய உரிமையையும் வெளிப் படையாகப் பறிக்க முடியாது,

'வெளிப்படையாகப் பறிக்க முடியாது' - என்று சொன்னேனே தவிர, 'பறிக்கவே முடியாது' - என்றும் கூறவில்லை. அதாவது, 'மக்களின் ஒரு சில உரிமைகள் மறைமுகமாகப் பறிக்கப்படுகின்றன' - என்பதைக் குறிப்பிடவே அப்படிக் கூறினேன்.

மாணவராக இருந்த காலத்திலும், வழக்கறிஞர் தொழில் புரிந்த காலத்திலும் எவ்வளவோ இன்னல்களுக்கு ஆளான போதும் - இடையூறுகளில் சிக்கித் தத்தளித்த போதும் டாக்டர் அம்பேத்கார் தம்மைப் பற்றிக் கவலைப் படாமல் மற்றவர்களுக்காகவே வாழ்ந்தார்.

இங்கிலாந்து நாடு சென்று அவர் கல்வி பயின்றார் கல்வி பயின்றதும் இந்தியாவுக்குத் திரும்பும்போது, அறிஞர்கள் பலர் அவரை வழியனுப்பி வைத்தனர்.

இந்தியாவுக்கு வந்த அம்பேத்கார் வழக்கறிஞர் தொழில் நடத்த வேண்டும் என்றெண்ணி, நல்ல ஒரு நெடுஞ்சாலையில் வீடு தேடினார்; நெடுஞ்சாலையில் மட்டுமல்ல, குறுக்குச் சாலையில் கூட அவருக்கு வீடு கிடைக்க வில்லை! அந்த அளவுக்கு வழக்கறிஞராக இருந்த அம்பேத்கார் கொடுமைப் படுத்தப் பட்டார்!

இப்போது அந்தக் கொடுமைகளைச் செய்ய முடியாது. இருந்தாலும் சட்டத்தின் கண்களை மறைத்துக் கொண்டு அந்தக் கொடுமைகளைச் செய்யக் கூடும்!

இப்படி, 'உயர்ந்தோர்' - என்று சொல்லிக் கொண்டோரால் அழுத்தி வைக்கப்பட்ட சமுதாயத்தை நமது காலத்திலாவது உயர்த்தி விடுவதற்கு நாம் கடமைப் பட்டவர்கள் ஆவோம். அதற்காகச் செய்ய வேண்டிய உதவிகள் அனைத்தையும் செய்வோம் என்று உறுதியளிக்கிறேன்.

[15—4—'67-இல் சென்னை நேரு விளையாட்டரங்கில் நிகழ்ந்த அம்பேத்கார் பிறந்த நாள் விழாவில், அறிஞர் அண்ணா.]

## அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர்

# திரு. கு. காமராசர்

காமராசர் தமது பணிகளின் மூலம் நாட்டின் தரத்தை உயர்த்த முயன்ருர்; தமிழர்களுக்கு நற்பணி ஆற்றிஞர்; தமிழர்கள் பெருமைப்படத் தக்க நல்ல காரியங்களைச் செய்தார்.

ஆனுல், நான் ஓர் அரசியல் கருத்தைப் பின் பற்றுபவன் - அவர் இன்னெரு அரசியல் கருத்தைப் பின்பற்றுபவர். அப்படி வேறு பல அரசியல் கருத்தைப் பின் பற்றுபவரின் நல்ல குணங்களைப் பாராட்டுவதாலேயே அவர் வழியில் நான் செல்ல வேண்டும் என்று விதியும் இல்லை; நியாயமும் இல்லை; சட்டமும் இல்லை.

உண்மையான மக்களாட்சி இருக்கும் நாட்டில்தான் ஒரு கட்சித் தலைவரை இன்னெரு கட்சித் தலைவர் மதிப்பார். ஒரு கட்சித் தலைவர் படத்தை இன்னெரு கட்சித் தலைவர் திறந்து வைப்பார்.

ஆனுல், சர்வாதிகார நாட்டில் ஒரு தலைவர் இன்னெரு தலைவரின் சமாதியைக் கட்டுவார்!

ஆகவே சனநாயக நாடான இந்த நாட்டில் இப்படிப்பட்ட காரியங்கள் தேவையான காரியங்களாகும்.

இதைப் பார்த்த பிறகாகிலும்,—

அரசியல் கருத்து வேறுபாடு இருக்கலாம்; கசப்பு இருக்கத் தேவையில்லை!

கட்சி வேறுபாடு இருக்கலாம்; கத்திக் குத்து வரை செல்லக் கூடாது! கட்சி வேறுபாடு இருக்கலாம்; ஆனால், சந்து முனையிலிருந்து அது கத்துவதாக இருக்கக் கூடாது!

காமராசர் 'படிக்காத மேதை' என்று தலைமையாசிரியர் கூறினார்.

சிலர்தான் படிக்காமலேயே மேதை ஆக முடியும். ஆனால், அனைவருமே, மேதையாக வேண்டும் என்றால். படிக்காமல் இருக்க வேண்டும் என்று பொருள் கொண்டு விடக் கூடாது.

படிக்காதவர்கள் சிலர்தான் மேதை யாகலாம்; ஆனால் படித்தவர்களை நிச்சயம் அந்தப் படிப்பு உயர்த்தாமல் விடாது.

25 மார்க்கு வாங்கிய மாணவனை ஆசிரியர் கண்டிக்கும்பொழுது, 'அவன் படித்தால் தானா......?'—என்று திருப்பிக் கேட்பதற்கு இந்தப் 'படிக்காத மேதை' என்ற கருத்துப் பொருள் தராது.

காமராசர் அவர்கள் படிக்க வில்லையே தவிர,
"கல்லூரிகளில் நான் படிக்க வில்லையே!"
—என்ற ஏக்கம் கொண்டவர்.

அவர் இருந்த காலம் – குடும்பச் சூழ்நிலை - நேரங் கிடைக்காத தன்மை - அரசியல் ஈடுபாடு ஆகியவைகளால்தான் அவர் கல்லூரியில் படிக்க முடிய வில்லை.

கல்லூரியில் அவர் படித்துப் பட்டம் பெற வில்லையே தவிர, படிக்கவே இல்லை என்று பொருள் கொள்ளக் கூடாது. அவர் தமக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் படித்துக் கொண்டுதான் இருப்பார். இதை ஆறடி மேடையில் மாலை நேரத்தில் பொதுக் கூட்டங்களில் மட்டுமே பார்ப்பவர்கள் புரிந்து கொள்ள முடியாது.

ஆனால், என்னைப்போல் நெருங்கிப் பழகுகிறவர்கள், அவரது படிப்பார்வத்தைப புரிந்து கொள்வார்கள்.

அவர் கல்லூரியில் படிக்க வில்லையே தவிர
வாழ்க்கைப் பாடத்தைப் படித்தார்.

மக்களின் புன்னகையை—பெரு மூச்சை—
கண்ணீரைப் படித்துப் பாடம் பெற்றார்!

முப்பது வருடம் நாற்பது வருடம் என்று
மக்களிடம் தொண்டாற்றினால்தான் இந்தப்
பாடத்தைப் பெற முடியும்!

என்னையும் அவரையும் 'பச்சைத் தமிழர்கள்'—என்று குறிப்பிட்டார்கள். 'பச்சை'—என்பதற்கு நாட்டில் இரண்டு மூன்று அர்த்தங்கள் உண்டு!

(1) ஒன்றும் விவரம் தெரியாதவர்களைப் 'பச்சைக் குழந்தைகள்' என்பார்கள்!

(2) வளம் இருப்பவர்களைப் 'பச்சையாக' இருக்கிறார்கள் என்பார்கள்!

நாங்கள் இருவருமே பச்சைக் குழந்தைகளும் அல்ல; வளம் சேர்த்துக் கொண்டவர்களும் அல்ல!

'இவர்கள் தமிழர்கள்' - என்று கூறினால் நாட்டில் 'இவர்கள் உண்மையான தமிழர்களா?' - என்று கேள்வி பிறக்கிறது, என்ன காரணத்தாலோ!

அதனால்தான் உண்மைத் தமிழர்கள் என்று கூறி அந்தச் சந்தேகத்தைப் போக்கிக் கொள்ளத்தான் 'பச்சைத் தமிழர்கள்' - என்கிறார்கள்; தரம் பிரிக்கிறார்கள்.

தரம் - மற்றவர்கள் பிரித்ததே தவிர நாங்கள் பிரித்ததல்ல!

ஒருவர் புகழடைந்த பிறகுதான் பாராட்ட வேண்டும் என்ற பண்பு எவ்வளவுக் கெவ்வளவு நாட்டில் குறைகிறதோ அவ்வளவுக் கவ்வளவு நல்லது!

நாம் பெறும் புகழ் என்பது இங்கிலாந்து நாட்டில் பவனி வருவதாலோ அமெரிக்காவில் பேசுவதாலோ ஏற்படுவது என்று நாம் நம்பக் கூடாது.

'ஈதல் இசைபட வாழ்தல்'

—இவைதான் புகழுக்கு இலக்கணம் என்று ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வள்ளுவப் பெருந்தகை கூறியிருக்கிறார். அந்தப் பண்புகள் இருந்தால் போதும்.

உலகத்தை முழுவதும் சுற்றினார்களா, உலகத்தின் பாதிப் பகுதியைச் சுற்றினார்களா என்று பார்க்கத் தேவை இல்லை.

> *மனிதனின் மனம் எல்லா உலகங்களையும் விடப் பெரிது! அந்த இதயம் பண்புக் கேற்றபடி பெரிதாகத் தக்கது; நினைப்புக் கேற்றபடி குறுகத் தக்கது! ஆகவே அந்த மனித மனத்தைப் பெரிதாக்கி அதன்படி நடக்க வேண்டும்!*

நமக்கு அறிவுரைகள் கூறுபவர்கள் பலர் இருக்கலாம். 'மனத்திற்கு எத்தகைய இடையூறு வந்தாலும் தாங்கிக் கொள்கிற வலிவு இருக்கிறதா? அந்த வலிவைத் தயக்கம் காட்டாமல் பயன்படுத்துகிறோமா?' என்று பார்க்க வேண்டும். இதைக் கொண்டுதான் தனி மனிதனின் புகழ் மட்டுமல்ல நாட்டின் புகழே நிர்ணயிக்கப்படுகிறது.

இங்கு நான் மாணவர்களுக்குப் பரிசளித்தேன்.

இப்போது நான் திறந்து வைத்த காமராசர் படத்தை யாருக்குப் பரிசளிப்பது? எதற்குப் பரிசளிப்பது?

அதை நான் இந்தத் தமிழ்ச் சமுதாயத்துக்கே பரிசாகத் தருகிறேன்?

ஒருவர்க் கொருவர் மாறுபாடான கருத்து இருந்தாலும் மதிக்க வேண்டும். அப்படி மதிப்பதாலேயே ஒன்றுபட்டுவிட வேண்டும் என்பதில்லை.

தனித்தனித் தன்மையுடன், ஆனல், ஒருவர்க்கொருவர் மதிப்புடன் நடந்து கொள்ள வேண்டும் என்பதை (காமராசர் படத்தை நான் திறந்து வைக்கும்) இந்நிகழ்ச்சி உலகத்துக்கு எடுத்துக் காட்ட வேண்டும்.

அதிலும் குறிப்பாக - சிறப்பாக - அவர் படத்தைத் திறப்பதிலோ, அவரைப் பாராட்டுவதிலோ எப்போதும் நான் தயக்கம் காட்டியதில்லை; தயக்கம் காட்டவும் மாட்டேன்.

இதனல் அவர் என்னை மதிக்க வேண்டும் என்று எதிர்பார்க்க வில்லை. அது அவரது விவகாரம்!

கருத்து வேறுபாடு இருந்தாலும் பாராட்ட வேண்டியதைப் பாராட்டுவது என்பது தமிழ்ப் பண்பாடு அந்தப் பண்பாடு மென்மேலும் சிறக்க வேண்டும் என்பதைத்தான் இந்த நிகழ்ச்சி மூலம் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

காமராசர் படத்தை ஒரு காங்கிரசார் திறந்து வைத்து அவருடைய அருமை பெருமைகளைப் பாராட்டிப் பேசினல் அது அவருடைய கடமையாக இருக்கலாம்; அல்லது அவர் ஏதாவது பெற்றதற்காக இருக்கலாம்! அல்லது 'பெறலாம்'—என்ற ஆசை காரணமாக இருக்கலாம்!

நான் அவரது படத்தைத் திறப்பது 'பெற்றதற்காகவும்' அல்ல! 'பெறலாம்' என்பதற்காகவும் அல்ல! எங்களிடையே கருத்து வேறுபாடு இல்லை என்பதைக் காட்டுவதற்காகவும் அல்ல!

அவர் படத்தை நான் திறக்கிறேன் என்றல் அவர் தமிழகத்துக்கு நன்மை செய்தார் என்பதற்காக!

[23 - 4 - '67 - இல் காஞ்சி பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளி ஆண்டு விழாவில்.]

அடக்கி ஒடுக்கப்பட்ட சமயத்தில் (மதத்தில்) இருந்துதான் உன்னதமான மனிதர்கள் தோன்றுவார்கள் என்று மூதறிஞர்கள் கூறி இருக்கிறார்கள்.

வைரம் என்பது நீண்ட நெடுங் காலத்திற்கு முன்பு பூமியின் அழுத்தத்தால் கீழே அடங்கி ஒடுங்கிக் கிடந்த கரித் துண்டுதான்!

அது போல, நெடுங்காலமாக அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் இருந்து தோன்றிய வைர மணிகளில் ஒருவர்தான் காமராசர்!

அவர் மாற்றுக் கட்சியைச் சேர்ந்தவர் என்றாலும் அவரை நான் போற்றுவதற்கு இது ஒரு காரணம்.

[திரு. சி. பா. ஆதித்தனாருக்கு நடந்த பாராட்டு விழாவில்.]

# திரு. என். வி. காட்கில்

**நே**ரு பண்டிதருடைய எழுச்சி மிக்க வரலாற்றிலே காட்கில் ஒரு சிறப்பான இடம் பெற்றவர். உடனிருந்து பணி ஆற்றியவர்; விடுதலைக் கிளர்ச்சியில் முன்னணியில் நின்றவர்.

......அவருக்கு ஒரு குறிக்கோள் இருக்கிறது; எனவே அவர் பூசித்துக் கிடக்க மறுக்கிறார். இலட்சிய முழக்க மிடுகிறார்!

குரு பக்தி – கட்சி பாசம் – பதவியில் பற்று – அதிகாரத்தைக் கண்டு அச்சம் – இவைகள் (அவரிடம்) தலை காட்ட மறுக்கின்றன. டில்லி ஆட்சி மன்றத்திலே அஞ்சா நெஞ்சுடன் பேசுகிறார்.

'நேசம் மறக்க வில்லை; பாசம் பட்டுப் போக வில்லை; எனினும் இவைகளுக்காகக் குறிக்கோளை இழக்க முடியாது'

— என்று முழக்க மிடுகிறார்.

'அவ்வளவு பெரியவர் தொட்டிழுத்த போது நான் என்ன செய்ய முடியும்?"

—என்று வாதிடுபவளைப் பத்தினியாகவா கொள்ள முடியும்?

'நாளைக்கு அவர் எவ்வளவு பெரியவர் ஆவாரோ? யார் கண்டார்கள்? இன்றே அவர் நெஞ்சம் கிடைத்து விட்டது.'

—என்று எண்ணிப் பூரித்திடுவாள், கண்டாரைக் கொல்லும் காரிகை.

காட்கில்,

'எவ்வளவு பெரியவர் ஆனுல் என்ன? உரிமை எல்லாவற்றிலும் பெரிது!'

— என்கிருர்.

காட்கில் கேட்கிருர் :

'தன்மானம், கற்பு, உரிமை - இவற்றை எப்படி இழக்க முடியும்?"

—என்று

"இராச்சியப் புனர் அமைப்புக் கமிஷன் மராட்டியர்களைக் குறித்துக் கூறியுள்ள கருத்து மராட்டிய இனத்தை இழிவு படுத்துவதாக இருக்கிறது. கடந்த 600 ஆண்டுக் காலத்தில் இப்படிப்பட்ட இழி மொழியை மராட்டியர் மீது யாரும் வீசிய தில்லை. இந்த இழிவைத் துடைத்திட, பதிலளித்திட எமக்குத் தெரியும்;— ஆனுல், அந்த முறைகள் இன்று சரியானவை என்று ஏற்றுக் கொள்ளப் படாதனவாக உள்ளன; குடியரசுக் கோட்பாடுகளுக்கு முரண் ஆனவைகளாகவும் உள்ளன."

—என்று மனம் குமுறிப் பேசுகிருர் காட்கில்.

மராட்டியரை மட்ட நிலையில் வைத்திடவும், அவர்களின் உரிமைக்கு உலை வைக்கவும் இன்று டில்லியில் ஓர் அரசு முயலும்போது, அதே இடத்திலிருந்து பாதுஷாக்கள் முயன்ற காலமும், அந்த ஆதிக்கத்தை எதிர்த்து நடத்தப்பட்ட போராட்டமும் மாவீரன் சிவாஜியின் பரம்பரையில் வந்த காட்கில் அறிவார் அல்லவா?

[25 - 11 - '55 - 'திராவிட நாடு']

# காயிதே மில்லத்
# இசுமெயில் சாகிப்

**காயிதே மில்லத் (இசுமெயில்)** அவர்கள், இசுலாமிய சமுதாயம் நெடுங் காலத்திற்குப் பிறகு பெற்ற பெரும் பரிசு ஆவார்.

தி. மு. கழகத்திற்கு உற்ற துணைவராக – சனநாயகத்திற்குக் கிடைத்த அறப்போர் வாளாக - அவர் இருந்து வந்திருக்கிறார்; தொடர்ந்து இருந்து வருவார் என்ற நம்பிக்கையில் நாங்கள் நல்லாட்சி நடத்தத் துணிந்திருக்கிறோம்.

* *

கண்ணியத்துக்குரிய காயிதே மில்லத் அவர்கள் முசுலீம் சமுதாயத்தின் ஒப்பற்ற தலைவர் மட்டுமல்ல; தமிழர் சமுதாயத்தின் தன்னேரில்லாத் தலைவரும் கூட.

நம் நாட்டின் முதுபெரும் அரசியல் மேதையான அவருடைய வாய்மையும் தூய்மையும் அனைவராலும் பாராட்டப் பட்டவை.

நல்ல முயற்சிகள் அனைத்துக்கும் துணை நிற்கும் காயிதே மில்லத் அவர்களின் பேராதரவைப் பெற்றதிலே திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழக அரசும் பெருமிதப்பட நியாயம் உண்டு. இன்றைய அரசுக்குக் காயிதே மில்லத் பலமிக்க அரணாக விளங்குகிறார்.

## இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர்
# திரு. வி. வி. கிரி அவர்கள்

துணைக் குடியரசுத் தலைவர் திரு. கிரி, 50 ஆண்டுகளுக்கு மேலாகப் பொது வாழ்வில் ஈடுபட்டவர். சுதந்தரப் போராட்டத்தில் கலந்து கொண்டவர். சுதந்தர இந்தியாவை உருவாக்கிய சிற்பிகளில் ஒருவர்.........

*　　　*　　　*

...துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி நமக்கு நல்ல அறிவுரை வழங்கினார்கள். அந்த அறிவுரையைப் பொன்னே போல் போற்றுவோம்.

அரசியலில் கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் ஒத்துப் போகும் தன்மை வளர வேண்டும்.

இது கிரி அவர்களின் அறிவுரை. இந்த அறிவுரை ஏதோ ஒரு குறிப்பிட்ட கூட்டத்திற்கு மட்டும் கூறப் படும் அறிவுரை யல்ல; இது நாட்டுக்கே கூறப்பட்ட அறிவுரையாகும்.

சனநாயகம் பக்குவம் பெற்ற நாடுகளில் இருக்கும் கட்சிகளில் அதிகமான சித்தாந்த வேறுபாட்டைக் காண முடியாது. சித்தாந்தத்தைச் செயல் படுத்துவதில்தான் வேறுபாட்டைக் காண முடியும்.

அமெரிக்காவில் உள்ள சனநாயகக் கட்சிக்கும், குடியரசுக் கட்சிக்கும் மிகப் பெரிய சித்தாந்த வேறு

பாட்டைக் காண முடியாது.......அத்தகைய பக்குவமான நிலையை அடைய நாமும் முயற்சி செய்யவேண்டும்.

கிரி அவர்களுக்கு உறுதி கூறிக் கொள்வேன் :

"எங்களிடம் தரப்பட்ட ஒளிவிடும் தீபத்தை அணையாமல் காப்போம்; மக்களுக்கு நன்மையே செய்வோம்; தேச ஒற்றுமையைக் காப்போம்!"

(—: 20 – 8 – '67 - சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் முன்னாள் நீதிபதி கிருஷ்ண சாமியின் படத்தைத் துணைக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி திறந்து வைத்த விழாவில்.........)

கவர்னர்

# திரு. உச்சல் சிங் அவர்கள்

புச பலமும் (தோள் வலிமையும்) மண் வளமும் மிகுந்த பாஞ்சாலத்தைச் சேர்ந்தவர் நமது கவர்னர் (திரு. உஜ்ஜல் சிங்).

பாஞ்சால மக்களின் வீரம்தான் நமது நாட்டைக் காத்தது என்பது சரித்திரம் கூறும் உண்மை.

தமிழகமும் வீரத்தில் சளைத்தது இல்லை. தமிழகக் கலாச்சாரம் உலகப் புகழ் பெற்றது. ஆகவே, பாஞ்சாலத்திலிருந்து வந்திருக்கும் கவர்னரின் தலைமையில் தமிழக மக்கள் தீ வைப்புப் போன்ற எந்த வித ஆபத்துக்களையும் உறுதியோடு சமாளித்து முன்னேறுவார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

வேண்டுமென்றே திட்டமிட்டு நடந்த தீ வைப்புகளால் குடிசைப் பகுதி மக்கள் வீடு - வாசல் இழந்து அவதிப்படுகிறார்கள். அவர்களது துயர் துடைக்க நிதி திரட்டுகிறோம்.

அதுபோலப் பீகார் மாநிலத்திலே பஞ்சத்தினால் இலட்சக் கணக்கான மக்கள் அவதிப் படுகிறார்கள். தமிழக மக்களின் துயர் துடைப்பதற்காக மட்டும் அல்லாமல் பீகார் மக்களின் துயர் துடைப்பதற்காகவும், நமது கலைஞர்கள் மிகவும் சிறப்பான முறையில் இந்தக் கலை நிகழ்ச்சியை நடத்தி உள்ளனர்.

இந்தக் கலை நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நமது கவர்னரின் துணைவியார் தலைமை வகித்து மிகவும் அக்கறை காட்டி நடத்தித் தந்திருக்கிறார்கள். ஏழை மக்களின் பால் அவர்களுக்கு இருக்கும் கனிவை இது நிரூபிக்கிறது'

இரண்டாம் உலகப் போரின்போது இலண்டன்மா நகர் மீது ஜெர்மன் விமானங்கள் குண்டுமாரி பொழிந்த போது,

"எனது இலண்டன்மா நகரம் எதையும் தாங்கிக் கொள்ளும்," —என்று சர்ச்சில் துரை சொன்னார்.

அதுபோல, தீ வைப்பு - புயல் - வெள்ளம் - எதையும் தாங்கும் இதயம் தமிழர்களுக்கு உண்டு. எதற்கும் ஈடு கொடுத்து முன்னேறுவோம்!

..." இந்தக் கலை நிகழ்ச்சியில் மிகவும் சிறப்பான அம்சம் - கவர்னர் தம்பதிகள் அழகுற அமர்ந்திருப்பது தான் - இருவரும் வெள்ளி விழாவில் இருக்கிறார்களா, அல்லது தங்க விழாவை எட்டி விட்டார்களா என்பது தெரியவில்லை! (பலத்த சிரிப்பு - கை தட்டல்)

இருவரும் தமிழக மக்களுக்கு உண்மையிலேயே பெரிய சேவை செய்து வருகிறார்கள்.

[—:5—8—'67-இல் சென்னையில் தீ விபத்து நிவாரண நிதிக்காகக் கலைஞர்கள் நடத்திய கலை நிகழ்ச்சியில் அறிஞர் அண்ணா.]

# திரு. பி. டி. இராசன்

ஆன்ற அறிவாளரான திரு. பி. டி. இராசன் அவர்கள் கலந்து கொண்ட எந்த நிகழ்ச்சியும் பெருமைக் குரிய நிகழ்ச்சியாகவே அமையும்.

அறிவுரை வழங்க வேண்டிய திரு. பி. டி. இராசன் வாழ்த்துத் தெரிவித்தார்.

பண்புமிக்க திரு. பி. டி. இராசன் அவர்கள், 'அறிவுரையைத் தனிமையில் தெரிவிக்கலாம்' - என்று எண்ணி, வாழ்த்துதலை வெளிப்படையாகக் கூறி யிருக்கிறார் என்று கருதுகிறேன்.

பி. டி. இராசன் அவர்களைப் போன்ற அறிவாளிகள் எங்களுக்கு வழி காட்டிகளாக இருக்க வேண்டியவர்கள் ஆவார்கள்.

நீதிக் கட்சி ஆட்சியிலிருந்த போது ஆற்றிய பொதுப் பணிகளுக்கும் இப்போதைய பொது வாழ்வுக்கும் நிரம்ப வேறுபாடு உண்டு.

அந்தக் காலத்தில் அரசியல் தலைவர்களின் விருப்பங்களை அறிந்து மக்கள் நடந்தார்கள். ஆனால், இந்தக் காலத்தில் யார் அரசாங்கம் அமைத்தாலும், மக்களின் விருப்பங்களை அறிந்து நிறைவேற்ற வேண்டிய பொறுப்பு இருக்கிறது.

நீதிக் கட்சிப் ஆட்சிப் பொறுப்பில் இருந்தபோது பி. டி. இராசன் (அப்போது அமைச்சர்) போன்ற ஆற்ற

லாளர்கள் மிகுந்த திறத்துடன் நிருவாகத்தை நடத்தினார்கள். அந்த உயர்தரமான நிருவாகத் திறன் தொடர்ந்து செயல்பட பி. டி. இராசன் போன்றோர் எங்களுக்கு ஒத்துழைக்க வேண்டும்.

அன்றைய தினம் நீதிக் கட்சிக்கு இரண்டு மகத்தான பொறுப்புக்கள் இருந்தன. மக்களின் விருப்பத்தை ஈடேற்றும் வகையில் செயல்பட வேண்டிய பொறுப்பு ஒன்று; இன்னொன்று - ஆங்கிலேயரின் அதிகாரத்துடன் மோதிக் கொள்ளாமல் 'பெற வேண்டியவைகளைப் பெறுவது'—என்பது!

அதாவது நீதிக் கட்சியின் தத்துவம்—ஆங்கிலேயர்களுடன் மோதல்களை ஏற்படுத்திக் கொள்ளாமல் பெற வேண்டிய பயன்களைப் பெற வேண்டியது—என்பதாகும்.

முன்பெல்லாம் காங்கிரசுக் கட்சியின் அமைச்சர்களிடம், 'மத்திய அரசுடன் போரிட்டு உரிமைகளைப் பெற்றுக் கொள்ளுங்கள், - என்று சொன்ன பொழுது, 'மத்திய அரசுடன் மோதலை ஏற்படுத்திக் கொண்டு பெறும் பயன்களைவிட அவர்களுடன் இணைந்து நின்று பெறுவதுதான் அதிகமாகும்.'—என்றார்கள்.

காங்கிரசு ஆட்சி மத்திய அரசிடம் கொண்டிருந்த அதே தத்துவத்தைத்தான், முன்பு நீதிக் கட்சி கொண்டிருந்தது.

அப்போது அந்தக் காலத்திலிருந்த வசதிகளைப் பயன் படுத்திக் கொள்ளும் கட்சியாக நீதிக் கட்சி இருந்தது.

அந்தத் தத்துவம் இப்போதைய அரசியலில் பொருந்தாமல் இருக்கலாம்.

நீதிக் கட்சியைத் தாம் (மட்டுமே) வைத்துக் கொண்டிருப்பதாக, பி. டி. இராசன் சொல்லலாம். எல்லாக்

கட்சிகளும், 'நீதிக் கட்சி' - என்று சொல்வதற்கு இடம் இருக்கிறது.

சேலம் மாநாட்டில்தான் நீதிக் கட்சி, 'திராவிடர் கழக'மாக மாற்றப்பட்டது; ஆகவே 'அது எங்களுக்குச் சொந்தம்'—என்று நாங்களும் சொல்லலாம்!

காங்கிரசுக் கட்சியினரும், 'நீதிக் கட்சியில் பெருந் தூண்களாகஇருந்தவர்கள் எங்கள் பக்கத்திலேதான் இருக்கிறார்கள்'—என்று கூறி உரிமை பாராட்டலாம்!

இப்படி எல்லாக் கட்சியினரும் நீதிக் கட்சியினிடம் உரிமை பாராட்டுவது கண்டு பி. டி. இராசன் போன்ற வர்கள் மிகுந்த மகிழ்ச்சிக்கும் பெருமைக்கும் ஆளா கலாம்.

என்னைப் பொறுத்த வரையில் மூன்று வகையில் ஆற்றலையும் பயனையும் பெறுகிறேன்.

(1) நீதிக் கட்சியிடம் எனக்குத் தொடர்பு இருந்த தால், அந்தக் கட்சிக்குரிய ஆற்றலான பெருந்தன்மைப் போக்கினைப் பெற்றுக் கொள்வேன்.

(2) சுயமரியாதை இயக்கத்தில் தொடர்பு இருந்த தால், தன்மான உணர்வை வேண்டும் போது நான் பெற்றுக் கொள்வேன்.

(3) காங்கிரசுக் கட்சியின் பெருந் தலைவர்களிடம் தோழமை இருப்பதால் அரசியல் சிக்கல்களில் அவர்கள் கையாளும் இராச தந்திரத்தை நான் மேற் கொள்வேன்.

ஆகையால், மூன்று வேறுபட்ட உள்ளுணர்ச்சியின் பிரதிநிதியாக நான் செயல்படுவேன்.

தமிழகத்தின் புதிய (தி. மு. க.) அரசு, முன்னேற் றத்தைக் கருதிப் புரட்சிகரமான மாறுதல்களைச் செய் யும்; சமூகத்தின் கட்டுக்கோப்பைக் குலைக்கும் என்று சிலர் அச்சம் தெரிவித்தார்கள்.

தமிழக அரசு, படிப்படியான மாறுதல்களையும் வளர்ச்சிகளையுமே விரும்புகிறது. அது நிலைத்து நிற்கும்.

புதிய அரசுக்குத் தேவையான ஆலோசனைகளை வழங்கும் கடமை, அனுபவம் மிக்கவர்களாக - ஆற்றலாளர்களாக - விளங்கும் உங்கள் அனைவருக்கும் உண்டு. தேவையான பொழுது அதை நாங்கள் பெறுவோம்.

நெருக்கடியான பிரச்சினைகள் இருப்பதை பி. டி. இராசன் அவர்கள் சுட்டிக் காட்டினார்கள். உங்கள் அனைவரது நல்லெண்ணமும் ஒத்துழைப்பும் உறுதுணையாக அமைந்திருப்பதால் எல்லாப் பிரச்சினைகளிலும் நல்ல தீர்வு காண உளமாரப் பாடுபடுவோம்.

முன்பு காலண்டரையும் கடிகாரத்தையும் கவனித்துக்கொண்டு பணியாற்றியதில்லை. அவைகள் மீது அக்கரை செலுத்தியதில்லை. ஆனால், இப்பொழுது நிலைமை முழுவதுமாக மாறி விட்டது.

ஆனால், காலண்டரும், கடிகாரமும்தான் என்னை ஆட்டிப் படைக்கும் முதலாளிகளாக இன்று மாறி விட்டன!

இந்த நேரத்தில் இறுதியாக உங்களிடம் ஒன்றை விவிலிய நூலிலிருந்து எடுத்துரைக்க விரும்புகிறேன்:—

"எப்பாடு பட்டேனும் - என்ன நிகழ்ந்தாலும் - எங்கள் மீது சுமத்தப்பட்ட சிலுவையை (பொறுப்புக்களை) எடுத்துச் செல்ல வேண்டிய விடத்துக்கு எடுத்துச் செல்வோம்! மக்களை அழைத்துச் செல்ல வேண்டிய இடத்துக்கு அழைத்துச் செல்வோம்!"

(— ; 20 - 4 - '67 சென்னையில் நிகழ்ந்த நீதிக் கட்சி வரவேற்பு விழாவில் அறிஞர் அண்ணா)

# மறைமலையடிகள்—திரு. வி. க.

முத்தமிழை மறந்திருந்த தமிழனின் தமிழ் உணர்வைத் தட்டி எழுப்பி, தன் இன மொழியைப் போற்றும் நிலைக்குத் தமிழறிவை, தமிழின் தனிச் சிறப்பைத், தமிழ் மொழிப் பற்றைத் தமிழனிடம் உண்டாக்கினர் சிலர்.

மறைந்த தமிழ்ப் பெரியார் **மறைமலை அடிகளாரும்,**

தள்ளாத வயதடைந்தும் தளராது தமிழ்த் தொண்டு செய்தவரும் ஆன தமிழ்ப் பெரியார் **திரு. வி. கலியாண சுந்தரனா்** அவர்களும்,

—தமிழ் மொழிப் பற்றை, மறுமலர்ச்சியை ஏற்படுத்தியவர்களில் முக்கியமானவர்கள்; முதல்வர்கள்; முன்னணி வீரர்கள்!'

மறைமலை அடிகளாரின் தமிழ்ப் பற்றும் தனித் தமிழ் உணர்ச்சியும்,

திரு வி. க. அவர்களின் தமிழார்வமும் தமிழ்ப் பண்பும்,

இருவரது தமிழ்த் தொண்டும்—

தமிழ் வளர்ச்சியில் அவர்களது பேருக்கமும், இடைவிடாத உணர்வும், உழைப்பும்,

தமிழர்கள் இதயங்களில் இரண்டறக் கலந்து விட்டன!

*தமிழர் சரித்திரத்தில், தமிழ் மொழியின் மறுமலர்ச்சி ஏட்டில் அவர்களது (மறைமலை யடிகள்—திரு வி. க.) காலம், அவர்களது தமிழ் வாழ்வு என்றும் நிலைத்து நிற்பவை !*

*தமிழுக்குக் கிடைத்த இரு சுடர்கள்.— தமிழ்ச் சுடர்கள்——இரு திரிவிளக்குகள்— மறைமலை அடிகளாரும், திரு வி. க.வும் ஆவார்கள்!*

அவர்கள் வழி நின்று, அவர்கள் போற்றிய தமிழை, அவர்கள் பரப்பிய தமிழைக் கற்றுத் தெளிந்து, தமிழர்களாய், தமிழ்ப் பெரு மக்களாய், தமிழ் நாட்டை, தனித் திரு நாடாக ஆக்கிடும் பெரு மக்களாய் இன்றைய மாணவர்கள் வாழ வேண்டும்.

இதுவே, இந்த இரு தமிழ்ப் பெரியார்களுக்கு— தமிழ்ச சுடர்களுக்கு—நாம் காட்டும் கைம்மாறு !

[—: 9 - 2 - '52 - இல் சென்னை, தொண்டை மண்டலம் துளுவ வேளாளர் பள்ளியில் நிகழ்ந்த முத்தமிழ் விழாப்பேச்சிலிருந்து]

## சொல்லின் செல்வர்
# டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

தமிழால் தமக்குக் கிடைத்த செல்வத்தையெல்லாம் கொடையாக அள்ளிக் கொடுத்தவர். ரா. பி. சேதுப் பிள்ளை.

அவரைச் சங்க காலப் புலவர்களால் புகழப்பட்ட 'ஆய்' என்ற வள்ளலோடு ஒப்பிடலாம்,

பழம் புலவர்களின் கருத்தைப் பாமரர்களும் உணரும்படி செய்தவர் சேதுப் பிள்ளை. அவருக்கு ஈடு— இணை யாரும் இல்லை.

என்னை, 'அண்ணாதுரை'—என்று திரு. சேதுப் பிள்ளை கூப்பிடும் பாணி என்னுடைய தாயார் கூப்பிடுவதுபோல் இருக்கும். இன்றும் அது என் காதுகளில் ரீங்காரம் செய்கிறது. அவ்வளவு கனிவும், பரிவும் திரு. பிள்ளை என்னிடம் வைத்திருந்தார்.

[—: 21 - 8 - '67 - திருநெல்வேலியில் நிகழ்ந்த, டாக்டர் சேதுப்பிள்ளை நினைவு மகப்பேறு விடுதி அடிக்கல் நாட்டு விழாவில்.]

## பன்மொழிப் புலவர்

# திரு. கா. அப்பாத்துரையார்

பல்லாண்டு காலமாகப் பன்மொழிப் புலவரிடம் நெருங்கிப் பழகியவன் என்ற வகையிலும், அவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டை அறிந்தவன் என்ற முறையிலும் இவ்விழாவில் (திரு. கா. அப்பாத்துரையாரின் மணி விழா) கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

ஆசிரியராக இருந்து பணியாற்றிய காலத்திலிருந்து இந்தி எதிர்ப்பில் ஈடுபட்டது வரையில், இன்றைய தினம் அவர் தமிழுக்குத் தொண்டாற்றுகின்ற பல வழிகளையும் அறிந்து பாராட்டுவதற்காகவே இந்த விழா இங்கு நடைபெறுகிறது.

இந்த நேரத்தில் பொதுவான ஒன்றைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் :

மற்ற நாடுகளில் அறிவாளர்கள் ஒன்று சொன்னால், அதை அங்கே ஏற்றுக் கொள்ளவதற்கு ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொள்வார்கள். ஆனால், நமது நாட்டைப் பொறுத்தவரை ஒருவரை அறிவாளி என்று சொன்னால் —

"என்ன அறிவு?......பெரிய அறிவு'......"

—என்று தன் 'அறிவைக்' காட்டுபவர்கள்தான் அதிகம் இருக்கிறார்கள்!

வெளிநாடுகளைப்போல், எழுத்துத்துறை,- பேச்சுத் துறை-வேறு எந்தத் துறையானாலும் (இங்கே) உற்சாக மாக ஈடுபடுவது கடினம்.

இத்தகைய கடினமான தொண்டை முப்பது முப்பத் தைந்து ஆண்டுகட்டு முன்பிருந்தே அப்பாத்துரையார் அவர்கள் தொடங்கிப் பணியாற்றி வருகிறார்கள்.

அவர் வாழ்க்கை பூஞ்சோலை அல்ல. வறுமைச் சூழலிலே தம் குடும்பச் சூழலை அமைத்துக் கொண்டிருப் பவர் அவர்.

அவர் நினைத்திருந்தால், பல்கலைக்கழகத் துணை வேந்தராகும் அளவுக்கு இன்று தம்மை உயர்த்தியிருக் கக்கூடும். ஆனால், அவர் அப்படிச் செய்யவில்லை. எந்தெந்த விதங்களில் தமிழுக்குத் தொண்டாற்றலாம்- எந்தெந்த வழிகளில் தமிழ் நாட்டுக்குப் பணியாற்ற லாம்-என்று எண்ணி அந்தந்த நேரங்களில் அருந் தொண்டாற்றுவர்.

> *இசைக் கச்சேரியில் பலவிதமான இசை வகைகளை ஏற்ற - இறக்கத்துடன் பாடினாலும் சுதிக்குள்ளே நின்று பாடுவது போலத் தமிழ்த் தொண்டுக்குள் நின்று பல துறைகளில் தொண் டாற்றியவர் அவர்.*

மேல் நாடுகளில் ஒருவர் ஒரு புத்தகம் எழுதினால் அந்தப் புத்தகத்தில் வரும் வருவாயைக் கொண்டே தம் வாழ்நாளைச் செப்பனிடும் அளவுக்கு வசதியிருக்கிறது.

ஒருவர், தாம் எழுதிய புத்தகத்தின் வருவாயைச் செலவழிப்பதற்காக-அதுவும் ஓராண்டுக் காலம் ஓய்வி லிருந்து அதைச் செலவழிப்பதற்காக-தென் அமெரிக்கா வில் சென்று வாழ்ந்தாராம்!

இங்கு ஒருவர் ஒரு புத்தகம் வெளியிட்டால் உடனே வேறு வீட்டிற்குக் குடிபுகவேண்டி யிருக்கிறது கடன் தொல்லைக்காக !

பன்மொழிப் புலவருக்கு மணிவிழாக் கொண்டாடு கிறோம் ; ஆனால், அவரது கருத்துக்கள் (அவரது வாழ்க்கையைப் பற்றிய குறிப்புக்கள்) நம்மிடம் இருக்கிறதா என்றால் இல்லை.

திரு. வி. க. வைப்பற்றிய - மறைமலையடிகளாரைப் பற்றிய — குறிப்புக்கள் இல்லை. அவர்களது குறிப்புக்களை மறந்து விட்டால் 'மரபு' - என்பது கிடைக்காது. மரபு என்பது தமிழகத்தைப் பொறுத்தவரை மறதி — என்றே ஆகிவிட்டது. மன்னர்களைப்பற்றிய குறிப்புக்களும் நம்மிடம் இல்லை.

ஏதேனும் ஒரு புத்தகத்தில் கரிகாலனைப் பற்றிய செய்தி வருகிற இடத்தில் ஒரு நட்சத்திரக்குறி இட்டிருப்பார்கள். அதற்கு விளக்கம் கடைசிப் பக்கத்தில் இருக்கும். அதுவும், "கரிகாலன் உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆண்டான் என்று சொல்வாரும் உண்டு ; கருரைத் தலைநகராக்கினான் என்று இயம்புவாரும் உண்டு" - என்று எழுதியிருக்கும்.

இப்படிப்பட்டவற்றை யெல்லாம் நீக்கி, வரலாற்று ஆசிரியர்களை உள்ளடக்கிக் கல்வெட்டு மூலமாகவும், ஏடுகள் மூலமாகவும் உள்ள கருத்துக்களை ஒன்று திரட்டி வரலாற்றை உருவாக்கித் தமிழ்நாட்டாருக்கு வழங்க வேண்டும்.

உலகத்தமிழ் மாநாடு அண்மையில் (1968-சனவரி யில்) நடைபெறவிருக்கிறது. அம்மாநாட்டிற்கு வரும் வெளிநாட்டுக்காரர்கள் யாராவது கேட்டால், 'இதோ, எங்கள் தமிழக வரலாறு !' - என்று கொடுக்க நம்மால் முடியாது.

இங்கிலாந்து நாட்டில் இதே போல் ஒரு மாநாடு நடந்தால், 'இதோ எங்கள் வரலாறு' - என்று காட்ட அவர்களால் முடியும். ஜெர்மன் நாட்டிலே நடந்தால் அவர்களால் காட்ட முடியும். அப்படிப்பட்ட வரலாற்றை நாமும் காட்ட அப்பாத்துரையார் போன்றவர்களை வைத்துச் செயல்பட வேண்டும்.

# திருமதி. அலமேலு அப்பாத்துரை

இன்று இந்தி எதிர்ப்பு என்பது எல்லாராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட ஒன்று. இன்று இந்தி எதிர்ப்பில் தீவிரம் காட்டுவது போலவே அன்றும் தீவிரமாக ஈடுபட்டவர் **அலமேலு அம்மையார்** ஆவார்.

இந்தி எதிர்ப்பு மறியலைத் தொண்டை மண்டலத் துளுவ வேளாளர் பள்ளிக்கூடத்திற்கு எதிரில், நான் கேட்டுக்கொண்டதற்கு இணங்க மறியலில் ஈடுபட்ட தியாகி என்று அலமேலு அம்மையாரைக் குறிப்பிட்டால் அது மிகையாகாது.

எவ்வளவு அலை வீசினாலும் மேல் தளத்திலே நிற்கும் கப்பல் தலைவனைப் போல, அவர் கொளுத்தும் வெயிலையும் பாராது, எரிக்கும் சூட்டிலே நின்றுகொண்டிருந்தார்!

அப்படிப்பட்ட அவர்கள் இன்னும் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் தொண்டாற்ற வேண்டும்.

[— : 20-9-'67 இல் சென்னையில் நடந்த, பன்மொழிப்புலவர். கா. அப்பாத்துரையார் மணிவிழாப் பேச்சு.]

## சிலம்புச் செல்வர்
# திரு. ம. பொ. சிவஞானம்

தமிழகத்தின் நன்மதிப்பைப் பெற்ற என் நண்பர் ம. பொ. சி. யின் பிறந்த நாள் விழாவில் கலந்து கொள்வதில் நான் மகிழ்ச்சி பெறுவது இயற்கை. அவரும் நானும் ஒரே (கூட்டு) அணியில் இருப்பதால் ஏற்பட்ட புதிய மகிழ்ச்சி அல்ல ; நாங்கள் வெவ்வேறு அணியில் இருந்தபோதிலும் எங்களுக்கிடையே தொடர்பும் தோழமையும் இருந்தன. இதயத் தொடர்பு பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

அதன் அடிப்படையில் அவர் எந்தத் துறையில் இருந்தாலும், நான் எந்தத் துறையில் இருந்தாலும் அவரை நான் நினைக்காத நாள் இல்லை. என்னை அவர் நினைக்காத நாள் இல்லை. எங்கள் இருவரையும் நினைப்பதைத் தவிரச் சிலருக்கு வேலையும் இல்லை !

அவருடைய பிறந்த நாள் விழாவில் கலந்துகொள்வது என் கடமை. என் கடமை மட்டும் அல்ல ; தமிழ் அறிந்தவர்களின் கடமையும் ஆகும் !

ம. பொ. சி.—

நாட்டு விடுதலைக்காக அரும்பணியாற்றியவர். காங்கிரசுக் கட்சி தவறான பாதையில் போகிறது என்று விரக்தி அடையாமல் அதை மாற்றத் துணிந்தார். அதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

நாட்டு விடுதலைக்குப் பாடுபட்ட இயக்கம் தவருகப் போகிறது என்று கண்ட ம. பொ. சி. அதில் இருந்து வெளியேறி அதைத் திருத்த அவர் எடுத்த முயற்சியை அவரது வாழ்நாளில் ஒரு பெரிய கட்டமாகக் கருது கிறேன்.

வண்டி போகும்போது, அந்த வண்டி தவருகப் போவதைக் கண்டவுடன் அதிலிருந்து இறங்கி, அந்த வண்டி தவருன பாதையில் செல்லாமல் தடுக்க அந்த வண்டியின் சக்கரத்தைத் தடுத்து நிறுத்தி வேறு பாதைக்குத் திருப்புபவன் வீரன் - மாவீரன்!

'தேசீய' - இரதத்தில் ஏறியவர்கள் அந்தத் தேர் உயரத்தைவிடத் தாம் உயர்ந்ததாக நினைத்துக் கொண்டார்கள். அந்தத் தேர் சரியான பாதையில் செல்லவில்லை. பாதையில் உள்ள பள்ளங்களும் படுகுழிகளும் பசுந் தழைகளால் மூடப்பட்டு இருக்கின்றன என்பதை ம. பொ. சி. கண்டார். கீழே இறங்கிச் சக்கரத்தை நிறுத்த முற்பட்டார். அந்தப் பாதையில் போனல் பேராபத்து என்று கருதித் தடுத்து நிறுத்த முற்பட்டார்.

அந்த வீரத்தைத் தலைசிறந்த வீரமாக நான் மதிக்கிறேன்.

இனி, காங்கிரசில் இருந்து அதைத் திருத்த முடியாது என்று கருதி விலகினர்.

சிலர் ஏமாற்றத்துடன் விலகுகிருர்கள்; சிலர் விலகிய பிறகு பேரம் பேசுகிருர்கள்; சிலர் விலகப் போகிறேன், விலகப் போகிறேன் என்று அறிக்கை விடுகிருர்கள்.

ஆனல், ம. பொ. சி. (காங்கிரசிலிருந்து) விலகி அதைத் திருத்த முற்பட்டார்; தமிழரசுக் கழகத்தைத் துவக்கினர்.

சிலப்பதிகாரத்தை மக்கள் மன்றத்தின் முன் வைத்தார்.

அந்த நேரத்தில் நானும் பெரியாரும் கம்பராமாயண எரிப்பில் ஈடுபட்டிருந்தோம்.

"கம்பராமாயணம் எரிக்கப்பட வேண்டும்; ஒதுக்கப்பட வேண்டும் என்றால் தமிழர்கள் கையில் நாம் சிலப்பதிகாரத்தைக் கொடுக்க வேண்டும்,"

—என்று அப்போது ஒரு கூட்டத்தில் நான் கூறினேன்,

இதைக் கேட்ட பெரியாருக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. ஒரு அரை மணி நேரம் கண்ணகி அவரிடம் படாதபாடு பட்டாள்!

திராவிடர் கழகத்தின் மூலம் எந்தச் சிலப்பதிகாரத்தைத் தமிழ் மக்களுக்கு அளிக்க முடியாமல் ஏமாற்றம் கண்டேனோ—அந்தச் சிலப்பதிகாரத்தை ம. பொ. சி. தமிழருக்குத் தந்தார். அதில் நான் பெருமைப்படுகிறேன்.

தமிழில் என்ன, என்ன இருந்தன என்பதை என்னை எண்ணிப் பார்க்க வைத்தவர் மா. பொ. சி.

தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்படும் நேரத்தில் எல்லாம் ஆர்த்தெழுந்து அறப்போர் நடத்தினர்.

தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழகத்துடன் இணைக்கப்பட வேண்டும் என்று நகரில் அதுவரை நடக்காத ஒரு பெரிய வேலை நிறுத்தத்தை நடத்திக் காட்டினர்.

திருத்தணியைத் தமிழகத்துடன் சேர்க்க அறப்போர் நடத்தினர்.

இந்தச் சென்னை நகரை ஆந்திரர்கள் கேட்டு உரிமை கோரியபோது அதைத் தடுத்துப் போரிட்டார்.

திருப்பதி வரை தமிழர்களின் உரிமையைக் கோரினர்.

திருத்தணிப் போராட்டத்தில் வெற்றியும் கண்டார்.

காலக் கோளாறால், யார் வேண்டாம் என்றார்களோ அவர்களுக்கு இப்போது அது கிடைத்திருக்கிறது: யார் வேண்டும் என்று கேட்டார்களோ அவர்களுக்கு அது கிடைக்கவில்லை.

(திருத்தணியை ஆந்திர மாநிலத்திலிருந்து பிரிப்பதற்குப் போராடியவர்கள் தமிழரசுக் கழகத்தினர்; அப்போது அப்போராட்டத்தை எதிர்த்தவர்கள் காங்கிரசார். தமிழரசுக் கழகத்தினரின் அறப் போரால்தான் திருத்தணி தமிழகத்துடன் இணைந்தது. ஆனாலும், 1967-பொதுத் தேர்தலில் திருத்தணிச் சட்ட மன்றத் தொகுதி தமிழரசுக் கழக வேட்பாளருக்குக் கிட்டவில்லை. காங்கிரசு வேட்பாளரே அதில் வெற்றி பெற்றார்; இதைத்தான் அறிஞர் அண்ணா, நயம்பட உரைக்கின்றார்!)

கடற்கரையில் தாய் வேறு பக்கம் திரும்பிய நேரத்தில் அவள் குழந்தை (வேறு) ஒரு மலடியின் இடுப்பில் ஏறி இருந்தது போல வேண்டாம் என்றவர்களிடம் (திருத்தணி) இப்போது போயிருக்கிறது.

வரவேண்டிய நேரத்தில் வரவேண்டிய இடத்திற்கு அது (திருத்தணி) வரும்: இதில் சந்தேகமில்லை.

ம. பொ. சி. விரும்பி யிருந்தால்—

கண்சாடை காட்டி யிருந்தால்—

எந்த இடமும் அவரது சொந்த இடமாக ஆகியிருக்கும்.

காங்கிரசுககு ஆள் பஞ்சம் இருந்த நேரம், ம. பொ. சி. பெரிய தேச பக்தராக இருந்தார் என்பதை அவர்களாலேயே மறுக்க முடியாது.

அவர் சென்னையில் — டெல்லியில் — கேட்டு இருந்தால் கூட (பதவி) கொடுத்திருப்பார்கள்!

காங்கிரசின் ஏகாதிபத்தியத்தைத் தடுத்து நிறுத்த தி. மு. கழகத்தோடு கைகோர்த்து நடக்கத் தயார் என்று அறிவித்தார். அவர் உள்ளத்தில் ஊறி யெழுந்த உறுதியால் மக்களிடம் இருந்த ஒரு தயக்கம் மாறியது.

மூன்று கோரிக்கைகளுக்காக அவர் கூட்டணியுடன் சேர்ந்தார் :

(1) சர்வாதிகாரம் மாய்ந்த சனநாயகம் காப்பாற்றப் பட வேண்டும்.

(2) இந்தியைப் புகுத்தும் மத்திய அரசுக்குப் பாடம் கற்பிக்க வேண்டும். இந்தி ஏகாதிபத்தியத்தைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

(3) மத்திய அரசிடம் குவிந்திருக்கும் அதிகாரக் குவி யல்கள் மாநில அரசுகளுக்குக் கிடைக்க வேண்டும்.

— ஆகிய 3 கோரிக்கைகளுக்காகக் கூட்டணியுடன் சேர்ந்தார்.

இதனால் கூட்டணிக்கே ஒரு புதிய வலிமை சேர்ந்தது.

தோட்டத்து மல்லிகைக்கு மணம் உண்டு. அதைக் கட்ட வேண்டியவர்கள் கட்டி — சூட வேண்டியவர்கள் சூடி — பூங்காற்றில் மெல்ல நடந்தால், பூங்காற்றும் மல்லிகையும் இணைந்து ஒரு புதுக் காற்றாக ஆகும். அதுபோலத் தனித்தனியாக இருந்தவர்கள் ஒன்றாக ஆகி ஒரு புதிய வலிமைப் பெற்றோம்.

ஏன் காங்கிரசு தோற்றது என்று பெரியவர் களுக்குத் தெரியவில்லை; ஆராய்கிறார்கள். ஏன் தோற் றது என்று உங்களுக்குத் தெரிகிறது; எனக்குத் தெரி கிறது!

நாங்கள் ஒன்று சேர்ந்ததால் சர்வாதிகாரத்தைத் தடுத்து நிறுத்த முடிந்தது; அழித்து விட்டோம் என்று சொல்ல முடியாது.

போராட்டம் தொடர் கதை; முடிந்த கதை அல்ல!

கூட்டணியின் உச்ச கணையாக ம. பொ. சி.யின் தொண்டு இருந்தது.

நம் தமிழ் அய்யமற அரியாசனத்தில் கொலு வீற்று இருக்க வேண்டும்.

அதையோ மிரட்டப் பிறந்ததாக இந்தி நினைக்கிறது.

தமிழை மிரட்ட வரும் இந்தி, 'தமிழ் வளர்ந்த விதம் எப்படி?' என்று பால பாடம் கேட்டு நடக்கச் செய்ய வேண்டும்!

எல்லா மக்களும் எல்லா உரிமைகளும் பெற வேண்டும்.

இதற்கு, என் நண்பர், ம . பொ. சி. யிடம் நாடு நிரம்ப எதிர்பார்க்கிறது. நானும் அவரைப் பெருந் துணையாக எதிர்பார்க்கிறேன்.

எனக்கும் இலக்கியங்களைப் படிக்க ஆசை உண்டு; ஆனால் நேரம் இல்லை.

ம. பொ. சி. – ஒரு விந்தை மனிதராக இருக்கிறார்.

இந்த இளைத்த உடம்பை வைத்துக் கொண்டு —அதில் ஓராயிரம் நோய்களை வைத்துக் கொண்டு— எப்படி இலக்கியப் பணியிலும் அரசியல் பணியிலும் (அவர்) ஈடுபடுகிறார் என்று நான் வியப்பதுண்டு!

'வள்ளலார் கண்ட ஒருமைப் பாட்டை' — எழுதி, பரிசு பெற எப்படி முடிந்தது என்று வியக்கிறேன்! நேரம் ஏது என்று நினைக்கிறேன்!

தம் வாழ்நாளில் ஒவ்வொரு நேரத்தையும் இதற்காக - (இலக்கியப் பணிக்காக ம. பொ. சி.) செலவழிக்கிறார். இதை நாடு வாழ்த்துகிறது; நாம் வாழ்த்துகிறோம்; தமிழ் வாழ்த்துகிறது!

ம. பொ. சி. இன்னும் பல்லாண்டு வாழ்ந்து தமிழுக்கும் தமிழ்ச் சமுதாயத்திற்கும் பாடுபட வேண்டும்.

(—: ம. பொ. சி.யை நோக்கி அண்ணா!...)

*நீர் (ம. பொ. சி.) - வாழ்ந்தால் தமிழ் வாழும் ;*

*தமிழ் வாழ்ந்தால் இந்தியா வாழும் !*

*இந்தியா வாழ்ந்தால் உலகே வாழும் !*

(—; 26 – 6 – '67 - இல் சென்னை பாலர் அரங்கில் நடைபெற்ற திரு. ம. பொ. சி. பிறந்த நாள் விழாவில்.)

# பொதுவுடைமைத் தலைவர்
# திரு ப. சீவானந்தம்

தோழர் சீவானந்தம் அவர்கள் தன்னலமற்ற தொண்டாற்றி - பொது வாழ்வுத் துறையினருக்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கி வந்தார். பொது மக்களின் போற்றுதலைப் பெற்றுத் திகழ்ந்து வந்தார்.

அவருடைய சண்டமாருதப் பேச்சினால் தமிழ் மக்கள் பெற்ற கருத்துக் கருவூலமும் உணர்ச்சிப் பெருக்கும் அளவிடற் கரியனவாகும்.

சுயமரியாதை இயக்கக் கருத்துக்களைப் பரப்பியவர்களிலே முன் வரிசையில் சிறப்பிடம் பெற்றவராகப் பணியாற்றிய தோழர் சீவானந்தம் அவர்கள் தொடர்ந்து முற்போக்குக் கருத்துக்களை மக்களிடம் செலுத்தி அவர்தம் வாழ்க்கை செம்மையுறப் பாடுபட்டு வந்தார்.

பொதுவுடைமை இயக்கத்திற்கு அவர் ஆற்றிய அரும்பணியின் காரணமாக மக்கள் பெற்ற தெளிவும் ஆதிக்கக் காரர்கள் கொண்ட மருட்சியும் கொஞ்ச மல்ல.

ஓயாமல் தமது சக்தி முழுவதையும் பொதுத் தொண்டுக்கே அளித்த பெரு வீரராக அவர் விளங்கி வந்தார்.

எதிர்ப்புக்களைக் கண்டு துளியும் அஞ்சும் போக்கு அவரை அணுக அஞ்சும்.

கொள்கையிலே அவருக்கிருந்த அழுத்தமான நம்பிக்கையும் அதனை எடுத்து விளக்குவதில் அவர் பெற்றிருந்த திறமையும் எவரும் கண்டு வியக்கத் தக்கனவாக இருந்தன:

எந்தப் பொதுநலத் தொண்டரையும் கலங்க வைக்கக்கூடிய எத்தனையோ வகையான கொடுமை மிகு அடக்கு முறைகளை அவர் கண்டவர்; அவைகளைத் தாங்கிக் கொண்டவர்; வென்றவர்!

அவருடைய உடல் நலம் சில ஆண்டுகளாகப் பாதிக்கப்பட்டு, 'இளைத்துக் களைத்துப் போயினுர் என்ருலும், உணர்ச்சி அவரை எப்போதும் செயலாற்றும் வீரராகவே இருக்கச் செய்தது. அந்த உழைப்பு வீண் போகவில்லை என்ருலும் அந்த ஓயாத உழைப்புத்தான் அவர் உயிரைக் குடித்தது என்று கூறலாம்.

தன்னைப் பற்றிய சிந்தனை துளியு மற்ற முறையில் தொண்டாற்றிய அந்தத் தூயரின் மறைவு நீக்கப்பட முடியாத துயரத்தை நம் அனைவர் உள்ளத்திலும் மூட்டி விட்டிருக்கிறது. அவர் ஆற்றிய அருந் தொண்டின் சிறப்பினையும் பயனையும் எண்ணி எண்ணி நாம் சிறிதளவு ஆறுதல் தேடிக் கொள்ளலாம் என்ருலும் இந்தத் துயரம் நெஞ்சை விட்டு அகலுவது மிகவும் கடினமாகும்.

சமதர்மச் சிறப்பினுக்குப் பணியாற்றி வந்த தோழர் சீவானந்தம் அவர்கள் தமிழ் மொழிக்கும் நல்லதோர் தொண்டாற்றி வந்தார்கள்.

அவர்களின் கொள்கை விளக்கம் வெண்கலக் குரல் ஒலியுடன் தமிழகத்துக்குப் பல ஆண்டுகள் கிடைத்து வந்தது.

அவருடைய 'சம்மட்டி அடிகளைப்' பெற்றுச் சரிந்த சூதுக் கோட்டைகள் பலப்பல!

அவருடைய ஓயாத உழைப்பினுல் மக்கள் மன்றம் பெற்ற உயர்தனிக் கருத்துக்கள் பலப்பல!

அவர் பேசாத நாளில்லை ; போகாத ஊர் இல்லை ; காணாத எதிர்ப்பு இல்லை ! பெறாத சீர்மிகு வெற்றியும் இல்லை.

ஒளிவிடு கனைபோல விளங்கி வந்தார் ; அந்த ஒளியால் தமிழகம் புதுப் பொலிவு பெற்றது !

ஒளி மறைந்ததால் அவருடைய இல்லமாக அவர் கொண்டிருந்த தமிழகம் இருள் சூழ்ந்த நிலை பெற்றிருக்கிறது ! !

## செட்டி நாட்டரசர்
# திரு. எம். ஏ. முத்தையா செட்டியார்

முதன் முதலில் - 'இந்தி கூடாது' - என்று போராட்டம் நடத்திய போது, நீண்ட புகழ் கொண்ட நெடிய உருவத்தினரான (செட்டி நாட்டு அரசர்) திரு. முத்தையா செட்டியார், சென்னை - தங்கசாலையி லிருந்து ஐலண்டு மைதானம் வரையில் - தூக்கிக் கொடுத்த தமிழ்க் கொடியைத் தோளின் மீதே சுமந்து வந்தவர் ஆவார்.

அவர் எந்த இயக்கத்தின் சார்பில் கொடி தூக்கி வந்தாரோ அந்த இயக்கம்தான் இன்று ஆட்சி மன்றத் தைக் கைப்பற்றி யிருக்கிறது - இருந்த போதிலும் கொடி தூக்கியதை நினைவு படுத்தி ஆட்சி மன்றத்தில் அவர் பாத்தியதை கொண்டாட வில்லை; பங்கு கேட்க வில்லை.

அவர் தமிழுக்குத் தொண்டு செய்தார்; தமிழ் உணர்வோடு பாடுபட்டார்.

அவர் காங்கிரசுக் கட்சிக்குச் சென்று விட்ட போதி லும் மொழிப் பிரச்சினை வந்தபோது, தமிழ் மொழிக் கும் ஆங்கில மொழிக்கும் ஆதரவு காட்டத் தயங்க வில்லை.

இந்தி மொழியின் ஏகாதிபத்தியத்தை அவர் கண் டிக்கத் தவறியதில்லை!

தமிழகச் சட்ட மன்றத்தில், அப்போது நான் எதிர்க் கட்சியில் அமர்ந்திருந்தேன்.

'திரு. முத்தையாச் செட்டியாரை (சட்ட மன்றத் துக்கு) அனுப்பி இருக்கிருயே, உன் கருத்துடன்தானே அனுப்பி யிருக்கிருய் ?' - என்பார்கள்.

முன்னுள் அமைச்சர் திரு. கக்கன் கூட, "சேம் சைட் கோயல்) போடுவதைப் போல, காங்கிரசில் சேர்ந்து கொண்டு எங்கள் சார்பில் பேசாமல், எங்களைக் கண்டித் துப் பேசுகின்ருர்."—என்று கூறுவார்

அந்த அளவுக்கு மொழிப் பிரச்சினையை உணர்ந்து, தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் வாதாடியவர் திரு. முத்தையா செட்டியார் என்பதை உணர்ந்து - அவர் படத்தைத் திறந்து வைப்பதால் தான் அவருக்குப் புகழ் கிடைக்கும் என்பது இல்லையாதலால் - அவர் படத்தைத் திறந்து வைப்பதன் மூலம் அதைப் பார்ப்பவர்களும் கேட்பவர்களும் பொதுத் தொண்டு ஆற்றவும் அதனுல் புகழ் அடையவும் வழி வகுக்கும் எனக் கருதி திரு. முத்தையா செட்டியார் படத்தைத் திறந்து வைக் கிறேன்.

(பச்சையப்பன் கல்லூரியில் திரு முத்தையா செட்டியாரின் படத் திறப்பு விழாவில் அறிஞர் அண்ணு.)

## திட்டக்குழு உறுப்பினர்
# திரு. ஆர். வெங்கட்டராமன்

வெங்கட்டராமன் கொண்டுள்ளது போன்ற இனிய இயல்புகள் அரசியல் உலகு முழுவதற்கும் வந்தால் தான் சனநாயகம் பக்குவம் பெற்றுக் கனிய முடியும்.

ஒரு சிலருக்கு இடையேயுள்ள நட்பை மட்டும் கொண்டு கணக்கிடாமல் - ஒருவரது நடவடிக்கையால் நாட்டுக்கு என்ன நன்மை கிடைத்திருக்கிறது என்ற அடிப்படையில் கண்ணோட்டம் இருக்கவேண்டும்.

அந்த அடிப்படையில் வெங்கட்டராமன் மிகச் சிறந்த தொண்டை நாட்டுக்குச் செய்திருக்கிறார்.

......வெங்கட்டராமன் கோபித்துக் கொண்டு நான் பார்த்ததில்லை.

தொழில் துறையை வெங்கட்டராமன் வளர்த்தது, எந்தத் தத்துவத்தின் அடிப்படையிலும் அல்ல. ஒரு வேளை தத்துவத்தின் அடிப்படையில் வளர்த்திருந்தால், தொழில் வளராது என்று அவர் நினைத்திருக்கக் கூடும். அவருக்குத் தத்துவம் தெரியாது என்பது இதற்குப் பொருள் அல்ல.

கல்லூரியில் படித்த போதே தீவிரவாதியாக இருந்த அவர் - உலகின் முற்போக்குக் கொள்கையை நிச்சயம் அறிந்திருப்பார். அதோடு தொழிலாளர் இயக்கத்திலும் அவர் பங்கு பெற்றவர்.

ஆகவே, அவர் வளர்த்த தொழில்துறை ஒரு சில ருக்குப் பயன்பட்டது என்பதிலிருந்து மாற்றி, தொழி லாளருக்கு நன்மை செய்யும் திருத்தங்களை நாங்கள் செய்தால், - நிச்சயம் அவர் அகமகிழ்ச்சி அடைவார் என்றே நம்புகிறேன்.

ஏனெனில், அவர் மாளிகையில் பிறந்து கோட்டைக் குள் குடியேறியவர் அல்ல; தொழிலாளர் இயக்கத்திற்கு நீண்ட நாள் தொண்டாற்றியவர்.

ஆகவே, பல்லவிக்கு அடுத்தது அநுபல்லவி என் பது போல் அவர் முழு அளவில் வளர்த்த தொழில் துறையை - அதே அளவில் வளர்ப்பதோடு - அதன் பயனைத் தொழிலாளர் அநுபவிக்கவும் நாங்கள் ஈடுபடு கிறோம்.

...வெங்கட்டராமன் அவர்கள் சேலம் இரும்பாலைக் காக உலகம் முழுவதும் சுற்றினார். மின்சாரத்தின் மூலம் உருக்குத் தயாரிக்க முடியும் என்ற அமெரிக்காவின் புதிய பரிசோதனையைப் பற்றியும் அவர் ஆராய்ந்தார்.

நான் மூன்பு அதிகமாக அமைச்சர்கள் அறைக்குச் சென்றதில்லை. வெங்கட்டராமன் அமைச்சராக இருந்த போது அவரது அறைக்குச் சென்று பார்த்திருக்கிறேன். ஓர் இரும்புத் துண்டைக் காட்டி 'இதுதான் சேலம் இரும்பு!' - என்று கூறுவார்.

......சர்க்கார் விதிமுறைகள் இடந்தருமானால், அந்த இரும்புத் துண்டை வெங்கட்டராமனிடம் கொடுத் தனுப்பி டெல்லியில் எந்த நேரமும் அவர் நினைவில் இருக்கும்படி மாட்டிவைத்துக் கொள்ளச் சொல்லலாம்.

சேலம் இரும்பாலைத் திட்டம் பற்றிய ஐயப்பாடுகளை யெல்லாம் நீக்கத்தக்க வகையில் புள்ளி விவரங்களையும் - காரணங்களையும் அவர் அறிந்து வைத்திருக்கிறார்.

இனி, திட்டக் கமிஷன் பயனுள்ள நிலையில் இயங் கும் என்று நம்புகிறோம். அத்தகைய பயனுள்ள இடத்

துக்குச் செல்லும் வெங்கட்டராமன் நமது மாநிலத்திற்குப் பயன்தரும் காரியங்களை நிச்சயம் செய்து தருவார் என்று அவரை வாழ்த்துகிறோம்; பாராட்டுகிறோம்.

(—: 20-7-'67 மேல் சபையில்)

தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு முக்கிய காரணம் - பொருளாதார அமைப்பு இவ்வளவு பெரிய மாறுதல் அடைந்ததற்கு முழுப்பொறுப்பு - வெங்கட்டராமனையே சாரும் என்பதைத் தயக்கமின்றி ஒப்புக் கொள்கிறேன்.

வெங்கட்டராமன், திறமை மிக்கவர்; இனிய பண்புகள் படைத்தவர்'......

தமிழகத் தொழில் வளர்ச்சியின் கர்த்தாவாக அவர் இருந்தார். இப்போது அவர் (திட்டக்குழு உறுப்பினராக) டில்லி செல்லுவது தமிழகத்திற்கு இழப்பு என்றாலும் அகில இந்தியாவுக்கும் இலாபம் என்பதில் மன நிறைவு பெறலாம்.

இந்தியாவின் எந்த ஒரு பகுதியும் எந்தத் துறையிலும் மிகப் பலவீனமாக இருப்பது நல்லது அல்ல. அப்படி இருப்பது இந்தியா முழுவதும் வலுப் பெற்று - வளர்ச்சி பெற்றிருப்பதாகச் சொல்லமுடியாது. திட்டக்குழு உறுப்பினராகப் பொறுப்பேற்க இருக்கும் நண்பர் வெங்கட்டராமன் இதை நினைவில் கொண்டு தமிழகம் பொருளாதாரத் துறையிலும் தொழில் வளர்ச்சித் துறையிலும் மேம்பாடு அடைவற்குப் பாடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவர் எங்குச் சென்றாலும் எந்தப் பதவியில் இருந்தாலும் தாம் பிறந்த மண்ணை (இடத்தை) மறந்துவிடக் கூடாது; மறக்கமாட்டார்கள்.

அதைப்போலவே, வெங்கட்டராமன் தமிழகத்தின் தொழில் மேம்பாட்டுக்கு, பொருளாதார வளர்ச்சிக்குத் தொடர்ந்து பாடுபடுவதன் மூலம் அநீதி துடைக்கச்

செய்ய வேண்டும். அவரால் துவக்கப்பட்டு இன்னும் முற்றுப் பெருமல் இருக்கிற சேலம் இரும்பாலை, தூத்துக்குடி துறைமுகம், சேதுக் கால்வாய் போன்ற திட்டங்கள் நிறைவேற்றி முடிக்கப்பட அனைத்தையும் அவர் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நாம் கொடுத்துப் பழக்கப்பட்டவர்கள். இருப்பதை யெல்லாம் கொடுத்திருக்கிருேம்; வரலாறு தரும் உண்மை இது. குறிப்பாக டெல்லிக்கு நாம் கொடுத்துத் தான் பழக்கப்பட்டவர்கள்; அதிகம் அங்கிருந்து பெற்றுப் பழக்கப் பட்டவர்கள் அல்ல.

இன்று மறுபடியும் டெல்லிக்குக் கொடுக்கிருேம்: தமிழகத்தின் விலை மதிக்க முடியாத கருவூலத்தை—நண்பர் வெங்கட்டராமனை—திட்டக் குழுவுக்குக் கொடுக்கிருேம்.

இனிய பண்புகளும், பழகுவதற்குரிய நற்பண்புகளும், சனநாயக மரபுகளில் பற்றும் மிக்கவர் வெங்கட்டராமன்.

நடந்து முடிந்த பொதுத் தேர்தலில் தம்மைத் தோற்கடித்து வெற்றி பெற்ற எங்கள் கட்சி வேட்பாளருக்கு (திரு எஸ். டி. சோமசுந்தரத்திற்கு) - தேர்தலில் வெற்றி பெற்றமைக்காகப் பாராட்டுத் தந்தி அனுப்பிய—மகிழ்ச்சி தெரிவித்த — ஒரே காங்கிரசுத் தலைவர் திரு. வெங்கட்டராமனே.

இத்தகைய சனநாயகப் பண்புகள் மட்டும் அரசியலில் உள்ள அனைவருக்கும் இருந்து விட்டால்.........

தவருன கொள்கைகளைக் கண்டிக்கத் தயங்காதவர் என்பதை அவர் மத்திய அரசின் ரூபாய் மதிப்புக் குறைப்புத் திட்டத்தைக் கண்டித்ததிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

திட்டக் குழுவுக்கு, வாதாடும் வல்லமை மிக்க ஒருவரை அனுப்பி யிருக்கிருேம்; வழக்கம்போல டெல்லி

இங்கிருந்து திறமைசாலி ஒருவரை அபகரித்துக் கொண்டு விட்டது !

திறமை மிக்க வெங்கட்டராமன் தமது புதிய பொறுப்பில் புகழ் பெற்று விளங்க வாழ்த்துகிறேன்.

(—:1—8—'67 - இல் சென்னை - ஆபட்ஸ்ரி மாளிகையில் திரு. ஆர். வி.க்கு என்று தொழில் துறைத் தலைவர்கள் நடத்திய வழியனுப்பு விழாவில்.........)

# சென்னை உயர் நீதி மன்றத் தலைமை நீதிபதி
# திரு. எம். அனந்த நாராயணன்

தமிழ் எல்லாத் துறைகளிலும் ஆட்சி செய்ய அடிப் படைத் தத்துவத்துக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கத் தான் இந்தச் சட்டச் சொற்பொருள் களஞ்சிய நூலினை வெளியிடுகிறோம்.

இவ்விழா, நாம் எடுத்துக் கொண்ட முயற்சிகளில் எல்லாம் மிக முக்கிய முயற்சியாகும்.

இவ்விழாவிற்குத் தலைமை தாங்கும் நமது உயர் நீதி மன்ற நீதிபதி திரு. அனந்த நாராயணன் அவர்கள் நல்ல தமிழ்ப் பற்று உடையவர்கள். இந்த நூலின் தமிழ்ச் சொல் ஆக்கத்திற்குத் தமிழோடு இரண்டறக் கலந்து பெரும் பணியாற்றிப் பெருந் துணையாக இருந்திருக் கிறார்கள்.

நாடும் நாமும் அவருக்கு மிகவும் கடமைப்பட் டிருக்கிறோம்.

சட்டத் துறையில் - சட்ட நுணுக்கத்தில் - மிகவும் உயர்ந்திருப்பது போல் தமிழ்ப் பற்றிலும் நமது தலைமை நீதிபதி அவர்கள் மிகவும் உயர்ந்தவர்கள்.

தமிழில் முதன் முதலில் வெளியிடப்பட்ட கதைப் புத்தகத்தை எழுதியவர் இவருடைய தந்தையார் (திரு. அ. மாதவையா!) ஆவார்.

அ. இ—7.

விரல் விட்டு எண்ணக்கூடிய நல்ல தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்தவர்களில் இவரும் ஒருவர்.

இவர்கள் எல்லாரும் சேர்ந்து நல்ல முறையில் சட்டத் தமிழ்ச் சொல் ஆக்கியது குறித்து, தமிழகத்திற்கு ஒளி மயமான எதிர்காலம் இருக்கிறது என்பது உள்ளங்கை நெல்லிக் கனிபோலத் தெள்ளத் தெளிவாகத் தெரிகிறது.

(—: 14 - 4 - '67 - இல், சென்னை, இராசாசி மண்டபத்தில், சட்டத் தமிழ்ச் சொற்பொருட் களஞ்சிய நூல் (முதற் பகுதி) வெளியீட்டு விழாவில் அறிஞர் அண்ணா.)

# திரு. சி. பா. ஆதித்தனார்

தமிழ் நாடு அரசியலில் பொதுவாழ்வில் 35 வருடங்களாகத் தொடர்ந்து இருந்து வருபவர் ஆதித்தனார்.

காங்கிரசுக் கட்சியிலிருந்து திராவிடர் கழகம் பிரிந்த பின் திருக்கழுக்குன்ற மாநாட்டிற்கு அவர் வந்து இருந்தார்.

தமிழ்நாட்டில் தமிழ்மக்களிடத்தில் தமிழ்ப் பண்புக்கு உகந்த வகையில் 'தமிழன்' என்ற பத்திரிகையை அப்போதே நடத்தி வந்தார். அந்த நாளிலேயே பத்திரிகை நடத்தும் முழுப் பொறுப்பையும் ஏற்று எல்லாத் தரப்பு மக்களும் பாராட்டத் தக்க வகையில் எல்லாரும் விரும்பிப் படிக்கும் வகையில் பத்திரிகைத் தொழிலைத் தொடங்கினார்.

செயல் திறமை, விடா முயற்சி, பொறுத்திருக்கும் தன்மை, தோல்விக்குப் பின்தான் வெற்றி என்னும் நம்பிக்கை இவற்றோடு முன்னேறினார்.

அவரைப் பார்த்தவர்களில் பலர் அவரைச் சட்டம் பயின்று பட்டம் பெற்றவராகக் கருதவில்லை.

பார் - அட்-லா பட்டம் பெற்றவர்கள் கடன் வாங்கியாவது அதற்குரிய ஆடை வாங்கிப் போடுவதையே விரும்புகின்றனர்.

இலண்டனில் படித்தும் மேல் நாட்டுக் கலாசாரத் தொடர்புள்ள மலேசியாவில் தொழில் நடத்தியும் தமிழ்

நாட்டுக்கு வந்தவுடன், நடை, உடை எல்லாம் தமிழ் மரபுப்படியே மாற்றிக் கொண்டார்.

நான் (அண்ணா) டெல்லிக்குப் போனபோது ஒருவர் என்னிடம்,

“உங்களுக்கு ஆங்கிலம் தெரியுமா ?”

—என்று கேட்டார்.

“ஏதோ கொஞ்சம் தெரியும்”

—என்று பதில் சொல்லி வைத்தேன் !

வேட்டி, சட்டை, அணிந்தால் ஆங்கிலம் தெரியாது என்ற கருத்து வந்து விட்டது.

அவரிடம் (ஆதித்தனாரிடம்) எளிமையோடு உறுதியும், எடைபோடும் தன்மையும் இருப்பதை அண்மையில் நெல்லைச் சீமையில் அவரோடு சுற்றுப் பயணம் செய்கையில் கண்டேன்.

“நெல்லை மாவட்டத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு 13 (பதின் மூன்று) இடங்கள் கிடைக்கும். ஒன்று குறைந்தால் பொறுத்துக் கொள்ளுங்கள். அதற்கும் குறைந்தால் நான் சொல்வதை இனி நம்ப வேண்டாம்.”

—என்றார்.

எனக்கு முதலில் சற்று எரிச்சலாக இருந்தது.

“நெல்லை மாவட்டத்தில் 13 இடங்களா ?... தேசியத்திற்கு நிலைக்களனாகத் திகழ்ந்த மாவட்டம் ஆயிற்றே! அதோடு சென்னையில் இருந்து வெகு தொலைவில் இருப்பதால் கழகப் பிரச்சாரம் சரியாக அங்குப் போதிய அளவு போக வில்லையே!”

—என்று நினைத்தேன்.

ஆனால் அவர் கூறியபடி 14 (பதினான்கு) இடங்கள் தி. மு. கழகத்திற்குக் கிடைத்தன.

மக்களுடைய மன நிலையை அவர் சரியாகக் கணக்கிட்டுக் கூறியிருக்கிறார்.

தமிழ் நாட்டில் தி. மு. கழகத்திற்கு இவ்வளவு இடம் கிடைக்கும் என்று முதலில் எனக்குச் சரியாகச் சொன்னவரும் ஆதித்தனார் தான்.

அடக்கி ஒடுக்கப்பட்ட சமயத்தில் (மதத்தில்) இருந்துதான் உன்னதமான மனிதர்கள் தோன்றுவார்கள் என்று மூதறிஞர்கள் கூறி யிருக்கிறார்கள்.

வைரம் என்பது நீண்ட நெடுங் காலத்திற்கு முன்பு பூமியின் அழுத்தத்தால் கீழே அடங்கி ஒடுங்கிக் கிடந்த கரித் துண்டுதான்.

...அடக்கி ஒடுக்கப்பட்ட சமுதாயத்தில் இருந்து தோன்றிய வைர மணிகளில் ஒருவர் காமராசர்; மற்றொருவர் ஆதித்தனார்.

ஆதித்தனாரைச் சபாநாயகராகத் தேர்ந்து எடுத்தது பற்றிப் பொது மக்களும் என்னிடம் நன்றி தெரிவித்துள்ளார்கள்.

சட்ட மன்றத்தில் பல நல்ல தமிழ்ச் சொற்களைப் புகுத்தி யுள்ளார்.

முன்பு 'கனம் மந்திரி'—என்று கூறுவதற்குப் பதில் 'மாண்பு மிகு' என்ற சொல்லை வழக்கத்திற்குக் கொண்டு வந்துள்ளார்.

நமது மாதவனையும் (சட்ட அமைச்சர்), சாதிக் பாட்சாவையும் (மருத்துவத் துறை அமைச்சர்) எப்படிக் 'கனம்' என்று சொல்வது?" (சிரிப்பு)

(இவ்விரு அமைச்சர்களும் உடல் மெலிந்தவர்கள் என்பதையே இவ்வாறு நகைச்சுவையோடு கூறுகிறார் அண்ணா!)

ஆதித்தனார் சபாநாயகராக அமர்ந்திருப்பது சட்ட மன்றத்தில் தமிழ்த் தாய் வந்திருந்து பாடம் சொல்லிக் கொடுப்பதுபோல் இருக்கிறது.

...முந்திய (காங்கிரசு) ஆட்சியில் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். யாரிடமும் பேசமுடியாத தனிமைச் சிறையில் அடைக்கப்பட்டார்.

அதனால் உடல் நலம் குறைந்தது. டாக்டர்கள் போட்ட ஊசிகளைவிட, கொடுத்த மருந்துகளைவிட, தேர்தல் வெற்றி அவருக்கு நல்ல உடல் நலத்தை அளித்திருக்கிறது.

அவர் 'பாரிஸ்டர்' உடையில் சட்ட மன்றத் தலைவர் இடத்தில் அமர்ந்திருக்கும் போது 15 வயது குறைவாகத் தெரிகிறது.

ஆதித்தனாரை உங்களுடன் சேர்ந்து நானும் பாராட்டுவதில் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன்.

(—: சென்னையில், தினத்தந்தி, மாலைமுரசு, இராணி—ஏடுகளின் ஊழியர்கள் சட்டப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்ற திரு. சி. பி. ஆதித்தனாருக்கு அளித்த வரவேற்பு விழாவில் அறிஞர் அண்ணா)

# நாவலர். இரா. நெடுஞ்செழியன்

**நா**ம் நமது குடும்பத்தின் முழு வலிவும், பூரணப் பொலிவும் திருச்சி மாநில மாநாட்டில் விளங்கிடும் வகையில் கூடிட வேண்டாமா ?

களம் பல சென்று கடும் போரில் ஈடுபட்டுத் தியாகத் தழும்புகளை ஏற்றிருக்கிறோம். தாயக மீட்புப் பணிக்காக நம்மை நாமே ஒப்படைத்து விட்ட நிலையினராநோம்.

பெற்ற தழும்புகளைக் கண்டு பெருமிதம் அடைந்திட மட்டுமல்ல; இழித்தும் பழித்தும் பேசிடும் இயல்பினரை இனி நாம் பொருட் படுத்தப் போவதில்லை என்பது பற்றிப் பேசிட மட்டுமல்ல; எதிர்ப்போர்—ஏளனஞ் செய்வோர் ஆகியோரின் திட்டத்தைத் தகர்த்தெறிய வழி வகை காண மட்டுமல்ல; நமது 'வரலாறு' பற்றிய ஆய்வுரையை நாட்டினர் அறியச் செய்ய மட்டுமல்ல; சீரிய நம் கொள்கை வெற்றி பெறத் தக்க செயல் திட்டம் காணக் கூடுகிறோம்! இதற்குச் சிந்தையின் உறுதிதான் சிறப்புறத் தேவையே தவிர, சிங்கார அமைப்புகளும் செல்வப் பெருக்கமும் அல்ல!

களம் செல்லத் துடிப்போருக்குக் கட்கம் முக்கியமே தவிர, கட்டில்—தந்தத்தாலா? தங்கத்தாலா? வட்டிலில் - பாலா? தேனா? வனிதையின் மொழி - யாழா? குழலா? என்பதல்ல முக்கியப் பிரச்சினைகள்.

வதைபடும் தாயகத்தைக் காண்கிறோம் - விடுதலைக்கான வழி வகை காணக் கூடுகிறோம்.

கஷ்ட - நஷ்டம் ஏற்கும் உள்ளம் படைத்தோர் கூடுகிறோம்.

நாவலர் நெடுஞ்செழியனைக் கழகக் காவலராகக் கொண்டு கூடுகிறோம்!

நாவலர் - நம் கழகக் காவலர்!

தம்மிடம் ஒப்படைக்கப் பட்டுள்ள படை ஒப்புயர்வற்றது; உளத் திண்மை கொண்டது என்பதை உணரத்தக்க அளவிலும் வகையிலும் ஆற்றல் மிக்கதம்பி!

—: 8 - 4 56 'திராவிட நாடு'

நமது (முன்னுள்) பொதுச் செயலாளர் - நாவலர் நெடுஞ்செழியன் - அகமும் புறமும் நன்கு பயின்றவர்; எனவே புறநானூற்றுக் காட்சிகளைத் துணைக்கு அழைத்துக்கொண்டு திருச்சிக்கு (மாநில மாநாட்டு ஏற்பாடுகளைக் கவனிக்கச்) சென்றுள்ளார்.

"பந்தல் வேலை எந்த அளவில் உள்ளது? பாய்களை வாங்கி விட்டீரோ? பணி மனையில் இன்று என்ன நிலைமை? கொடி மரம் உயரம் எவ்வளவு?"

—இப்படி யெல்லாம் கேட்டுக் கொண்டும், ஒவ்வொரு வேலையையும் கவனித்துக் கொண்டும் இருக்கிறார். அவர் உடனிருப்பதால் ஏற்படும் உற்சாகம், ஏற்கெனவே 'சிட்டுப்' போல் பறந்து பணியாற்றிர கொண்டு வரும் திருச்சித் தோழர்களுக்கு மேலும் உரமும் திறமும், தரமும் தருகிறது; வேலை மும்முரமாக நடைபெற்ற வண்ணம் இருக்கிறது.

—:15 - 4 -'56 - 'திராவிட நாடு'

நாவலர் - நல்ல தமிழறிந்தவர்; இலக்கண இலக்கியங்களை முறையாகப் பயின்றவர்; அவர் ஒரு நடமாடும் பல்கலைக் கழகம்!

# கலைஞர். மு. கருணாநிதி

திரைப் படக் கதை வசனத் துறையில் தம்பி கருணாநிதி பெற்ற வெற்றியைப் பாராட்டி விருது தந்திருக்கிறார்கள்.

அவர் அமைச்சராகத் தேர்ந்தெடுக்கப் பட்டது சரியா, தவறா என்று வீண் ஐயப்பாடு கொள்பவர்கள் இருக்கலாமே தவிர, இந்த விருது வழங்கப்பட்டதில் எவருக்கும் எள்ளளவும் சந்தேகம் இருக்க முடியாது. அந்த அளவுக்கு இந்தத் துறையில் சிறப்பான முறையில் ஈடுபாடு கொண்டிருப்பவர் அவர்.

கலையின் நேர்த்தியைக் கட்டிக் காப்பதோடு, தரப்பட்டுள்ள பொறுப்பையும் கலையின் நேர்த்தியோடு சிறப்பாக நிறைவேற்றி வருகிறார் என்பதை அறிந்து கலையுலகத்தினரும் மகிழ்ச்சி அடைகிறார்கள்.

எதையோ எண்ணிக் கொண்டு எதை எதையோ செய்பவர்கள் கலைஞர்கள் என்று எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், கலைஞர் கருணாநிதி அவர்கள், கலையில் ஈடுபாடு கொண்டு நேர்த்தியாகச் செய்வது போலவே ஆட்சியிலும் கலையின் நேர்த்தியை இணைத்துக் காரியமாற்றி முன்னேற்றம் கண்டிருக்கிறார். அப்படிப் பட்டவர் விருது பெறுவதால் நான் தனிப்பட்ட

முறையில் பெருமை அடைவதை நீங்கள் அனுமதி அளிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

[—: 22 - 4 - '67 - இல், சென்னையில் நடந்த தமிழ் நாடு சங்கீத நாடக சங்க விருது விழாவில் அறிஞர் அண்ணா.]

# திரு. காஞ்சி. மணிமொழியார்

காஞ்சி மணிமொழியாருக்கு 68 வயதாகி விட்டது என்று நண்பர்கள் கூறியபோது இவ்வளவு வயதாகி விட்டதா என்று மலைத்துப் போவோம். காரணம் அத்தகைய இளமைத் தோற்றத்துடன் அவர் இருப்பவர்.

இதுவரை நாட்டுக்கு அவர் எந்தவிதமான தொண்டாற்றினரோ, அதே தொண்டைத் தொடர்ந்து ஆற்றி, எந்த விதமான இலட்சிய நாட்டைக் காண வேண்டும் என்று கனவு கண்டாரோ, அதைக் காணும் வரை இடை விடாது பாடுபட வேண்டும் என்று அவரை வேண்டுவதுதான் நாம் அவருக்குத் தெரிவிக்கும் பாராட்டு! அதைத்தான் அவர் எதிர் பார்ப்பார்.

இத்தனை வயதாகி விட்ட பிறகு நம்மிடம் அவர் எதிர்பார்ப்பது வேறு எதுவும் இருக்காது. ஏனெனில், இளமையிலேயே அவர் எதையும் எதிர் பார்க்கவில்லை.

கழகம் எந்தவிதமான கட்டளை யிட்டாலும் அதை நிறைவேற்றியவர் மணி மொழியார்.

தடியடி படுவதுதான் தமிழ் காக்கும் முறை யென்ருல் - தடியடிபடத் தயாராஞர்!

சிறை செல்வதுதான் செந்தமிழ் காக்கும் வழி யென்ருல் - சிறை செல்லவும் தயாராஞர்!

காடு மேடு சுற்றிப் பிரச்சாரம் செய்வதுதான் தமிழின் பெருமையை உணரச் செய்யும் என்ருல் - அப்படிக் கடுமையான பிரச்சாரத்தைச் செய்யவும் தயாராஞர்!

ஏடுகளை வெளியிடுவதுதான் இன் தமிழை வளர்க்கும் பணி என்றால் - அவர் ஏடுகளை நடத்தி யிருக்கிறார்; இதழ்களை வெளியிட்டிருக்கிறார்.

மாநாடுகளைக் கூட்டி யிருக்கிறார்; தமிழ் ஆர்வத்தைக் காட்டி யிருக்கிறார்.

இப்படிப்பட்டவர்களால் - மிகச் சாதாரணமானவர்களால் - துவக்கப்பட்ட தி. மு. கழகம்தான் இன்று ஆட்சிப் பொறுப்பை ஏற்று இருக்கிறது.

முசுலீம் பெருங் கவிஞர் இக்பால் ஒரு கவிதை மூலம் கூறினார்.

'சிட்டுக்குருவிகள் வல்லூறைப்போல் கொத்தும் திறனற்றவை.

கூர்மையான நகம் அற்றவை.

வல்லூறைவிடப் பலத்தில் குறைந்தவை.

ஆனால், ஒரு காலம் வரும்.

சிட்டுக் குருவிகள் வல்லூறை வெல்லும் காலம் வரும்.

பாமர மக்கள் பாராளும் காலம் வரும்!'

—என்று இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் கவிஞர் இக்பால் கூறினார்.

சிட்டுக்குருவிகள் வல்லூறை வென்றது போல் பாமரர்கள் இப்போது பாராளுகிறார்கள்.

சிட்டுக்குருவிகள் வல்லூறை வென்றது மட்டுமல்ல; சிட்டுக் குருவிகளின் ஆட்சியை எப்படிக் கவிழ்ப்பது என்று வல்லூறுகள் யோசித்துக் கொண்டிருக்கின்றன இப்போது.

இந்தச் சிட்டுக்குருவிகளை ஆட்சிக்கு வரவிடாமல் தடுக்கும் ஆற்றலே கூட வல்லூறுக்கு இல்லாத போது- அதைக் கவிழ்ப்பது எப்படி?

'கவிழ்ப்பேன்' - எனப் பேசுவது ஆசையின் விளைவே தவிர ஆகக் கூடிய காரியம் அல்ல.

நாங்கள் ஆட்சியில் பொறுப்பை ஏற்ற பிறகும், 'நாம் சிட்டுக்குருவிகள் தான்.'-என்பதை மறக்கவில்லை.

அதை மறந்தால் நாங்கள் கவிழ்ந்தோம்; அதை மறக்காதவரை நாங்கள் கவிழமாட்டோம்.

......வெற்றிப் பாதையில் கழக ஆட்சி செல்கிறது; கழக ஆட்சியில் நாடு நலம் நோக்கிச் செல்கிறது.

எரிகிற விளக்கின் திரியை அந்த விளக்கே தூண்டி விடாது. அது வேண்டிய அளவு எரியும்படி பக்கத்தில் இருப்பவர்கள் தான் தூண்டி விட வேண்டும்; அதனை காக்கவேண்டும்.

இருள்சூழ்ந்த தமிழகத்தில் (1967) மரர்ச்சு - 6 ஆம் தேதி, அகல் விளக்கு ஏற்றி வைக்கப்பட்டது. அந்த அகல் விளக்குத்தான் தி. மு. க.!

அந்த விளக்குக்கு வேண்டிய எண்ணெய் ஊற்றவும்' அதைத் தேவையான அளவு எரியச் செய்யவும், காற்று அடித்தால் அணையாமல் பார்த்துக் கொள்ளவும் காஞ்சி மணிமொழியாரைப் போல் பலர் இருக்கிறார்கள்.

அந்தக் காலத்தில் 15 பேர்தான் முதன் முதலில் இந்தி எதிர்ப்புப் போராட்டம் நடத்தினோம்.

'இந்தி ஒழிக!' 'தமிழ் வாழ்க!' - என்று கூறி வீதி வழியே செல்வோம். வேடிக்கை பார்க்கக்கூட வீட்டுக்குள்ளிருந்து ஆள்வரமாட்டார்கள்.

ஆனால், இப்போது, 'இந்தி வாழ்க!' என்று கூற இந்திக்காரர்களே வெட்கப்படுகிறார்கள்.

நான் ஆட்சிப்பீடத்தில் அமர்ந்தவுடன் தனக்கு 20 வயது குறைந்து விட்டதாகக் காஞ்சி மணிமொழியார் கூறினார். ஆனால், எனக்கு அன்று 20 வயது அதிகமாகி விட்டது.

மார்ச்சு மாதம் 6 ஆம் தேதி மந்திரி பதவியில் கையெழுத்துப் போட்டவுடன் எனக்கு இல்லாத கவலைகள் எல்லாம் வந்து விட்டன.

......மார்ச்சு 6 ஆம் தேதிக்கு முந்திய இரவு எனக்குத் தூக்கம் வரவில்லை. என் கண்முன் தெரிந்த தெல்லாம் இலட்சக்கணக்கான மக்களின் துன்பம் தோய்ந்த முகம்தான் !

[— : 5-9-'67இல் காஞ்சி மணிமொழியார் பாராட்டு விழாவில்.]

## கலைவாணர்

# திரு. என். எஸ். கிருஷ்ணன்

இந்த நாளில் கலைவாணருடைய வாழ்க்கை பற்றியும், அவரால் வாழ்வு பெற்றவர்கள் பற்றியும், அவராலே கலைத்துறைக்குக் கிடைத்த பெருமை பற்றியும் பேசுகிறோம்.

கலைவாணர் தமக்குப் புகழ்தேடிக் கொண்டது மட்டுமின்றி மற்றவர்களுக்கும் வழி வகுத்துக் கொடுத்தார்.

கலைவாணர் நகைச்சுவையின் மூலம் கருத்துக்களை மக்களுக்கு இனிய முறையில் எளிய முறையில் உணர்த்தினார். மேலும் பலர் அந்தத் துறையில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றாலும் அதைப் பார்க்கிறபோது கலைவாணருடைய நினைவுதான் நமக்கு வருகிறது. அவருடைய மற்றச் செல்வங்கள் என்ன ஆயின என்பது நமக்குத் தெரியும்.

தமிழர்கள் வாழ்விலும் தாழ்விலும், வெற்றியிலும் தோல்வியிலும் கலையோடு நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள். பண்பு முழுவதும் கலை மூலம் உணர்த்தியவர்கள் தமிழர்கள்.

கலைத்துறையில் தமிழகம் எப்போதும் முன்னணியில் இருந்திருக்கிறது. இசைத்துறையிலும், நாடகத் துறையிலும், இலக்கியத் துறையிலும் - எந்தத் துறையானாலும் தமிழகம் முன்னணியில் இருந்திருக்கிறது.

கலைவாணர் போன்றவர்களால் மேலும் வளர்ந்திருக்கிறது.

இவ்வளவு வறுமைக்கு இடையிலும் இந்தக் கலைத்துறை வளர்ந்திருக்கும் போது, உள்ளபடியே செழிப்பாக இருந்திருக்குமானால் எப்படி (இக்கலைத் துறை) வளர்ந்திருக்குமோ என்று ஐயப்பாடு எழுகிறது.

பிற மாநிலத்தில் உள்ளவர்கள் நம்முடைய கலைத் துறையை மிகவும் பாராட்டுகிறார்கள்.

நான் தூரக் கிழக்கு நாடுகளுக்குச் சென்ற போது கம்போடியாவில் ஒரு நடனக் காட்சியைப் பார்த்தேன். அதைப் பார்க்க வந்திருந்த அமெரிக்க நாட்டுச் செல்வக் குடும்பத்தில் பிறந்த பெண்கள் மேடையில் ஆடியவர்களைப் பார்த்து, அவர்களைப் போலவே கைவிரல்களை அசைத்தார்கள்.

நான் அவர்களிடம், "எங்கள் தமிழ்நாட்டுக்கு வந்து பாருங்கள். அங்கே கண்களாலும், கைகளாலும் கலையை உணர்த்தக்கூடியவர்கள் இருக்கிறார்கள்." என்று கூறினேன்.

ஆனால், இங்கே கலைத்துறையில் இருப்பவர்கள் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் வறுமையில் தள்ளப்பட்டு வருகிறார்கள். மீதி உள்ள பத்துப் பேரில் ஒருவர்-இருவர் தான் முன்னணியில் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் கலைவாணர். அதனால்தான் இறந்த பிறகும் அவர் புகழப்படுகிறார்.

'நெல்மணிகள் முற்றியதும் கதிர் சாய்ந்து, எங்களை எடுத்துச் செல்லுங்கள்'—என்று கூறுவதுபோலக் கலைவாணர், வாரி வாரி வழங்கினார் ; பணத்தை மட்டுமல்ல ; நல்ல கருத்துக்களையும் வழங்கினார்.

பிறருடைய கலை வளர்ந்து இருப்பதைப் பார்த்துப் பாராட்டுகிற பண்பு அவருக்கு உண்டு.

பொதுப்பணியிலும் கலைவாணர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டு தம்மால் முடிந்ததைச் செய்திருக்கிறார்.

எனக்குத் தெரிந்த வரையில் முதன் முதலில் ரஷிய நாட்டுக்குப் போய் வந்த கலைஞர் என்.எஸ்.கே. தான்.

அவருடைய 'கிந்தனார் காலட்சேபம்' எல்லாருக்கும் பிடித்தமானது.

தம்பி கருணாநிதி இங்கே இரண்டொரு தினங்களுக்கு முன் பேசியபோது குறிப்பிட்டதைப் போல, கலைவாணர் நகைச்சுவைக் காட்சிகளை ஒன்று சேர்த்து ஒரே படமாக எடுப்பது நல்லது.

கலை காலத்தை வெல்வது.

அவருடைய நகைச்சுவை இப்போதும் ஏற்றுக் கொள்ளத் தக்க அளவுக்கு இருக்கிறது.

கலைக்கல்லூரி அமைத்து, அவர் ஆசானாக இருந்து பணியாற்ற வேண்டியவர்.

அவருடைய இழப்பு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

## மக்கள் திலகம்
# எம். ஜி. இராமச்சந்திரன்

நமது கலைச் செல்வர்கள் கருணை உள்ளம் கொண்டவர்கள்.

இன்று அந்தக் கலைச் செல்வர்கள் வைரம் மின்னிட, தங்கம் ஒளிவிட, தந்தக் கட்டிலில் அமர்ந்து, வெள்ளி வட்டிலில் இனிப்புப் பண்டம் வைத்து உண்டு மகிழத் தக்க நிலை பெற்றவர்கள். எனினும் அவர்களில் எல்லாருமே இல்லாமை கொட்டுவதை, வறுமை வாட்டுவதை அனுபவித்து அறிந்தவர்கள். ஏழையின் இதயக் குமுறலை நன்கு தெரிந்தவர்கள். கருணை அவர்கள் உள்ளத்திலே நிச்சயம் சுரக்கத்தான் செய்யும் .....

நமது அருமருந்தன்ன நண்பர் எம். ஜி. இராமச்சந்திரன், மதுரையம்பதி கடை வீதியில் சென்று கை ஏந்தி நின்று பணமும் பண்டமும் கேட்டுப் பெற்று (1955-இல் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு) உதவினார் என்றோர் செய்தி கேட்டு—

இத்தகு இதயம் படைத்தவரை நண்பராகப் பெற்றிருக்கிறோமே, நமது கழகத்தினராகவும் கொண்டிருக்கிறோமே என்பதை எண்ணிப் பெருமைப் படுகிறேன்!

—: 18—12—'55 'திராவிட நாடு'

...தி. மு. கழகம் ஒரு தீயணைக்கும் படை! தீயணைக்கும் படை வேண்டியவர் வீடு, வேண்டாதவர் வீடு என்று

பார்த்துத் தீயணைப்ப தில்லை. யார் வீடாக இருந்தாலும் தீயணைக்கிறது. அதுபோலத் தீயவைவை (தீமையான வைகளை) அழிக்கத் தி. மு. கழகம் துடிதுடித்து வரும்.

அதனால்தான் சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து அந்த விஷயத்தில் அரசாங்கத்தை ஆதரிப்பதாகக் கூறினோம்.

எல்லையில் போரிடும் வீரர்களுக்கு நமது மதிப்பிற் குரிய புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். தான், 75000 (எழு பத்து அய்யாயிரம்) ரூபாய் முதன் முதலாகத் தந்தார்!

பேரேட்டிலும் 'பிள்ளையார் சுழி' போட்டது நாம் தான்!

[—: 26—10—'62 – இல் திருச்சியில் நடந்த திரு. மு. கருணாநிதிக்கு அளித்த வர வேற்புக் கூட்டத்தில்)

* * *

......தி. மு, கழக ஆண்களும் பெண்களும், தங்களது முழு வலிவையும் — அது எவ்வளவு சிறிதாகவும் சாதா ரணமானதாகவும் இருந்தாலும் — போர் முயற்சிக்கு வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சனநாயகக் கொடியை உயர்த்திப் பிடித்துக் கொண் டிருப்போரின் நலன்களைக் காக்க, மதிப்பிற்குரிய கட்சித் தோழரான புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் ரூ. 75,000 கொடுத்திருப்பதை அறிந்து மகிழ்ந்தேன். மற்றவர்களும் இந்த உன்னதமான உதாரணத்தையே பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[—. 25—10—'67 - அறிக்கை.]

## அமெரிக்க கான்சல் - ஜெனரல்
# டாக்டர். ஆல்பர்ட். டி. பிராங்கிளின்

[சென்னை, இராயப்பேட்டை, ஒய். எம். சி. ஏ. திடலில், அமெரிக்கத் தூதரகம் ஜெமினி விண்வெளிக் கப்பல் கண்காட்சி ஒன்றை நடத்திற்று. அதன் திறப்பு விழாவில், தமக்கு முன்னர்த் துவக்க உரை யாற்றிய அமெரிக்க கான்சல் - ஜெனரல். டாக்டர் ஆல்பர்ட் - டி. பிராங்ளின் அவர்களைப் பாராட்டி அறிஞர் அண்ணா மொழிந்த உரை :-]—

இங்கே பேசிய அமெரிக்க கான்சல் - ஜெனரல் (டாக்டர் ஆல்பர்ட் - டி. பிராங்கிளின்) அமெரிக்க மக்களின் தொடர்ந்த சாதனைகளைப் பற்றி விளக்கிப் பேசினார்.

ஆனால், அவர் செய்த எல்லாச் சாதனைகளையும் விடச் சிறந்த சாதனை, இன்று நல்ல தமிழில் அவர் இங்கே பேசியது !

இது, அமெரிக்க மக்கள் கையாண்டு வரும் பண்பாட்டைக் காட்டுவது.

'தமிழ் நாட்டில் பணி யாற்றுவது,'—என்று வந்து விட்ட பிறகு, அந்த மக்களின் இதயத்தைத் தொட வேண்டுமானால், அவர்களுடைய சொந்த மொழியான தமிழில்தான் தொடர்பு கொள்வது' என்பது அமெரிக்க

மக்களின் எண்ணத்தின் பெருந்தன்மையையே காட்டுவது!

*தமிழ் மொழியின் பெருமைக்கும் உறுதி தரும் செயல் இது!*

*தமிழ் மொழி, இருந்த இடத்தில் இருந்து கொண்டே உலகத்தின் பல இடங்களையும் வென்று கொண்டே வருகிறது!*

நாம் ஆங்கிலத்தைப் பேசும் போது அத்தகையதல்ல. ஆங்கிலம் நம்மை ஆண்டவர்கள் புகுத்திய மொழியே தவிர, நாம் அந்த நாட்களில் விரும்பி ஏற்றுக் கொண்ட மொழியல்ல.

நான் ஆங்கிலம் பேசுவதிலும், அவர் தமிழ் பேசுவதிலும் வித்தியாசம் இருக்கிறது! தமிழ் அவரை ஆட்கொண்டு விட்டது!

பொதுவாக, வெளி நாட்டார், தமிழில் உள்ள சிறப்பு எழுத்தான 'ழ'கரத்தைச் சரியாக உச்சரிக்க மாட்டார்கள். இவர் (அமெரிக்க கான்சல் - ஜெனரல்) எப்படி உச்சரிக்கிறார் என்று கூர்ந்து கவனித்தேன். 'ழ' - வரும் இடங்களில் எல்லாம் இவர் தட்டுத் தடுமாற்றம் இன்றிச் சரியாக உச்சரித்தார்!

'ழ' – எழுத்துக்கு அந்தச் சிறப்பு வரக் காரணம், அதன் உச்சரிப்பில் உள்ள குழைவுதான். தமிழர்கள் குழைவில் பற்றுக் கொண்டவர்கள். மற்றவர்களுடன் இணைந்து பழகுவதில்—தோழமையுடன் இருக்க வேண்டும் என்பதில்—தமிழுக்கு உள்ள ஆசையை அது ('ழ'கரத்தில் பொதிந்துள்ள குழைவு) வெளிப்படுத்துகிறது.

பண்பு - குறித்த சொற்களில் எல்லாம் 'ழ'கரம் இருக்கிறது!

'ழ' - சுவையானது! பழத்திலும் 'ழ' கரந்தான் இருக்கிறது. விவசாய முறைக் கோளாறுகளால் சில

பழங்களில் சுவை குறைந்தாலும், சொல்லில் சுவை குறைய வில்லை.

அப்படிச் சுவை குன்ருமல் தமிழில் அவர் (டாக்டர் ஆல்பர்ட் டி. பிராங்கிளின்) பேசியமைக்காக அவருக்கு என் தனிப் பாராட்டுதலைத் தெரிவிக்கிறேன்.